Registered as Newspaper


# உதயன் சஞ்சீவி

சுடர் : 36
கதிர் : 267 | ஞாயிற்றுக்கிழமை | ஆவணி 6 ஆம் நாள்
22 ஓகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 24 (12+8+IV)
விலை : ரூ.40

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111





# நாட்டின் நிலை மிகவும் மோசம்

## பொறுப்புணருங்கள் என மக்களிடம் இராணுவத் தளபதி கோரிக்கை

கொழும்பு, ஓகஸ்ட் 22

இலங்கையில் தற்போது நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. கொரோனாப் பரவல் தீவிரமடைந்துள்ளது. மக்கள் பாதுகாப்பாக வீட்டில் இருக்கவேண்டும். தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறக்கூடாது. இவ்வாறு கொரோ னாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

07 ➤

## கொரோனா 3,884

கொழும்பு, ஓக. 22

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 3 ஆயிரத்து 884 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. அதன்படி நாட்

07 ➤

## முடக்கம் தொடர்ந்தால் அரச ஊழியர்களுடைய ஊதியம் குறைக்கப்படும்

*ஆளும்கட்சியின் நிலைப்பாடு இது இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 22

நாடு தொடர்ச்சியாக முடக்கப்பட்டால் அரச துறையினரின் மாதாந்த சம்பளம் குறைக்கப்படும். அரசிலுள்ள அனைத்து

07 ➤



## ஒரே நாளில் 198 பேர் சாவு

*7 ஆயிரத்தைத் தாண்டியது கொரோனாக் காவு*

கொழும்பு, ஓக. 22

இலங்கையில் கொரோனாவின் கோரப் பிடியில் சிக்கிப் பலியானோர் எண்ணிக்கை 7 ஆயிரத்தைக் கடந்துள்ளது. நேற்றுமுன்தினம் 198 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்

07 ➤

## எரிபொருள் பற்றாக்குறை தொடர்பில் கருத்து வெளியிட்ட ஊழியர் கைது!

கொழும்பு, ஓக. 22

எரிபொருள் பற்றாக்குறை குறித்து ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேசிய ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆனந்த பாலிதா நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் வெளிப்படுத்திய கருத்துத் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்யவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

07 ➤



## சுகாதார நடைமுறைகளுடன் பக்திபூர்வமாக நடைபெற்ற சந்நிதியான் தேர்த்திருவிழா

வடமராட்சி, ஓக.22

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்று சுகாதார நடைமுறைகளுடன் சிறப்பாக நடைபெற்றது.

காலை 9 மணியளவில் விசேட பூசை ஆராதனைகள் நடைபெற்று, முருகப் பெருமான் சிறிய தேரில் உள்

07 ➤

## அரச ஊழியர்களின் சம்பளத்தில் கைவைக்க இன்னும் முடிவில்லை

*தியாகம் செய்யுமாறு கோரிக்கையே விடுக்கப்பட்டுள்ளது என்கிறது அரசு*

கொழும்பு, ஓக. 22

'அரச ஊழியர்களின் சம்பளத்திலிருந்து ஒரு தொகையை கொரோனா நிதியத்துக்கு அறவிடுவதற்கு இன்னும் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும், அவ்வாறானதொரு தியாகத்தை செய்யுமாறு வேண்டுகோள் மட்டுமே

07 ➤

## மொரகொட நியமனத்தை ஏற்றுக்கொண்ட இந்தியா

*அமைச்சரவை அந்தஸ்துடன் இந்தியா பறக்கவுள்ளார்*

கொழும்பு, ஓக. 22

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்ட மிலிந்த மொரகொடவின் நியமனத்தை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது. அதை

07 ➤

## தார் செப்பனிடும் வாகனத்தில் தீ!

*துரித கதியில் செயற்பட்டு தீ உடன் கட்டுப்பாட்டுக்குள்*

யாழ்ப்பாணம், ஓக. 22

கைதடியில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி வருகைதந்த, வீதிகளுக்கு தார் செப்பனிடும் வாகனம் ஒன்று

07 ➤

## ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி வேண்டி நேற்று கறுப்புக்கொடிப் போராட்டம்

கொழும்பு, ஓக. 22

நாட்டில் கடந்த 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலுக்கு நீதிகோரி நாடு முழுவதும் நேற்றுக் கறுப்புக் கொடிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. உயிர்த்த ஞாயிறுதினத் தற்கொலைத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் குறித்து அரசு அதன்

07 ➤

## தவறான முடிவெடுத்து பெண்ணொருவர் சாவு

*பரிசோதனையில் அவருக்குக் கொவிட்*

வவுனியா, ஓக. 22

வவுனியாவில் தவறான முடிவெடுத்து பெண்ணொருவர் உயிரிழந்த நிலையில், அவருக்கு மேற்கொண்ட பரிசோதனையில் கொவிட்

07 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வீடு வாடகைக்கு

கொக்குவில் பகுதியில் வீடு வாடகைக்கு உண்டு.

**077 819 8782**

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகைதந்து மீட்டு அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவியரீதில் சிநேகபூர்வமான சேவை.

**AAA Gold Center**

**076 568 4346**

## உழவு இயந்திர உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு

வவுனியா நகரில் மலிவு விலையில் சகல விதமான உழவு இயந்திர உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: **077 5070309, 071 8683886**

## மணமகள் தேவை

கொழும்பை வதிவிடமான யாழிந்து கௌரவ குடும்பம் உதவி அத்தியட்சகராக பணியாற்றுபவர். வயது 32. செவ்வாய் குற்றமில்லாத வீட்டில் சூரி+செவ், பூர நட்சத்திரம். 5'5" உயரத்திற்குட்பட்ட 25-31 வயதுடைய உயர் கல்வித் தகைமையுடைய பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். வெளிநாடும் விரும் பத்தக்கது. MBBS, IT விரிவுரையாளர்களும் விண்ணப்பிக்கலாம்.

**Viber:0773599597** தொடர்புகொள்ளவும்

## ஆசிரியர் தேவை

**தரம் - 1 இல் கற்கும் மாணவனுக்கு வீட்டிற்கு வந்து கற்பித்துக்கொடுக்க** ஆசிரியர் தேவை.

**077 435 3119, 077 911 2953**

## காணி விற்பனை

மட்டுவில் கிழக்குப் பகுதியில்
பொற்கொல்லர் வீதியில்
6 பரப்புக்காணியில் அமைந்துள்ள
இரு வீடுகள் விற்பனைக்குண்டு.

**076 696 4669, 077 456 6069**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1988 ஆம் ஆண்டு பிறந்த UK சிற்றிசன் விமான நிலையத்தில் பணி புரியும் நற்குணமுடைய மணமகனுக்கு பொருத்தமான குணமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். புகைப்படம் தொலைபேசி இலக்கத்துடன் கீழ்க் காணும் Gmail. முகவரிக்கு இணைத்து வைக்கவும் .

**தொடர்பு :**
**sarannathan@yahoo.com**


# மன்னாரில் ஒரே நாளில் 29 பேருக்கு தொற்றுறுதி

தலைமன்னார், ஓக. 22

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனையில், 29 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.வினோதன் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தவர்களில் 16 பேருக்கும் சமூகத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 13 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சமூக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையில் முசலி பிரதேச செயலகத்தில் 4 பேருக்கும் நானாட்டான் பிரதேச சபை பிரிவில் 2 பேருக்கும், விடத்தல்தீவு மற்றும் தலைமன்னார் மாவட்ட மருத்துவமனைகளில் தலா 2 பேருக்கும் ஆடைத் தொழிற்சாலையில் 2 பேருக்கும் முருங்கனில் ஒருவருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (த-60)


# தேர்தல் ஆணைக்குழு

**“வாக்காளர்களே நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்றனர் ” வாக்களிப்பதற்காக தேருநர் (வாக்காளர்) இடாப்பில் பதிவு செய்து கொள்ளல் கட்டாயத் தேவைப்பாடொன்றாகும்**

**உங்களுக்குத் தெரியுமா?**

- நிலவும் **Covid – 19** தொற்று நோய் நிலைமை காரணமாக 2021 ஆம் ஆண்டில் வாக்காளர்களை கணக்கெடுப்பதற்கான படிவங்கள் வீடு வீடாகச் சென்று விநியோகிக்கப்பட மாட்டாது.
- உங்களுடைய பெயர் 2020 ஆம் ஆண்டிற்கான தேருநர் (வாக்களர்) இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருப்பின் 2021 ஆம் ஆண்டிற்கும் 2020 ஆம் ஆண்டிற்கான தேருநர் (வாக்காளர்) இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள முகவரியின் கீழ் பதிவு செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்படும். அதற்காக நீங்கள் எந்தவொரு படிவத்தையும் பூரணப்படுத்த வேண்டியதில்லையென்பதனைக் கவனத்திற்கொள்ளுங்கள்.
- 2021 தேருநர் (வாக்காளர்) இடாப்பு மீளாய்வின்போது நீக்கப்படும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள **‘அ’** பட்டியல்கள் வரைவு மற்றும் புதிதாக பெயர்கள் உட்சேர்க்கப்படும் **‘ஆ’** பட்டியல்கள் வரைவு என்பவற்றுடனான 2020 ஆம் ஆண்டிற்கான தேருநர் (வாக்காளர்) இடாப்பு 2021 ஆகஸ்ட் மாதம் 23 முதல் 2021 செப்ரெம்பர் மாதம் 03 ஆம் திகதி வரை அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்படும். (2021.07.22 ஆம் திகதியன்று கிராம அலுவலருக்கு கிடைக்கப்பெற்றிருந்த விண்ணப்பங்களின் உதவியுடன் இந்த பட்டியல்கள் வரைவுகள் தயாரிக்கப்பட்டிருப்பதாக கவனத்திற் கொள்ளுங்கள்)
- 2021 ஆம் ஆண்டிற்கான வாக்களர் ஒருவராக பதிவு செய்துகொள்வதற்காக உங்களுடைய பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா? என்பதனைப் பரீட்சித்துக் கொள்ளுங்கள். www.elections.gov.lk எனும் இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாகவும் இந்தத் தகவல்களை உங்களால் பரீட்சித்துக்கொள்ள முடியும்.
- உங்களுடைய பெயர் பரிந்துரை செய்யப்படவில்லையாயின் அதற்காக 2021/ER படிவத்தை பூர்த்திசெய்து 2021.09.07 ஆம் திகதிக்கு முன்னர் உங்களுடைய கிராம அலுவலரிடம் ஒப்படைக்கவும்.
- இந்த 2021/ER படிவத்தை உங்களுடைய கிராம அலுவலர் அலுவலகத்திலிருந்து அல்லது மாவட்ட தேர்தல்கள் அலுவலத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன் எமது இணையத்தளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்துகொள்ளவும் முடியும்.
- அத்துடன், உங்களுக்கு www.elections.gov.lk இணையத்தளத்தினூடாகவும் பதிவுசெய்து கொள்வதற்காக இணையவழி (ஒன்லைன்) ஊடாக விண்ணப்பிக்கவும் முடியும்.
- முறையான **‘அ’** பட்டியல்கள் (2020 ஆம் ஆண்டின் இடாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் இறப்பு, வதிவிட மாற்றம் போன்ற காரணங்களினால் 2021 ஆம் ஆண்டில் நீக்கப்படவுள்ள) மற்றும் **‘ஆ’** பட்டியல்கள் (18 வயது பூர்த்தியாதல், வதிவிட மாற்றம் மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்யப்படாமை போன்ற காரணங்களினால் 2021 ஆண்டிற்காக புதிதாக உட்சேர்க்கப்படவுள்ள) காட்சிப்படுத்தல் சம்பந்தமாக எதிர்காலத்தில் அறிவிக்கப்படும்.
- வரைவு **‘அ’** மற்றும் **‘ஆ’** பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் எதிர்வரும் முறையான **‘அ’** மற்றும் **‘ஆ’** பட்டியல்கள், உரிமைக் கோரிக்கைகள், ஆட்சேபனைகள், எழுத்தாவணப் பிழைகளை சரிசெய்தல், பன்மைப் பதிவுகள் என்பவற்றின் அடிப்படையில் திருத்தியமைக்கப்படலாமென அறியத் தருகின்றேன்.
- 2021 யூன் மாதம் 01 ஆம் திகதியன்று 18 வயதைப் பூர்த்திசெய்துள்ள (2003 மே 31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த) நபர்களுக்கு 2021 யூன் மாதம் 01 ஆம் திகதியன்று சாதாரண விதிவிட முகவரியில் 2021 ஆம் ஆண்டிற்கான வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள முடியும்.

தொ.பே.இல. : 011-2868441,42,43
மின்னஞ்சல் : info@elections.gov.lk
இணையத்தளம் : www.elections.gov.lk

தவிசாளர்
தேர்தல் ஆணைக்குழு
சரணமாவத்தை, இராஜகிரிய.
**2021.08.22**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்புமாநகரம் | 011-2369437 | அம்பாந்தோட்டை | 047-2256248 | குருநாகல் | 037-2222369 |
| கொழும்புமாவட்டம் | 011-2369438 | யாழ்ப்பாணம் | 021-2222655 | புத்தளம் | 032-2265246 |
| கம்பஹா | 033-2222047 | கிளிநொச்சி | 021-2285664 | அநுராதபுரம் | 025-2222551 |
| களுத்துறை | 034-2222266 | மன்னார் | 023-2222289 | பொலன்னறுவை | 027-2222012 |
| கண்டி | 081-2233187 | வவுனியா | 024-2222311 | பதுளை | 055-2222424 |
| மாத்தளை | 066-2222422 | முல்லைத்தீவு | 021-2061426 | மொணராகலை | 055-2276315 |
| நுவரெலியா | 052-2222325 | மட்டக்களப்பு | 065-2224312 | இரத்தினபுரி | 045-2222023 |
| காலி | 091-2234028 | அம்பாறை | 063-2224342 | கேகாலை | 035-2222561 |
| மாத்தறை | 041-2222305 | திருக்கோணமலை | 026-2222304 | | |


# சுயவிவசாய உற்பத்தியில் அனைவரும் ஈடுபடுங்கள்!

*பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு*

முல்லைத்தீவு, ஓக. 22

நாம் ஒவ்வொருவரும் சுயவிவசாய உற்பத்திகளை மேற்கொள்ளவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் என கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்துள்ளார். கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அமர்வு அண்மையில் நடைபெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் கொரோனாத் தொற்று வேகமாக அதிகரித்து வருகின்றது. எங்கள் நாட்டில் ஆரம்பத்தில் கொரோனாத் தொற்று பரவியபோது அரசு துணிகரமான முறையில் விடுதலைப்புலிகளை அழித்த எமக்கு கொரோனாவை அழிப்பது சுலபம் என்று அறிக்கை விட்டிருந்தது. ஆனால் இன்று நாளுக்கு நாள் கொரோனாவின் பாதிப்பும் இறப்பும் வேகமாக அதிகரித்து செல்கின்றது. இதன் தாக்கம் மிகவும் உச்சத்தை தொட்டிருக்கின்றது. எனவே, அரசை மாத்திரம் பிழை கூறாது ஒவ்வொரு தனிநபரும் சுயபாதுகாப்பை ஏற்படுத்துவதன் ஊடாக கொரோனாவிலிருந்து பாதுகாப்புப் பெறமுடியும். என்றார். (த-19)


## விநியோகஸ்தர்கள் தேவை!

**வலுவான நிதி மற்றும் சிறந்த செயல்பாட்டு பின்னணி கொண்ட தொழில்முறை விநியோகஸ்தர்கள், வவுனியா மற்றும் மன்னாரில் உள்ள CHINT ELECTRIC தயாரிப்புகளின் விற்பனை மற்றும் விநியோகத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரின் பதவிக்கு விண்ணப்பிக்க அழைக்கப்படுகிறார்கள்.**

ஆர்வம் உள்ளதா? தொடர்புகளுக்கு!

Alex : 0775 813 886
Muneer : 0777 138 847
Office : 0117 021 611
Email : info@chintenergy.lk

CHINT ELECTRIC

## DISTRIBUTORS WANTED!

**Professional Distributors with strong financial standing and excellent operational background are invited to apply for the position of an authorized distributor for the sale and distribution of CHINT ELECTRIC products in Vavuniya & Mannar.**

Interested? Contact us!

Alex : 0775 813 886
Muneer : 0777 138 847
Office : 0117 021 611
Email : info@chintenergy.lk

CHINT ELECTRIC


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘லிட்ரோ’ சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்படாது!

## தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படும் என்கிறார் அமைச்சர் பந்துல



**கொழும்பு, ஓக.22**
**‘லிட்ரோ’ சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படாது என்பதுடன் எவ்வித தட்டுப்பாடுமின்றி எரிவாயு விநியோகிக்கப்படும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது, நாட்டில் ‘லிட்ரோ’ சமையல் எரிவாயுவுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே, விலை அதிகரிப்பு எதுவும் இடம்பெறவுள்ளதா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு

“லிட்ரோ நிறுவனமானது, அரசின் நிவாரணத் திட்டத்தின் அடிப்படையில்தான் எரிவாயு விநியோகம் செய்கின்றது. விலை அதிகரிப்புக்கு அனுமதி வழங்குமாறு இரண்டு எரிவாயு நிறுவனங்களும் ஆறு மாதங்களாகவே நுகர்வோர் அதிகார சபையிடம் கோரிக்கைகளை விடுத்து வந்தன. உலக சந்தையில் எரிவாயுவின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. அதிக விலைக்கு வாங்கிவந்து குறைந்த விலைக்கு விநியோகிக்க முடியாது என்பதாலேயே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

அரச நிறுவனமான லிட்ரோ நஷ்டத்தையும் தாங்கிக் கொண்டு, நிவாரண விலைக்கு எரிவாயு விநியோகம் செய்தது. இதனால் அந்த நிறுவனத்தின் சொத்து இருப்பும் குறைந்துள்ளது. எனினும், மக்கள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதால் எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு குறித்த நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

அத்துடன், எவ்வித தட்டுப்பாடும் இன்றி எரிவாயு விநியோகிக்கப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

எனவே, வீண் அச்சம் தேவையில்லை. தேவையானளவு எரிவாயு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

‘லாப் கேஸ்’ நிறுவனம் கொள்வனவு செய்துள்ள எரிவாயு வரவில்லை. அதனால்தான் சிறு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது-என்றார். (எ-44)







### மஞ்சத்தில் வீற்றிருந்து காத்திட வா முருகா...!

நல்லூரின் நடுவே நயமாக வீற்றிருந்து
நல்லாட்சி செய்பவரே நல்லூர்- கந்தனே
நாமின்று வீடுகளிலே முடங்கியே உனை
நாவாரப்பாடி மனதாலே வணங்குகின்றோம்
நாட்டைக் காத்திடுவோம் நல்வாழ்வருள்வாயே..

**தெல்லியூர் தேவி.**

### ஒளியாய் வருவாய்....

ஒளி மஞ்சந்தனிலே ஒளியாக வருவாய்
உன்னருகில் இரு மாதர் புடைசூழ அருள்வாய்
தளிர்க்கரம் ஈராறால் தாயாக அணைத்தே
தங்க நல்லூர்க் கோட்டத்திலே தனியழகாய் நிற்பாய்
துளிதுளியாய்த் தேன்சிந்தும் தூயதமிழ்ப் பாடல்
தோகையனே உன் பதத்தைத் திருப்புகழின் தேடல்
அளிமொய்க்கும் தாரானே அலங்காரக் கந்தா!
அவனியிலே எம்மை நீயாள வேண்டும்.

**தேவி.கணேஸ், ஆனைப்பந்தி**



## மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஓக.22
நாட்டின் பல பகுதிகளில் இன்று இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய, ஊவா, வடக்கு, வட மத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியமுள்ளது என்று திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுமெனவும் இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் அனர்த்தங்களை தவிர்த்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (எ-இ)

## திறக்கப்பட்ட தபாலகங்கள்

கொழும்பு, ஓக.22
விரைவுத் தபாலில் அனுப்பப்படும் அனைத்து பொருள்கள் மற்றும் அரச வைத்தியசாலைகள் ஊடாக வழங்கப்பட்டுள்ள மருந்துப் பொருள்கள் அனைத்தையும் விநியோகிப்பதற்காக நேற்று தபால் மற்றும் உப தபால் அலுவலகங்கள் திறக்கப்பட்டிருந்தன.

தபால் விநியோகம் செயற்படுத்தப்படாத அலுவலகங்கள் மாத்திரம் மூடப்பட்டிருக்கும் என பிரதித் தபால்மா அதிபர் துசித்த ஹுலங்கமுவ தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய வர்த்தக கடிதங்களை கையளிக்க வேண்டுமாயின் 071 8 123 906 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக மத்திய தபால் பரிமாற்றகத்தின் அதிகாரிகளை தொடர்புகொள்ள முடியும் என்றும் தபால்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# பொருளாதாரம் வீழ்ச்சியடையும்

## கப்ரால் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.22
கொவிட் தாக்கத்தை கருத்தில் கொண்டு நாட்டை தொடர்ச்சியாக முடக்கி வைக்க முடியாது. நாடு விரைவாக வழமை நிலைக்கு திரும்ப வேண்டும். இல்லாவிடின் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்படும்.

இவ்வாறு நிதி மூலதனச்சந்தை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு [illegible] போதே அவர் [illegible] தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கொவிட் தாக்கத்தைக் கருத்திற்கொண்டு ஊரடங்குச் சட்டம் நாடு தழுவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சுகாதார காரணிகளை கருத்தில் கொண்டு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அதனால் ஏற்படும் பொருளாதார தாக்கம் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஏனெனில் பொருளாதார பாதிப்பை நாட்டு மக்கள் அனைவரும் ஏதாவதொரு வழியில் எதிர்க்கொள்ள நேரிடும். [illegible] கட்டுப்படுத்தி நாட்டு [illegible] சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது.

பொருளாதாரம் மற்றும் சுகாதாரம் இவ்விரு துறைகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். பல்வேறு தரப்பினரது கோரிக்கைக்கு அமைய ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் நோக்கம் கிடையாது. ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டவுடன் கடுமையான முறையில் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படும். அதற்கான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நன்றி சொல்ல வார்த்தையில்லை

**நா**ட்டில் கொரோனா பரவல் வீரியம் பெற்றிருக்கும் நிலையில் பல்வேறு அழுத்தங்களுக்குப் பின்னர் கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு பொது முடக்கம் ஒன்றை அறிவித்திருக்கின்றது. பொது முடக்க அறிவிப்பைத் தொடர்ந்து அரசிடம் இருந்து வெளியாகும் அறிவிப்புக்கள் பொது முடக்கத்தின் நோக்கத்தைச் சிதைப்பதாகவே இருக்கின்றன.

ஆகக் குறைந்தது 3 வாரங்கள் நாட்டை முடக்க வேண்டும் என்பதே சுகாதாரத் துறை சார்ந்தவர்கள், கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் முன்களச் செயற்பாட்டாளர்களின் கோரிக்கை. கொரோனாத் தொற்று வீரியம் பெற ஆரம்பித்ததில் இருந்து அவர்கள் இதை வலியுறுத்தி வந்தனர். ஆனால் அரசு அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இப்போது நாடு முழுவதும் கொரோனா வைரஸ் வியாபித்திருக்கும் நிலையில், பொது முடக்கத்தை அறிவித்திருக்கின்றது.


நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலையில், பொதுமக்களின் நடமாட்டம் முற்றுமுழுதாகக் கட்டுப்படுத்தப்பட்டாலே, வைரஸ் பரவலின் சங்கிலியை உடைக்க முடியும். அதுவும் ஆகக் குறைந்தது இரு வாரங்களுக்கேனும் பொதுமக்களின் நடமாட்டங்கள் முற்றிலுமாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

நாடு தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிக்குள் பொது முடக்கம் ஒன்றுக்குச் செல்வது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். தவிர்க்க முடியாத நிலையில், பொது முடக்கம் ஒன்றுக்குச் செல்ல நேர்ந்தால் அதைச் சரிவர நடைமுறைப்படுத்துவது அவசியம். அதைச் சரியாக நடைமுறைப்படுத்தாவிட்டால், நாடு பொருளாதார நெருக்கடிக்குள்ளும், கொரோனா வைரஸ் பிடிக்குள்ளும் சிக்கிக் கொள்ளும். அதனால் அடிக்கொரு தடவை முடக்கத்துக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படலாம்.

கோத்தாபய ராஜபக்ச அரசு இப்போது பொதுமுடக்கத்தை அறிவித்த கையோடு, முடக்க காலத்தில் நடமாடக் கூடியோரின் நீண்டதொரு பட்டியலையும் விடுத்திருக்கின்றது. அத்தியாவசிய சேவை வழங்குநர்கள் தொடக்கம் அன்றாடம் கூலி வேலைக்கு செல்பவர்கள் வரை இந்தப்பட்டியல் மூலம் முடக்க காலத்தில் எல்லோரும் வீதிக்கு வருவதற்கான வாசல்களை அகலத் திறந்திருக்கிறது அரசு. எனவே தான் இந்தப் பொதுமுடக்கம் அழுத்தங்களைக் கொடுப்போரின் வாயை அடைப்பதற்காக பெயருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்று எண்ணத் தோன்றுகின்றது. அல்லது பொதுமுடக்கத்தால் பயனில்லை என்று வீம்புக்கு நிரூபிப்பதற்காக இப்படி சகலரையும் வீதியில் இறங்க வைத்து, கொரோனா கும்மியடித்தபடி கொத்தணிகளை உருவாக்க ஏதுவான சூழலை அரசாங்கமே ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறதோ என்னவோ.

வீட்டில் இருந்து ஒருவர் வெளியேறலாம், தொழில் அடையாள அட்டையைப் பயன்படுத்தி நடமாடலாம் என்ற நடைமுறைகள், நடைமுறையில் பல சிக்கல்களை ஏற்படுத்தும். பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்ட நோக்கத்தைச் சிதறடிக்கும். சுகாதாரத் துறையினர் தவிர்ந்த ஏனைய அனைவரது நடமாட்டங்களையும் கட்டுப்படுத்துவதற்கு ஊடாகவே கருதும் இலக்கை எட்டிப்பிடிக்க முடியும்.

கோத்தாபய ராஜபக்ச அரசின் சில நடவடிக்கைகளும் கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு முக்கிய காரணம் என்பதை மறுக்க முடியாது. தற்போதும் சுகாதாரத் துறையினரின் கோரிக்கையின் விஞ்ஞானபூர்வ நியாயத்தை மறுத்து, வேண்டா வெறுப்பாக கட்டாயத்தின் பேரில் ஒரு பெயரளவிலான பொது முடக்கத்தை காலம் கடந்தநிலையில் அறிவிப்பது கூட கொரோனாவின் பரவுகைக்கே வழிசமைக்கும். அதிலும் முடக்கம் என்ற லேபிளை ஒட்டிவிட்டு சகலரையும் நடமாட அனுமதிப்பதென்பது, “எல்லோரும் கொரோனாவோடு வாழுங்கள்” என்பது இன்னும் முன்னேற்றமடைந்து “ எல்லோரும் கொரோனாவோடு சாவுங்கள்” என்று அரசாங்கம் கட்டளை இடுவது போலவே தோன்றுகின்றது. கொரோனாவுக்கு மட்டும் பேசும் சக்தி இருக்குமாயின் தன்னை வாழ வைக்கும் தெய்வங்களை கோத்தாபய அரசாங்கத்துக்கு பலமுறை நன்றி சொல்லி இருக்கும் என்பது மட்டும் திண்ணம்.




# ஒரு வார முடக்கத்தால் எந்தப் பயனும் கிட்டாது!

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.22**

**சர்வாதிகார கொள்கையுடைய அரசுக்கு நாட்டு மக்கள் தகுந்த பாடம் புகட்டியுள்ளார்கள். மக்களாட்சியின் பலத்தை ஜனாதிபதி விளங்கிக் கொள்ள வேண்டும். ஒருவார காலத்திற்கு மாத்திரம் நாட்டை முடக்குவதால் எவ்வித பயனும் ஏற்படாது.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கொரோனாத் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. குறைந்தபட்சம் மூன்று வாரத்துக்காவது நாட்டை முழுமையாக முடக்க வேண்டும். போரை வெற்றி கொண்டதை போன்று கொரோனா வைரஸ் தாக்கத்தையும் வெற்றிகொள்ளலாம் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு ஜனாதிபதி மற்றும் அவர் தலைமையிலான அரசு செயற்பட்டதால் இன்று நாட்டு மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார்கள்.

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை, மற்றும் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கை தொடர்பில் முரண்பட்ட தரப்படுத்தல் காணப்படுகிறது. அரசு வழங்கும் தரவுக்கும், பிரதேச சுகாதார பணிப்பாளர் வழங்கும் தரவுக்கும் இடையில் பெரும் வேறுபாடு காணப்படுகிறது. இப்போது 9 நாள்கள் நாட்டை முடக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால் அத்தியாவசிய சேவைகள் வழமைபோன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருவாரத்துக்கு நாட்டை முடக்குவதால் எந்தப் பயனும் கிட்டாது. பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கையும் குறைவடையாது. சுகாதார வழிமுறைக்கு அமைய மூன்று வார காலத்துக்கு நாட்டை முடக்குங்கள் என்றே சுகாதார தரப்பினர்கள் கூறுகின்றனர். என்றார். (எ-இ)

## ஒரு தொகுதி ஒட்சிசன் இலங்கை வந்தடைந்தது

கொழும்பு, ஓக.22

இந்தியாவில் இருந்து முதல் தொகுதி ஒட்சிசன் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்று இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இலங்கை மற்றும் இந்திய கடற்படைகளுக்கு சொந்தமான இரண்டு கப்பல்கள், இந்தியாவில் இருந்து கொழும்பு நோக்கி பயணத்தை ஆரம்பித்திருந்தன. அவற்றில் சென்னையில் இருந்து 40 தொன் மருத்துவ ஒட்சிசனை ஏற்றிவந்த கப்பல், நேற்றுமுன்தினம் இரவு இலங்கையை வந்தடைந்தது என்று இந்தியத் தூதரகம் தனது ருவிற்றர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

## அரசின் தாமதத்தாலேயே சுகாதார கட்டமைப்பு சரிவு

### ராஜித எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.22

அரசு கால தாமதமாகி தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்தமையால் சுகாதார கட்டமைப்புக்கள் தற்போது சரிவடைந்துள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

சிகிச்சையை வழங்குவதற்கான வசதிகள் இன்மையால், சிகிச்சை பெறாமலேயே பலர் உயிரிழந்துள்ளனர். இது இலங்கை வரலாற்றில் இதுவரைக்காலமும் இல்லாததொரு நிலைமை. இத்தகைய நிலைமையில், அன்டிஜென் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டாம் என பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளுக்கு உயர்மட்டத்திலிருந்து அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது. என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர் சம்பளத்தில் அரசு கைவைக்கக் கூடாது

## 2,000 ரூபாவை வைத்து என்ன செய்வது?

### பிரதான எதிர்க்கட்சி கேள்வி

**கொழும்பு, ஓக.22**

**அரச ஊழியர்களின் சம்பளத்தில் அரசு கைவைக்கக்கூடாது. வேண்டுமானால் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்திலிருந்து குறிப்பிட்ட தொகையை அறவிடலாம்.**

இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் மாநாடு அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அரச ஊழியர்களின் சம்பளத்திலிருந்து ஒரு தொகையை கொரோனா நிதியத்துக்கு அறவிட வேண்டும் என ஆளுங்கட்சித் தரப்பில் இருந்து யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அதை ஏற்க முடியாது. அரச ஊழியர்களின் சம்பளத்தில் அரசு கைவைக்கக்கூடாது. 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பின் பின்னர் அரச ஊழியர்களுக்கு இன்னும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை. ஆனால் செலவுகள் உச்சம் தொட்டுள்ளன.

எனவே, அரச ஊழியர்களிடமிருந்து அறவீடு செய்வது பொருத்தமாக அமையாது. வேண்டுமென்றால் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்திலிருந்து அறவீடுகளை செய்துகொள்ளலாம். இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் தனது சகாக்களுக்கு வரி விலக்களித்தது. இதனால் அரசுக்கு கோடிக் கணக்கில் இழப்பு ஏற்பட்டது. எல்லையின்றி பணமும் அச்சிடப்பட்டது. இதனால்தான் பணவீக்கம், பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது என்பதை மறந்துவிடக்கூடாது.

5 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு பெரும் செலவு ஏற்பட்டதாக ஜனாதிபதி தமது உரையில் குறிப்பிட்டார். ஆனால் 2 மற்றும் 3 ஆம் சுற்றுகளின்போது 5 ஆயிரம் ரூபா அனைவருக்கும் கிடைக்கவில்லை. மொட்டுக் கட்சியின் பிரதேச அரசியல்வாதிகள் இதில் அரசியலே நடத்தினர். அதேபோல தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப்பொருள்கள் வழங்கப்படுகின்றன என்று குறிப்பிடப்படுகின்றது. ஆனால் அவ்வாறு வழங்கப்படுவதில்லை . தற்போது 2 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனக்கூறப்படுகின்றது. அதனை வைத்து என்ன செய்ய முடியும்? எனவே, ஜனாதிபதியின் உரையிலுள்ள உண்மைத் தன்மையை ஆளுங்கட்சியினரே உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.-என்றார். (எ-44)



# ஊரடங்கில் உலாவிய இருவருக்கு தொற்று

## வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் சோதனையில் சிக்கினர்

வவுனியா, ஓக. 22

ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில், வவுனியா நகரில் உலாவித் திரிந்தனர் என்று கூறப்படும் நபர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் சோதனையின்போது இருவருக்குத் தொற்றுள்ளமை தெரியவந்தது. அதையடுத்து அவர்கள் இருவரும் இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றது. வவுனியா நகரின் முக்கிய பகுதிகளில் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸாரின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது ஏ9வீதி நீதிமன்றுக்கு அருகாமையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 2 பேருக்கு தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. இந்த நடவடிக்கைகளை மாவட்ட மேலதிக செயலர் தி.திரேஸ்குமார் பார்வையிட்டிருந்தார். குறித்த செயற்பாட்டை அனைத்துப் பகுதிகளுக்கும் விஸ்தரிப்பது தொடர்பிலும் ஆலோசனை வழங்கப்பட்டது. (து-110)


# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்னை மடியில் 27.10.1932

ஆண்டவன் அடியில் 26.07.2021

கடந்த 26.07.2021 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர்

## இராசம்மா பேரம்பலம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.08.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 5.00 மணியளவிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் (24.08.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவிலும் அன்னாரின் மண்கும்பான் இல்லத்தில் நடைபெற உள்ளதை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

எமது துயரத்தில் நேரில் பங்குகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக அனைவரையும் அழைக்க முடியாமையை மிகுந்த மனவேதனையுடன் அறியத்தருகின்றோம்.

குடும்பத்தினர்
(ஸ்ரீ லலிதா நகை மாளிகை)
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி

5ஆம் வட்டாரம், மண்கும்பான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரடங்கு வேளையிலும் அரசுக்கு எதிராகப் போர்

கொழும்பு, ஓக. 22
'ஜனாதிபதி! திமிர் வேண்டாம்!', 'மறைக்கப்பட்ட பிரபலம் யார்?' போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவாறு நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்துக்கு அருகில் நேற்றுக் காலை கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கத்தோலிக்க ஆயர்கள், பிரதேச மக்கள், உயிர்த்த ஞாயிறு தினமன்று கட்டுவாப்பிட்டி தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் உள்ளடங்கலாகப் பலர் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்டவர்கள், உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலைத் தாக்குதல் தொடர்பான முழுமையான விசாரணைகளைப் பூர்த்தி செய்யுமாறும், இது தொடர்பான கத்தோலிக்க திருச்சபையின் கடிதத்துக்குத் தெளிவாகப் பதிலளிக்குமாறும் வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், தீப்பந்தங்கள் மற்றும் கறுப்புக் கொடிகளையும் ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்துரைக்கையில்,

'நீர்கொழும்பு மக்கள், சமூக மற்றும் சமாதான அமைப்பு, ஏப்ரல் 21 நியாயக் கோரிக்கைக்கான நிதியம் ஆகியன இணைந்து இந்தக் கறுப்புக் கொடி போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

கத்தோலிக்க திருச்சபை அரசுக்கு அனுப்பிய கடிதத்துக்கு, அரசு பொறுப்பற்ற வகையில் பதிலளித்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கத்தோலிக்க திருச்சபையின் கோரிக்கைக்கு முறையாகப் பதிலளிக்குமாறு வலியுறுத்தியுமே நாம் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கின்றோம்.

நாட்டில் மக்கள் உயிரிழப்பது தொடர்பிலும் காணாமல்போவது தொடர்பிலும் எவரும் கருத்திற் கொள்வதில்லை. கட்டுவாப்பிட்டிய, கொச்சிக்கடை, மட்டக்களப்பு ஆகிய தேவாலயங்களில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்கக் கத்தோலிக்க திருச்சபை மேற்கொண்டு வரும் முயற்சிகளை நாம் கைவிடப்போவதில்லை'. -என்றனர்.

(ம-22)

## பேக்கரி பொருள்கள் விலை அதிகரிப்பால் நெருக்கடி!

பேக்கரிப் பொருள்களின் விலை அதிகரிப்பால் நுகர்வோர் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள் என்று நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தத் தீர்மானத்தைக் கைவிட வேண்டும் என்று பேக்கரி உரிமையாளர் சங்கத்திடம் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில், பாண் போன்ற பேக்கரிப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டால் நுகர்வோர் கடும் நெருக்கடிகளை எதிர் கொள்வார்கள் என்று அந்த அமைப்பின் ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(எ-இ)

## கண்ணீர் அஞ்சலி



பொருளியல்துறையின் மாணவி

**செல்வி மகேந்திரம் நுசாந்தினி**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**தலைவர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர்கள்**
**இளம் பொருளியலாளர் மன்றம்**
**பொருளியல்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## கண்ணீர் அஞ்சலி



தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா பாடநெறியின் யாழ்ப்பாண பிராந்திய நிலைய விரிவுரையாளர்

**திருமதி சத்தியா ரஞ்சித்**

அவர்களின் தாயார்

**ராஜேஸ்வரி சிவபாதம்**

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**யாழ்ப்பாண பிராந்திய கல்வி டிப்ளோமா பாடநொறியின் ஓய்வுபெற்ற இணைப்பாளர், இணைப்பாளர், விரிவுரையாளர்கள்.**

## தசாக கிருகயக்ஞ அழைப்பு



பிலவ வருஷம் ஆடி மாதம் 27ஆம் நாள் (13.08.2021) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் சோமசுந்தரசர்மா பாலாம்பிகைஅம்மா**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

22.08.2021 ஞாயிறு தசாகம் (கல்லெடுப்பு) முற்பகல் 10.00 மணி
23.08.2021 திங்கள் ஏகோதிஷ்டம் (மாசியம்) முற்பகல் 11.00 மணி
24.08.2021 செவ்வாய் சபிண்டிகரணம் முற்பகல் 11.00 மணி
25.08.2021 புதன் கிருகயக்கும் (சமாராதனை) நண்பகல் 12.00 மணி

தொடர்ந்து 25.08.2021 நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**சரவணபவனம்,**
**பிராமணத்தெரு,**
**தும்பளை, பருத்தித்துறை.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 25 • 10 • 1938



உதிர்வு 19 • 08 • 2021

**திலகவதி தேவி பஞ்சலிங்கம்**

மலேசியா Kuala Lumpur ஐப் பிறப்பிடமாகவும், யாழ். உரும்பிராய் தெற்கு, கொழும்பு வெள்ளவத்தை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திலகவதி தேவி பஞ்சலிங்கம் அவர்கள் 19-08-2021 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார், காலஞ்சென்ற வைத்திலிங்கம், ஸ்வர்ணபூஷணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையா, செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், பகீரதன், ஆனந்தி, வரதன், பகீரதி, காலஞ்சென்ற செந்தூரன், பிருந்தாபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், வினோதினி, கணேசநாதன், ராணி, ஜீவகுமார், சஞ்சி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சகுந்தலாதேவி, ராசையா, கமலாதேவி, அருளானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரதீபன், பிரதாயினி, மனுவித்யா, அபராஜிதன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், கோஃப்ரீ, ஜோஃப்ரென், மயூரன், கேசவன், பிரியங்கா, கஜன், ரிஷனா, ரினுஷா, ரிபீனா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், தனிஷ் பிரதீபன் அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை நாட்டு நிலமை காரணமாக குடும்பதினர் உடன் 20-8-2021 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் நடைபெற்றது.


தகவல் குடும்பத்தினர்
B[illegible]thi jeevakumar - 0772991236
K Jeevakumar - 0777583199

## மரண அறிவித்தல்

**மண்ணில்:05.04.1942** **விண்ணில்:21.08.2021**

**இராசையா நாகச்சந்திரா (சின்ராசா)**

**(இளைப்பாறிய தபால் தந்தி பிராந்திய பரிசோதகர் DIT)**



யாழ்ப்பாணம் மானிப்பாயை பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா நாகச்சந்திரா (சின்ராசா) அவர்கள் நேற்று (21.08.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்டிலிப்பாய் இராசையா உடையார், மானிப்பாய் தெற்கு தேவசௌந்தரம் (இரத்தினம்) தம்பதியரின் பாசமிகு புதல்வரும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், திருமதி பாலமோகினியின் (சாந்தா) அன்புக் கணவரும், அரவிந்தன், தயாநீ, கீர்த்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அறிவழகன், வாசுகி, கலைச்செல்வி ஆகியோரின் மாமனாரும், ஆரபி, இலக்கியா, அனந்தன், அஷ்வின், ஆதுஸன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், காலஞ்சென்றவர்களான சீத்தாதேவி (பபாக்கா), இந்திராதேவி (பபியக்கா) மற்றும் வில்லவராஜா, ராஜகுலதேவி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான முத்துராஜா, இராமநாதன், ஜெகநாதன் மற்றும் பாக்கியலீலா, பாலச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

**505, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழப்பாணம்.**

**தகவல் குடும்பத்தினர்**
**021 222 3037**
**077 300 0972**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### நாட்டின்...

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவிக்கையில்,

'இலங்கையில் கொரோனா பரவல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை இரவு முதல் 10 நாள்களுக்கு நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாள்களில் பொதுமக்கள் பாதுகாப்பாக வீட்டில் இருக்க வேண்டும்.

மக்கள் வீட்டை விட்டு வெளியேறக்கூடாது. தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறக்கூடாது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்ப்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகள், ஆடை, கட்டுமானத் தொழிலாளர்கள், விவசாயம், சுகாதாரப் பணியாளர்கள், மருந்துகள் மற்றும் ஊடகங்கள் மட்டுமே செயற்பட அனுமதிக்கப்படும். இருப்பினும் இந்தத் துறைகளில் குறைந்தளவு பணியாளர்கள் மாத்திரமே வேலைக்கு அழைக்கப்பட வேண்டும்.

பல்பொருள் அங்காடிகள், உணவக விநியோகங்கள் உட்பட மற்ற அனைத்து சேவைகளும் மூடப்பட்டிருக்கும். இந்த 10 நாள்களில் தடுப்பூசி போடுவதைத் தொடர சிறப்புக் கவனம் செலுத்தப்படும். இராணுவ குழுக்கள் உள்ளிட்ட நடமாடும் குழுக்கள், 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி போடுவதற்கு முன்னுரிமை அளிக்கும்.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதால், சுகாதாரத் துறையினர் பல்வேறு சிரமங்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர். இதனைக் கவனத்தில் கொண்டு அனைவரும் செயற்பட வேண்டும்' என்றார். (ம-22)

### முடக்கம்...

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் நிலைப்பாடு இதுவாகவே இருக்கின்றது இவ்வாறு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாடு முடக்கப்பட்டுள்ள 10 நாள்களில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அரசு 2 ஆயிரம் ரூபா வழங்கும். ஏற்கனவே நாடு ஒரு மாதத்துக்கு மேல் முடக்கப்பட்டபோது 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டிருந்தாலும், இந்த முறை நாடு 10 நாள்களுக்கு மட்டுமே முடக்கப்பட்டிருப்பதால் 2 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு 14 நாள்களுக்கு மேல் நீடிக்கப்படாது. 2 ஆயிரம் ரூபா அல்லது 5 ஆயிரம் ரூபா போதுமானதாக இருக்காது.

எனினும், இதற்கும் மேலாக சில நிதிகளை வழங்குவது தொடர்பில் அரசு சிந்திக்கும்.

அரசுக்கு தற்போது நிதிச் சிக்கல்கள் இருக்கின்றபோதிலும், பொதுமக்களின் நல்வாழ்வை அரசு கவனிக்கும். அரச மற்றும் தனியார் துறையினரின் சம்பளத்தின் ஒரு பகுதியை நன்கொடையாக வழங்குமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன்வைத்த யோசனை குறித்தும் அரசு சிந்திக்கும். இந்த முடக்கம் காரணமாக பலர் உணவை உண்ண மாட்டார்கள்.

எனவே, நிதி இருப்பவர்களிடம் இருந்து பெறப்பட்டு இல்லாதவர்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச துறைகள் இதற்கு பங்களிக்க வேண்டியிருக்கும். அத்தகைய தேவை இன்னும் எழவில்லை.

நாடு தொடர்ச்சியாக மூடப்பட்டால், நிதி குறைந்து வருவதால் அத்தகைய நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். அதற்கமைய அரச துறையினரின் மாதாந்த சம்பளம் குறைக்கப்படும். அமைச்சர் ரணதுங்க விடுத்த கோரிக்கைக்கு ஆளும் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் இணக்கமாக இருக்கின்றனர்' - என்றார். (ம-22)

### கொரோனா....

டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 85 ஆயிரத்து 696ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 580 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 23 ஆயிரத்து 390ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

### எரிபொருள்...

நாட்டில் தற்போது இருப்பிலுள்ள டீசல் 11 நாள்களுக்கும், பெற்றோல் 10 நாள்களுக்கும் மட்டுமே போதுமானது என்று ஊடகவியலாளர் சந்திப்பில் ஆனந்த பாலித தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

### ஒரேநாளில்...

களம் அறிவித்துள்ளது.

இதுவே இலங்கையில் இதுவரையில் ஒரே நாளில் அதிகளவானோர் உயிரிழந்த நாளாக அமைந்துள்ளது. இவற்றுடன் நாட்டில் பதிவான மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 183ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 117 ஆண்களும், 81 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள நாளாந்த கொரோனா மரணங்கள் குறித்த புள்ளிவிவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

### பக்திபூர்வமாக...

வீதியில் வலம் வந்தார்.

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் நாடுபூராகவும் ஊரடங்கு அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சுகாதார அமைச்சால் ஆலயங்களுக்கு என வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களோடு சிறப்பாக தேர்த்திருவிழா நடைபெற்றது. (ஐ-26)

### அரச....

விடுக்கப்பட்டுள்ளது' என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது, நாடு முடக்கப்படுமானால் அரச ஊழியர்களின் சம்பளத்திலிருந்து ஒரு தொகையை அறவிட வேண்டும் என ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனவே, அவ்வாறானதொரு தீர்மானத்தை அரசு எடுத்துள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'அவ்வாறானதொரு தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை. எனினும், நெருக்கடியான சூழல்களின்போது தியாகங்களை செய்யநேரிடும். உதாரணமாக தாய்லாந்தில் நிதி நெருக்கடி ஏற்பட்டபோது அந்நாட்டிலுள்ள ஆன்மிகத் தலைவர்கள், விகாரைகளில் இருந்த தங்கங்களை மத்திய வங்கியிடம் ஒப்படைத்து தியாகம் செய்தனர்.

அதேபோல வடக்கு, கிழக்கு போரின் போது நாடுகளும், தனி நபர்களும் நன்கொடைகளை வழங்கினர். 'நமக்காக நாம்' நிதியத்துக்கு நானும் எனது நாடாளுமன்ற உறுப்பினருக்கான சம்பளத்தொகையை வழங்கினேன். தற்போது கொவிட் நிதியத்துக்கு சம்பளத்தை வழங்கியுள்ளேன். மேலும் சில அரசியல் பிரமுகர்களும் தம்மால் முடிந்த பங்களிப்பை செய்துவருகின்றனர்.

எனவே, உதவி செய்யக்கூடிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடமிருந்த அந்த உதவியை எதிர்பார்க்கின்றோம். இதன்பிரகாரமே சம்பளத்தின் ஒரு தொகையை வழங்குமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க யோசனை முன்வைத்துள்ளார். பொது முடக்கத்தால் கடுமையாக பாதிக்கப்படும் மக்களுக்கு உதவி வழங்குவதற்காகவே குறித்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.' என்றார். (ம-44)

### மொரகொட...

யடுத்து அவர் புதுடில்லி பயணமாகவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக மிலிந்த மொரகொடவை நியமித்தார்.

அவருக்கு அமைச்சரவை அந்தஸ்து வழங்கப்படுகின்றது என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இந்த நியமனத்துக்கு இந்தியா வரவேற்புத் தெரிவிக்கவில்லை. மிலிந்த மொரகொடவுக்கு வழங்கப்பட்ட அமைச்சரவை அந்தஸ்து தொடர்பில் இருந்த முரண்பாடே அதற்குக் காரணம் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

தற்போது வெளிவிவகார அமைச்சராக ஜி.எல்.பீரிஸ் நியமிக்கப்பட்டிருக்கும் நிலையிலும், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச மேற்கொண்ட சில நகர்வுகளாலும், மிலிந்த மொரகொடவின் நியமனம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. அவர் அமைச்சரவை அந்தஸ்துடனேயே டில்லி பயணமாகவுள்ளார் என்று அறிய முடிகின்றது. தற்போது இலங்கை அரசு எதிர்கொண்டுள்ள பல்வேறு நெருக்கடிகளின் காரணமாக, இந்தியாவுடன் நெருங்கிச் செயற்பட இலங்கை அரசு ஆர்வம் காட்டுகின்றது என்று தெரிவிக்கப்படும் நிலையில், இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதே நேரம், மிலிந்த மொரகொட இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதற்கான இரண்டு ஆண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

### தவறான...

தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய கர்ப்பிணிப் பெண்ணொருவர் கிணற்றுக்குள் குதித்து தற்கொலைக்கு முயற்சித்துள்ளார். இதையடுத்து ஊரவர்கள் அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். எனினும், சிகிச்சை பயனளிக்காமல் அவர் உயிரிழந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் சோதனையில் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து அந்தப் பெண்ணுடன் தொடர்பில் இருந்தவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை குறித்த பெண்ணின் இறப்பில் சந்தேகம் உள்ளது என்று பெண்ணின் தாயார் முறைப்பாடு வழங்கியுள்ளார். இந்த முறைப்பாட்டின் மீதான மேலதிக விசாரணைகள் இடம் பெறவுள்ளன. (ம-18-110)

### ஈஸ்டர்...

பொறுப்புக்கூறலையும் கடமைகளையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றும், இல்லையேல் சர்வதேசத்தை நாடுவோம் என்றும் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்து வருகின்றார்.

அத்துடன் இந்தத் தாக்குதலுக்கான நீதியை வலியுறுத்தும் விதமாக வீடுகள், வர்த்தக நிலையங்கள், வணக்கஸ்தலங்கள் என்பவற்றில் நேற்று கறுப்புக் கொடி ஏற்றுமாறு கத்தோலிக்க திருச்சபை கேட்டுக்கொண்டிருந்தது. அதற்கமைய பொதுமக்கள் நேற்று வீடுகளிலும், வர்த்தக நிலையங்களிலும், வணக்கஸ்தலங்களிலும் கறுப்புக் கொடிகளை ஏற்றினர்.

இதேவேளை, 'உண்மையை மூடி மறைப்பது மாபெரும் அரசியல் சூழ்ச்சி, உண்மையைக் கண்டறிய ஒன்றிணைவோம்' என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகள் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தின் வாசற்பகுதியில் நேற்று தொங்கவிடப்பட்டிருந்தன.

தேவாலயத்தில் விசேட பிரார்த்தனையும் இடம்பெற்றது. நேற்று நடைபெற்ற இந்தக் கறுப்புக் கொடி போராட்டம் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விவகாரம் தொடர்பாக நாட்டு மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது என்று கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது. (ம-22)

### தார்...

நேற்று மாலை திடீரென தீ விபத்துக்கு உள்ளானது. இதையடுத்து யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் துரித கதியில் செயற்பட்டு தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க பகிரங்கம் நடால், பெடரர் 'அவுட்'

## அதிர்ச்சி மேல் அதிர்ச்சி

**வொஷிங்டன், ஓக. 22**

**இன்னும் சில நாள்களில் ஆரம்பமாகவுள்ள அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் இருந்து முன்னணி வீரர்களான நடால் மற்றும் பெடரர் இருவரும் விலகியுள்ளனர். இதனால் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் இவர்கள் இருவரும் பின்தள்ளப்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.**



அமெரிக்கப் பகிரங்கத் தொடர் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்தக் கிண்ணத்தைக் கைப்பற்றுவது எவர் என்பது தொடர்பில் வரலாற்றில் என்றும் இல்லாத அளவுக்கு எதிர்பார்ப்பு நிறைந்திருந்தது.

பகிரங்கத் தொடர்களைப் பொறுத்தவரை பெடரர், நடால், ஜோகோவிக் மூவரும் தலா 20 கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளனர். இந்த நிலையில் உடல் தகுதியின்மை காரணமாக அமெரிக்கப் பகிரங்கத்தில் இருந்து நடால், பெடரர் இருவரும் விலகியுள்ளனர். இதனால் தனிக்காட்டு ராஜா கணக்கில் அமெரிக்கப் பகிரங்கத்தை எதிர்கொள்கின்றார் ஜோகோவிக். அவர் இந்தத் தொடரில் சாதிக்கும் பட்சத்தில், 21 கிராண்ட்ஸ்லாம்களுடன் அரியணை ஏறுவார். (ம)



# ஒசாகா தோல்வி

டோக்கியோ, ஓக. 22

சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் காலிறுதிக்குத் தகுதி பெறாமல் வெளியேறினார் நட்சத்திர வீராங்கனையான ஒசாகா.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில், சர்வதேசத் தரப்படுத்தலில் இரண்டாவது இடத்தில் உள்ள வீராங்கனையான ஒசாகாவை எதிர்த்து தரப்படுத்தலில் முதல் 20 இடங்களுக்குள் இல்லாத வீராங்கனையான ஜில் டீச் மோதினார்.

மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதலாவது செற்றை 3:6 என்ற கணக்கில் இழந்தார் ஜில் டீச். எனினும் அடுத்த இரு செற்களையும் முறையே 6:3, 6:3 என்ற செற் கணக்கில் கைப்பற்றி வெற்றிபெற்றார். (ம)

# சேவாக்குக்குப் பந்துவீச அதிகம் அச்சப்பட்டேன்

## முரளிதரன் வெளிப்படை

புதுடில்லி, ஓக. 22

சேவாக்குக்குப் பந்துவீச அதிகம் பயப்பட்டேன். அத்துடன் லாராவும் பெரும் சிரமங்களை எனக்குக் கொடுத்தார். இவர்கள் இருவரையும் விட வேறு எவருக்கும் பந்துவீச நான் அதிகம் சிரமங்களை எதிர்கொண்டது கிடையாது - இவ்வாறு தெரிவித்தார் இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் முத்தையா முரளிதரன்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது காலகட்டத்தில் பிரையன் லாரா, சேவாக் ஆகியோருக்கு பந்து வீசுவதுதான் எனக்கு மிகவும் கடினமாக இருந்தது. எனக்கு எதிராக நிறைய ஆபத்தான வீரர்கள் விளையாடி இருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட் கூட நான் எப்படிப் பந்துவீசுவேன் என்பதைக் கணிக்க முடியாமல் தடுமாறுவார். அவர் ஒரே ஒரு முறை மட்டும் எங்களுக்கு எதிராக 3ஆவது வரிசையில் இறங்கி 150 ஓட்டங்களை எடுத்திருந்தார். ஆனால் மற்ற எல்லோரையும் காட்டிலும் சேவாக்கும், லாராவும் தான் எனக்கு அதிகமாகக் குடைச்சல் கொடுத்தவர்கள். இருவரும் நான் எப்படிப் பந்து வீசுவேன் என்பதை புரிந்து செயற்படுவார்கள்.

சேவாக்குக்குப் பந்து வீசும்போது நான் பயந்திருக்கிறேன். ஏனெனில் அச்சமின்றி விளையாடக்கூடிய ஒரு வீரர் சேவாக். டெஸ்ட் கிரிக்கெட்டில் 2 மணி நேரம் களத்தில் நின்றாலும் கூட 150 ஓட்டங்களைத் திரட்டி விடுவார். அன்றைய தினம் முதல் பந்தை சந்தித்தாலும் சரி, 98 அல்லது 99 ஓட்டங்களில் இருந்தாலும் சரி, தடுப்பாட்டத்தில் ஈடுபடும் எண்ணம் அவருக்கு இருக்காது - என்றார். (ம)





# ரி20 உலகக்கிண்ணத்தை ஆஸி. கைப்பற்ற வாய்ப்பு

## பொண்டிங் வெளிப்படை

கான்பெரா, ஓக. 22

ரி20 உலகக்கிண்ணத் தொடருக்காக அறிவிக்கப்பட்டுள்ள ஆஸ்திரேலிய அணி மிகத் திறமையானது. இந்த உலகக்கிண்ணத் தொடரை ஆஸ்திரேலியா கைப்பற்ற வாய்ப்பு அதிகம் - இவ்வாறு தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் பொண்டிங்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரி20 உலகக்கிண்ணத் தொடருக்கு சிறந்த ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு கிண்ணத்தைக் கைப்பற்றும் திறன் உள்ளது. ஜோஷ் இங்லிஸ் வாய்ப்பு பெற்றிருப்பதை பார்க்க அருமையாக உள்ளது. அவர் ஓட்டங்களைக் குவிக்கக்கூடியவர்.

ஒட்டுமொத்தமாக இது திறமையான வீரர்களைக் கொண்ட அணி என்று நான் நினைக்கிறேன். உலகக்கிண்ணத்தை ஆஸ்திரேலியா வெல்லும் - என்றார். (ம)

A/L 2021/22/23 CHEM-BIO
Home visit / English, Tamil medium
10 வருட MCQ விளக்கவுரை - Theory
CHEM - Singam 076 056 5786
MCQ Essay செய்வித்தல் (PP)
BIO - வித்தியா 077 665 5290

INDIVIDUAL CLASS
விரிவான விளக்கமான பேச்சு பயிற்சிகள் Parts of Speech, Active Passive, Reported Speeches Grade 7 - G.C.E O/L, A/L, பட்டதாரிகள் தொழில் புரிவோர்.
0777 668 725

மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பம் 1974 ஆம் ஆண்டு பிறந்த கார்த்திகை 2ம் பாதம் 5இல் செவ்வாய் உடைய சுவிஸில் நிரந்தர வதிவிட உரிமையுடைய விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு 074 191 5106

காணி விற்பனைக்கு
கொக்குவில் கிழக்கு கோயில் வீதியில் 4¼ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தேவையில்லை.
தி.ஸ்ரீ.சரவணபவான் சட்டத்தரணி
077 543 1306

பிரபல்ய மருந்தகமான CITY MEDICALS
யாழ்ப்பாணம்.
பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் உடனடியாகத் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழில் சார்ந்த நபர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
குறிப்பு : சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு
077 734 7578 / 021 221 7664 - Monday - Saturday (9.00 am - 5.00 pm)
077 734 7578 - Sunday - (9.00 am - 5.00 pm)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22. 08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சஞ்சீவி
Registered as a Newspaper
பக்கங்கள்: 12
மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2052 ஆவணி 06 ஞாயிற்றுக்கிழமை (22.08.2021) சிகரம் : 61

அடங்கியபின் முடக்கலிலும்
அடங்கா முடக்கம் தொடங்கிடல்
அடக்கத்தை அடக்கிடும்!
–காரைக்கவி



# தலிபான்கள் கையில் சிக்கிச் சீரழியும் 'இந்துக்களின் புராதன நகரம்!'

ந.பரமேஸ்வரன்

கி.பி 652ல் இஸ்லாம் ஆப்கானிஸ்தானுக்குள் பரவியத்தைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய நாடாக மாற்றமடைந்தததது. கி.பி 962 -1000 காலப்பகுதியில் இஸ்லாமிய நாகரிகத்தின் மத்திய நிலையமாக ஆப்கானிஸ்தான் உருவெடுத்தது. இஸ்லாமிய ஆக்கிரமிப்பையடுத்து ஆப் கானிஸ்தானிலிருந்த இந்து - பௌத்த ஆலயங்கள் யாவும் இடித்தழிக்கப்பட்டன. ஆப்கானிஸ்தானில் வாழ்ந்த இந்துக்களும் பௌத்தர்களும் கட்டாயமாக

## 7 லட்சமாக இருந்த இந்துக்களின் எண்ணிக்கை வெறும் 50 ஆக குறைந்தது ஏன்?

மதம் மாற்றப்பட்டனர். சொல்லப்போனால் வாள்முனை யில் பலவந்தமாக மதம் மாற்றப்பட்டனர். இஸ்லாமிய தீவிரவாதம் ஆப்கானிஸ்தானுக்குள் ஊடுருவியத்தைத் தொடர்ந்தே வன்முறை அல்லது ஆயுதக் கலாசாரம் ஆப்கானிஸ்தானில் தலைதூக்கியது. இதற்கு ஆப்கா னிஸ்தானின் எல்லையாக ஈரான் காணப்படுவ தும் ஈரானில் இஸ்லாமியத் தீவிரவாதம் நன்கு வேரோடியிருப்பதும் ஒரு காரணம்.

11

# துரியோதனனின் தாய்வீடே ஆப்கான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பலசுவை வார இதழ்

சஞ்சீவி
22 ஓகஸ்ட் 2021



# வக்சினைப் போடுங்கள் ஆனால் கடவுளை நம்புங்கள்?




நிலாந்தன்

பவித்ரா வன்னியாராச்சியிடமிருந்து சுகாதார அமைச்சு பறிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பெருந்தொற்று நோய்க்காலத்தில் ஒரு நாட்டின் சுகாதார அமைச்சராக இருப்பது என்பது சோதனை மிகுந்தது. அந்தச் சோதனையில் அவர் சித்திபெறவில்ல. தொடக்கத்தில் இருந்தே அவர் சொதப்பிவிட்டார். மந்திரித்த நீரை ஆறுகளில் கலப்பதிலிருந்து தொடங்கி உள்ளூர் வெதமாத்தையாவான தம்மிகவின் கொரோனாப் பாணியை அங்கீகரித்து அருந்தியது வரை அவர் மாந்திரீகம், மருந்து எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டு குழப்பிவிட்டார். இப்போது அவருடைய இடத்துக்கு கெஹலிய ரம்புக்வெல வந்திருக்கிறார். இவர் யுத்தகாலங்களில் பாதுகாப்புத்துறை பேச்சாளராக இருந்தவர். அந்த நாட்களில் இவர் எப்படி உண்மைகளை விழுங்கினார் என்பது எல்லாருக்கும் தெரியும். எனவே இனிவரும் காலங்களில் வைரஸ் பற்றிய உண்மைகளும் விழுங்கப்படும் என்று எடுத்துக்கொள்ளலாமா? ஆனால் அவர் சுகாதார அமைச்சராக வருவதற்கு முன்னரே நாடு உண்மைகளை விழுங்கத் தொடங்கிவிட்டது என்று எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுகின்றன.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் பின்வருமாறு கூறுகிறார்.... "கொரோனாத் தொற்று தொடர்பாகச் சரியான புள்ளிவிவரங்கள் கிடைக்கவில்லை. இரசாயான ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்படும் பி.சி.ஆர். அறிக்கை மாத்திரம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. நாளாந்தம் சுகாதாரப் பிரிவில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனை மற்றும் விரைவான அன்டிஜென் பரிசோதனை தொடர்பான அறிக்கை புள்ளிவிவரத்தில் இடம்பெறுவதில்லை. அவர்கள் வேண்டும் என்றே செய்கிறார்களோ அல்லது அவர்களின் கவனக்குறைவோ எனத் தெரியவில்லை."

இப்பொழுது கெஹலிய வந்துவிட்டார். அவர். வந்த கையோடு பத்து நாள் சமூக முடக்கம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர் உத்தியோகப் பற்றற்ற ஒரு தணிக்கையை அமுல்படுத்துவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் சவேந்திர சில்வாவுக்கும் அவருக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு எப்படியிருக்கும் என்ற கேள்வியும் இங்கு முக்கியம்.

எனினும் அரசாங்கம் அமைச்சரவையில் மேற்கொண்டிருக்கும் மாற்றங்கள் நாடு இப்பொழுது எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகளை சமாளிக்கும் நோக்கிலானவை என்பதில் சந்தேகமில்லை. இது அமைச்சரவையைப் பொறுத்து இரண்டாவது மாற்றம். முதலாவது பசில் ராஜபக்சவை உள்ளே கொண்டுவந்தது. இப்பொழுது அமைச்சரவை மாற்றம். இதன்மூலம் அரசாங்கம் உள்நோக்கியும் வெளிநோக்கியும் சில சமிக்ஞைகளை காட்டவிரும்புகிறதா ?

சலித்துப் போயிருக்கும் சிங்கள மக்களுக்கு ஒரு மாற்றம் என்ற செய்தியை அரசாங்கம் உள்நோக்கிக் காட்ட விளைகிறது. அதே சமயம் வெளியுறவு அமைச்சராக ஜி.எல்பீரிஸை நியமித்ததன் மூலம் வெளிநோக்கி மேற்கு நாடுகளுக்கு ஏதோ ஒன்றை கூறவிரும்புகிறதா? ஏற்கனவே பீரிஸ் ,சுமந்திரனை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் சந்தித்திருக்கிறார். எனவே அரசாங்கம் தமிழ் மக்களின் பிரதிநிதிகளோடு பேச்சுக்களை தொடங்குவதன் மூலம் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை தொடர்பாக மேலும் சுதாகரிப்புக்களை செய்யப்போகிறதா? நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ஆற்றிய உரையில் தைத்த ஆடை ஏற்றுமதித் துறை பற்றி அழுத்திக் கூறியிருக்கிறார். நாட்டை நீண்டகாலம் முடக்கினால் ஆடை ஏற்றுமதித் துறை சரிந்துவிடும் என்ற அச்சம் அங்கே தெரிகிறது. ஆடை ஏற்றுமதி என்றால் அங்கே ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பற்றியும் கவனிக்கவேண்டும்.

கடந்த ஆட்சியின்போதும் ஜி.எஸ்.பி .பிளஸ் சலுகை தொடர்பில் ஐரோப்பிய யூனியன் நிபந்தனைகளை விதித்தது. குறிப்பாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் அல்லது அனைத்துலகத் தரத்துக்கு ஏற்ப அதில் மாற்றங்களை செய்ய வேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்றம் நிபந்தனை விதித்தது. அப்பொழுது கூட்டமைப்பு அரசாங்கத்தைப் பிணை எடுத்தது. அதன் மூலம் நிபந்தனையோடு அந்தச் சலுகை வழங்கப்பட்டது. இப்பொழுது மறுபடியும் அதேபோன்று ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றம் இலங்கை அரசாங்கத்தை எச்சரித்திருக்கிறது. இதனால் அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை திருத்துவதற்காக ஒரு குழுவை நியமித்திருந்தது. அந்தக் குழுவின் தகைமை குறித்து நிபுணர்கள் ஏற்கனவே கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். அரசாங்கம் பெயரளவிலாவது பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் சில திருத்தங்களை செய்யக்கூடும். அதன்பின் கூட்டமைப்பு அரசாங்கத்தை பிணை எடுக்குமா இல்லையா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். ஆனால் பஸில் அதற்கான வேலைகளை தொடங்கிவிட்டார் என்பது மட்டும் தெரிகிறது. இது முதலாவது. இரண்டாவது அதையும் பஸில் தான் முன்னெடுக்கிறார். திருகோணமலைத் துறைமுகத்தை அண்டிய ஒரு தொகுதி காணிகளை அரசாங்கம் அமெரிக்கா தலைமையிலான குவாட் நாடுகளுக்கு கொடுக்கத் தயாராகி வருவதாக செய்திகள் வெளிவந்தன. இதற்குரிய அமைச்சரவைப் பத்திரமும் தயாரிக்கப்படுவதாக ஒரு செய்தி வெளியாகியிருந்தது. ஆப்கானில் இருந்து அமெரிக்கா வெளியேறி இருக்கும் ஒரு பின்னணியில் திருகோணமலை துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் காணிகளை பெற்றுக்கொள்ள அமெரிக்கா முயற்சிக்கிறதா? என்ற கேள்விக்கு விடைகாண வேண்டும். இது இரண்டாவது.

மூன்றாவது அதுவும் பஸிலின் வருகையோடு தான் முடுக்கிவிடப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. என்னவெனில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவரான மிலிந்த மொரகொட இந்தியாவுடன் சேர்ந்து செயற்படுவதற்காக இரண்டு ஆண்டுத் திட்டம் ஒன்றை வரைந்திருப்பதாக வெளிவந்திருக்கும் செய்திகள்.

கோத்தாபய ஜனாதிபதியாக வந்ததும் மிலிந்த மொரகொடவை இந்தியாவுக்கான தூதுவராக நியமித்தார். அவருக்கு அமைச்சரவை அந்தஸ்து வழங்கப்போவதாக அரசாங்கம் அறிவித்தது. ஆனால் கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கும் மேலாக அந்த நியமனம் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு நிலைமை காணப்பட்டது. இதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் இந்தியா அவருக்கு அமைச்சரவை அந்தஸ்து வழங்கத் தயாரில்லை என்றும் கூறப்பட்டது. அப்படி மிலிந்த மொரகொடவுக்கு அமைச்சரவை அந்தஸ்து வழங்குவதாக இருந்தால் அதைப்போல கொழும்பில் இருக்கும் இந்தியத் தூதுவருக்கும் அமைச்சரவை அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று இந்தியா நிபந்தனை விதித்திருந்ததாகவும் தகவல்கள் தெரிவித்தன. ஆனால் பஸில் வந்த பின் மிலிந்தவின் நியமனம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும், அவர் இனி அமைச்சரவை அந்தஸ்துள்ள தூதுவராக டெல்லிக்குச் செல்லவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறானதொரு பின்னணியில் மிலிந்த மொர கொட இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதற்கென்று தயாரித்த ஒன்றிணைந்த மூலோபாயத்திட்டம் ஒன்றைப் பற்றி அரசியல் வட்டாரங்களில் அதிகம் பேசப்படுகிறது.

அதாவது அரசாங்கம் இந்தியா தொடர்பான அதன் அணுகுமுறைகளில் மாற்றங்களை செய்யவிரும்புகிறது என்று பொருள். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இந்தியா முதலில் என்பதே அதன் வெளியுறவுக் கொள்கை என்று கூறிக் கொண்டாலும் நடைமுறையில் அது இந்தியாவுக்கு ஏமாற்றமளிக்கும் விதத்திலேயே பல விடயங்களிலும் நடந்துகொண்டது. குறிப்பாக கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் மற்றும் மேற்கு முனையம் விடயங்களில் இலங்கை அரசாங்கம் இந்தியாவை திருப்திப்படுத்த தவறியது. அடுத்ததாக ,பலாலி விமான நிலையத்தை அடுத்த கட்டமாக புனரமைப்பதற்கு இந்தியா தயாராக இருந்த போதிலும் அரசாங்கம் கொவிட்-19 ஐக் காரணமாகக் காட்டி அதை தள்ளிப்போட்டு வருகிறது.

அது ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு காரணமாகவும் பார்க்கப்படுகிறது. மூன்றாவது ,காங்கேசன்துறையில் இருந்து இந்தியாவை நோக்கிய ஒரு கப்பல் பாதையை திறப்பதற்கும் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக ஒப்புதல் தரவில்லை. நாலாவது யாழ்ப்பாணத்தின் தீவுகளில் புதுப்பிக்கப்படும் எரிசக்தித் திட்டத்தை சீன நிறுவனத்துக்கு கொடுத்தமை.

இவ்வாறாக அரசாங்கம் இந்தியாவைத் திருப்திப்படுத்தும் விதத்தில் சில விடயங்களில் நடந்துகொள்ளவில்லை என்று தெரிகிறது.

மாறாக முதலீடு என்ற அடிப்படையிலும் கடன் உதவி என்ற அடிப்படையிலும் அரசாங்கம் மேலும் சீனாவை நோக்கிச் சாயும் நிலைமையே காணப்படுகிறது. இவ்வாறான ஒரு பின்னணியில் பஸில் ராஜபக்ச நாடாளுமன்றத்துக்குள் வந்ததும் அவர் ஒரேநேரத்தில் அமெரிக்காவை நோக்கியும் இந்தியாவை நோக்கியும் அனுகூலமான அசைவுகளை காட்டத் தொடங்கியிருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறான அசைவுகளில் ஆகப் பிந்திய ஒன்றுதான் வெளிவிவகார அமைச்சராக பீரிஸ் நியமிக்கப்பட்டிருப்பதும்.

ஜி.எல்.பீரிஸ் ஏற்கனவே சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட ஒருவர். மேற்கைப் பொறுத்தவரையிலும் முன்னாள் வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவோடு ஒப்பிடுகையில் கையாள்வதற்கு இலகுவான ஒருவர். அப்படிப்பட்ட ஒருவரை வெளியுறவு அமைச்சராக நியமித்ததன் மூலம் அரசாங்கம் மேற்கு நாடுகளுக்கு சாதகமான சில கதவுகளைத் திறக்க முயற்சிக்கின்றதா?

எனவே மேற்கண்ட அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் நமக்கு கிடைக்கும் சித்திரம் என்னவென்றால் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பலவகைப்பட்ட நெருக்கடிகள் காரணமாக அரசாங்கம் தனது சில நிலைப்பாடுகளை தளர்த்தத் தொடங்கியிருப்பதாகத் தெரிகிறது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை முன்னிட்டு அரசாங்கம் மேலும் தனது நிலைப்பாடுகளில் நெகிழ்வைக் காட்டக் கூடும்.. ஆனால் பஸில் ராஜபக்ச பொருளாதார ராஜதந்திரப் பரப்புகளில் முன்னெடுக்கும் இதுபோன்ற சுதாகரிப்புக்கள் யாவும் வைரசுக்கு எதிரான போரில் அரசாங்கம் தனது கவனத்தை முழுமையாகக் குவிப்பதற்கு உதவுமா?

இந்தக்கட்டுரை எழுதப்படும் காலகட்டத்தில் நாட்டில் ஒட்சிசனுக்கு தட்டுப்பாடு வந்துவிட்டது. அரசாங்கம் இந்தியாவிடம் ஒட்சிசனை வாங்கத் தொடங்கியிருக்கிறது. டெல்டா திரிபு வைரஸ் மேல்மாகாணத்தை கடந்து நாடு முழுவதும் பரவிவருகிறது. எட்டு நிமிடத்துக்கு ஒருவர் வைரஸ் தொற்றினால் இறக்கிறார். நாடு முடக்கப்பட்டிருக்கிறது. இந்தக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டதைப்போல கெஹலிய ரம்புக்வெல பெருந்தொற்று நோய் தொடர்பான புள்ளிவிபரங்களில் உண்மைகளைக் கூறலாம், கூறாமல் விடலாம். ஆனால் அவர் கொவிட்-19 தொற்றத் தொடங்கிய காலகட்டத்தில் ஒரு விடயத்தை பிரகடனம் செய்ததை இந்த இடத்தில் நினைவூட்ட வேண்டும்.

" விடுதலைப்புலிகள் இயக்கத்தை தோற்கடித்த அரசாங்கத்துக்கு ஒரு வைரஸை தோற்கடிப்பது பெரிய காரியம் இல்லை" என்ற தொனிப்பட அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

ஆனால் வைரசுக்கு எதிரான போரும் இனமுரண்பாடு களின் விளைவாக வந்த போரும் ஒன்று அல்ல என்பதை கடந்த ஒன்றரை ஆண்டுகாலம் நிரூபித்திருக்கும் பின்னணியில், அமைச்சரவை மாற்றத்துக்குச் சில நாள்களுக்கு முன்பு ரம்புக்வெல கூறினார், " தடுப்பூசியைப் போடுங்கள் ஆனால் கடவுளைப் பிரார்த்தியுங்கள்" என்ற தொனிப்பட. இப்பொழுது அவர்தான் சுகாதார அமைச்சர். இனியும் அவர் அப்படித்தான் கூறுவாரா? ஏனெனில், மருத்துவர்களும் துறைசார் நிபுணர்களும் சொல்லிக் கேட்காத அரசாங்கம் இரண்டு மகாநாயக்கர்கள் சொன்ன பின்தானே நாட்டை முடக்கியது?

**அரசாங்கம் அமைச்சரவையில் மேற்கொண்டிருக்கும் மாற்றங்கள் நாடு இப்பொழுது எதிர் கொண்டிருக்கும் பிரச்சினைகளை சமாளிக்கும் நோக்கிலானவை என்பதில் சந்தேகமில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
22 ஒகஸ்ட் 2021

அ.நிக்ஸன்



# சீனாவைத் திசை திருப்பும் அமெரிக்கா: சுயமரியாதையை இழக்கும் இந்தியா!!



அமெரிக்காவை மையப்படுத்திய நேட்டோ படையினர் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறியமை தோல்வியா, இல்லையா என்ற விமர்சனங்களே ஐரோப்பிய மற்றும் மேற்கத்தைய ஊடகங்களில் அதிகமாக முன்வைக்கப்படுகின்றன. சென்ற ஜூன் மாதம் ஜி7 மற்றும் நேட்டோ மாநாடுகள் நடைபெற்ற போது, அங்கு ஏற்பட்ட முரண்பாடுகள், அதிருப்திகள், மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையேயான இடைவெளியைப் புடம்போட்டுக் காண்பித்திருந்தன.

ஆனாலும் அதற்கு முன்னதாக டொனால்ட் ட்ரம்பின் காலத்திலேயே படைகளை விலக்குவது தொடர்பாக தலிபான் தீவிரவாதிகளுடன் அமெரிக்கா பேச்சு நடத்தியிருக்கிறது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் அமெரிக்கா தலிபான்களை அரபு நாடான டோஹாவில் (Doha) சந்தித்திருந்தது. அதன்போது சில ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்ததாக 'சி நியூஸ் இந்தியா' என்ற செய்தித்தளம் கூறுகின்றது. அடுத்த 14 மாதங்களுக்குள் அமெரிக்காவை மையப்படுத்திய நேட்டோ படையினர் வெளியேற வேண்டுமென அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தது. அதே வேளை தலிபான்கள், அல்கெய்தாவுடன் சேரக்கூடாது என்பது உள்ளிட்ட பல நிபந்தனைகளை அமெரிக்கா விதித்திருந்தது.

படைவிலகலினால் ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் எப்படி அமையும் என்பதைவிட இதற்குப் பின்னர் இடம்பெறப் போகின்ற பூகோள நகர்வுகள் பற்றியே இங்கு பிரதானமாக நோக்க வேண்டும். குறிப்பாக ஐந்து விளைவுகள் உருவாகும் என எதிர்பார்க்கமுடியும்.

ஒன்று இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் சீனாவுடனான போட்டியில் அமெரிக்காவினால் இந்தியா தலைமையில் உருவாக்கப்பட்ட குவாட் இராணுவ அணியின் செயற்பாடுகள் இலங்கையை மையப்படுத்திய கடற்பகுதியில் தீவிரமடையும்.

இரண்டாவது அமெரிக்காவின் பிடிக்குள் இந்தியா இன்னும் அதிகமாகச் சிக்கக்கூடிய ஆபத்துகளும் , அமெரிக்காவுடன் 2016 ஆம் ஆண்டில் இருந்து 2020 ஆம் ஆண்டு வரை செய்யப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தங்களில் இருந்து இந்தியா ஒருபோதும் விலகமுடியாத சூழலும் உருவாகும்.

மூன்றாவது, படைவிலகல் சீனாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும் மிகவும் கிட்டிய தூரத்தில் அதாவது சீனாவின் வாசலில் உள்ள ஆப்கானிஸ்தான் மற்றும் அதன் அயல் நாடுகளுடனான பொருளாதார உறவுகளை மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டிய நிலைமை.

நான்காவது ரஷ்யாவுக்கும் தலிபான்களினால் ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய நிலைமை.

ஐந்தாவது நேட்டோ அணியில் இந்தியா இல்லாவிட்டாலும் இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவுடன் ஏற்பட்ட உறவினால் ஆப்கானிஸ்தானில் இந்தியா மேற்கொண்ட அனைத்து அபிவிருத்தித் திட்டங்களுக்கும், முதலீடுகளுக்கும் ஆபத்து.

இந்த ஐந்து விளைவுகளும் அமெரிக்காவுக்கு பாதிப்பை உண்டுபண்ணக்கூடியவையல்ல. ஏனெனில் ஆப்கானிஸ்தானில் நேட்டோ படைகள் கடந்த இருபது ஆண்டுகளாக நிலை கொண்டிருந்த காலங்களில் அதிகளவு செலவிட்டது அமெரிக்காதான். ஐரோப்பிய நாடுகள் தத்தமது படையினருக்காக அதிகளவு செலவுகளை மேற்கொள்ளவில்லை. இதுபற்றிய கவலையை ஜோ பைடன் கடந்த ஜூன் மாதம் பிறேசிலில் நடைபெற்ற நேட்டோ மாநாட்டிலும் வெளியிட்டிருந்தார். ஆகவே நேட்டோ படைகளை வெளியேற்றியதன் மூலம் ஐரோப்பிய நாடுகளுக்கும் சீனாவுக்கும் மறைமுகமான செய்தியை அமெரிக்கா கொடுத்திருக்கிறது. ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவின் நட்பு நாடுகளாக இருந்தாலும், நேட்டோவின் செயற்பாடுகளுக்காக அமெரிக்க நிதியையே அதிகளவில் அவர்கள் நம்பியிருக்கின்றனர்.

ஆகவே எதிர்காலத்தில் நேட்டோ எப்படிச் செயற்பட வேண்டுமென்பதை அமெரிக்கா அவர்களுக்கு உணர்த்தியிருக்கின்றது.

பின்லேடன் கொல்லப்பட்டுவிட்ட நிலையில் இனிமேல் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப்படைகள் தேவையில்லை என்று ஜோ பைடன் வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டுமிருக்கிறார். எனவே அமெரிக்க இராஜதந்திர நோக்கில் அமெரிக்க நிலைப்பாடு சரியென்றே கூறலாம். கூடுதல் நிதி இழப்பில் இருந்து விடுதலை பெற்றுவிட்டதாகவே ஆப்கானில் இருந்து தனது படைகளின் வெளியேற்றத்தை அமெரிக்கா கருதுகின்றது. எனவே இது வியட்நாமில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியது போன்றதொரு தோல்வியல்ல என அமெரிக்க இராஜதந்திரிகள் கூறுகின்றனர்.

ஆகவே முதலாவது விளைவின்படி நோக்கினால் அமெரிக்கா இந்தோ - பசுபிக் விவகாரத்தில் இனிமேல் கூடுதல் கவனம் செலுத்தும் என்பதுடன், இலங்கையை மையமாகக் கொண்ட வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்கள் மற்றும் கடல் பகுதிகளிலும் தனது கவனத்தை அமெரிக்கா கூடுதலாகத் திருப்பக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

இந்த இடத்திலேதான் சீனாவின் இராஜதந்திரத்துக்கு இரட்டிப்பு வேலைப்பளு ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் ஆப்கானிஸ்தானில் இருந்து நேட்டோ படைகள் வெளியேறினாலும், தலிபான்கள் 2001 ஆம் ஆண்டில் இருந்த நிலைப்பாட்டை மாற்றி, அமெரிக்கச் சார்பு நிலை எடுக்கக்கூடிய வாய்ப்புகள் இல்லாமலுமில்லை. இது குறித்துச் சீனா அதிகளவில் உணர்ந்துமுள்ளது. ஆகவேதான் அவசர அவசரமாக தலிபான் போராளிகளின் முக்கிய தலைவர்களை பீஜிங்குக்கு அழைத்துச் சீனா உரையாடியிருக்கிறது. ஏனெனில் சீனாவின் உய்குர் மாநிலத்தில் சுமார் 3.5 மில்லியன் முஸ்லிம் மக்கள் சீன அரசினால் இன அழிப்புக்கு உள்ளாவதாக அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் குற்றம் சுமத்துகின்றன. ஆப்கானிஸ்தான் சீனாவுக்கு மிக அருகில் உள்ளது. இதனால் சீனாவுக்கு எதிரான இஸ்லாமியக் குழுக்கள் ஆப்கானிஸ்தானைத் தளமாகப் பயன்படுத்தும் ஆபத்து இருக்கிறது. அதனால் தலிபான்களுடன் பேச்சு நடத்த வேண்டிய கட்டாயச் சூழல் சீனாவுக்கு உண்டு.

அதேபோன்று சீனாவின் நட்பு நாடான ரஷ்யாவுக்கும் தலிபான்களை அணைக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. ஏனெனில் ரஷ்யாவிலும் இஸ்லாமிய விரோதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. அத்துடன் ரஷ்யா சோவியத் யூனியனாக இருந்த 1980 களில் ஆப்கானிஸ்தானில் தனது படைகளை நிறுத்தி பெரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தது. 1970 களின் இறுதியில் ஆப்கானிஸ்தானில் சோவியத் ஒன்றியத்தின் செல்வாக்கைத் தடுப்பதற்காக அமெரிக்கா, சவுதி அரேபியா, துருக்கி, பிரித்தானியா மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகள் ஆப்கானுக்கு ஆயுதங்களைக் கொடுத்தன. இதனாலேயே சோவியத் யூனியன் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற வேண்டிய நிலை உருவானது. ஆகவே அமெரிக்கா தலிபான்களுடன் 2001 ஆம் ஆண்டு போர் நடத்தியிருந்தாலும்கூட, 2020 ஆம் ஆண்டு உருவான புதிய ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்கா மீதான குறைந்தபட்ச நம்பிக்கை தலிபான்களுக்கு உருவாகலாம். அவ்வாறான சந்தர்ப்பத்தில் சீனாவும் ரஷ்யாவும் எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்கக்கூடும். அது சீனாவின் பொருளாதார விரிவாக்கத்துக்கும் பாதிப்பை உருவாக்கலாம். சீனாவின் அதீத வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுத்துவதுதான் அமெரிக்காவின் பிரதான நோக்கம்.

அமெரிக்காவின் இந்தத் தந்திரோபாயத்தை அறிந்த நிலையில்தான் ஆப்கானிஸ்தானுடன் சீனா நட்புறவு கொள்ள முற்படுவதை சீனாவின் 'குளோபல் ரைம்ஸ்' எச்சரித்துள்ளது. அதாவது ஆப்கானிஸ்தான் 'வல்லரசுகளின் கல்லறை' என்று வர்ணித்துள்ளது. அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் ஆகிய நாடுகளைப் போன்று படுகுழியில் விழுந்துவிடக்கூடாது என்று குளோபல் ரைம்ஸ் வெளியிட்ட ஆசிரியர் தலையங்கம் சீன அரசை எச்சரிக்கை செய்துள்ளது.

இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் தமது ஆதிக்கத்தைச் செலுத்தி, ஈராக், குவைத் ஆகிய நாடுகளின் கரையோரத்தில் இருந்து பாரசீக வளைகுடாவினூடாகவும் அதனுடைய குறு நீரிணையான கோமூர்ஸ் நீரிணையூடாகவும் அரபிக் கடல் மற்றும் ஈழத்தமிழர்களின்; மன்னார் வளைகுடா, கிழக்கு மாகாண கடற்பகுதி வழியாகவும் இந்தியாவின் அந்தமான் நிக்கோபார் தீவுகளைத் தழுவி மலாக்கா நீரிணையூடாகவும் தென் சீனக் கடலை சென்றடையும் பாதையை அமைக்கவுள்ள சீனாவின் திட்டத்தை முறியடிப்பதே அமெரிக்காவின் நோக்கம்.

ஆகவே சீனாவின் கவனத்தை ஆப்கானிஸ்தான் பக்கம் திருப்பி சீனாவின் நட்பு நாடான ரஷ்யாவையும் குழப்பிவிடுவதன் மூலமாக, இந்தோ பசுபிக், தென் சீனக் கடல் பிரதேசங்களின் ஆதிக்கத்தைச் செலுத்தலாமென அமெரிக்கா கருதியுள்ளது போலும். இங்கே ஐந்தாவது விளைவு கேள்வியோடு அமைந்துள்ளது. அதாவது இந்தியா ஏன் இதற்குள் சிக்கிக் கொண்டது என்பதுதான்.

இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தைத் தடுக்க அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்தால் நேட்டோ இராணுவ அணியில் உறுப்பு நாடாக இல்லாத நிலையிலும், அமெரிக்கச் செல்வாக்கினால் ஆப்கானிஸ்தானில் அதிகளவு முதலீடுகள், அபிவிருத்திகளைச் செய்து இன்று மாட்டிக்கொண்டது இந்தியாதான். ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலை குறித்த விவகாரத்தில் சிங்கள ஆட்சியாளர்களுடன் இந்தியாவுக்கு ஏற்பட்ட இராஜதந்திரத் தோல்வி போன்று ஆப்கானிஸ்தானிலும் இந்தியாவுக்கு நடந்த கதியை ஒப்பிடலாம். இலங்கை சிறிய நாடாக இருந்தாலும் ஈழத்தமிழர் விரோதப் போக்கினால் சிங்கள ஆட்சியாளர்களுக்கு விசுவாசமாகவும், அவர்களுக்கு விட்டுக் கொடுத்து அல்லது அவமானம் ஏற்பட்டால் அதனைப் பொருட்படுத்தாமலும் இலங்கையோடு இந்தியா ஒட்டுறவாடி வருகின்றது. ஆனால், இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் சீனாவை எதிர்க்கத் திராணியற்ற நிலையிலேயே அமெரிக்காவுடன் இந்தியா கூட்டுச் சேர்ந்தது என்பது கண்கூடு. அத்துடன் அமெரிக்கா வல்லாதிக்க நாடு என்பதாலும், உலக அதிகாரம் அதன் கையில் உள்ளதாலும் சீனாவை எதிர்க்க அமெரிக்காவுடன் கூட்டுச் சேரலாமென இந்திய இராஜதந்திரம் நம்பியுமுள்ளது.




(04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## மலையக சங்கமம்



மலையகத்திலுள்ள முக்கிய தொழிற்சங்கமொன்று அது. மாற்று மக்கள் அரசியலை முன்னெடுப்ப தற்காகவே அந்த தொழிற்சங்கம் மறுசீரமைக்கப்பட்டது. இதனால் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கையும் பெற்றது.

குறித்த தொழிற்சங்கத்தில் இருந்து இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு தெரிவாகும் சூழ்நிலையும் உருவானது. ஆனால் கடந்த பொதுத்தேர்தலில் ஒரு எம்.பிக்கு போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. இதனால் தலைமைத்துவத்துடன் முரண்டபட்ட அவர் சங்கச் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கினார். அவருக்கு சார்பான சிலரும் அதிருப்தியில் வெளியேறினர்.

அந்தப் பிரமுகரின் வெளியேற்றத்தால் சங்கம் பலவீனமான திசையில் பயணித்துக்கொண்டிருக்கின்றது. எனவே, அவரை மீண்டும் இணைத்துக்கொள்ளுமாறு சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் தலைவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர். அதுமட்டுமல்ல வெளியேறிய பிரமுகருக்கு தூதும் அனுப்பியுள்ளனர்.

மீள் சங்கமத்துக்கு இரு தரப்பில் இருந்தும் பச்சைக் கொடி காட்டப்பட்டுள்ளதால் விரைவில் இணைவு சாத்தியமாகும் எனவும், இதனால் சிலர் சங்கத்தில் இருந்து வெளியேறக்கூடும் எனவும் நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

## ஒரேயொரு கதை ஓராயிரம் விளக்கம்!



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் அமைச்சரவை அண்மையில் மறுசீரமைக்கப்பட்டது. இதன்போது சுகாதார அமைச்சராக பதவி வகித்த பவித்ராவின் பதவி பறிக்கப்பட்டு, கெஹலியவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதேபோல அரசால் முன்னர் ஓரங்கட்டப்பட்டிருந்த டலஸ் அழகப்பெருமவுக்கு ஊடகத்துறை அமைச்சுடன், அமைச்சரவை பேச்சாளர் என்ற பதவியும் வழங்கப்பட்டது.

ஆக பவித்ராவிடமிருந்து சுகாதார அமைச்சுப் பதவியை பறிப்பதற்கும், அதிருப்தியில் இருக்கும் டலஸை திருப்திப்படுத்துவதற்காகவுமே இந்த மாற்றம் இடம்பெற்றது என்பதே பெரும்பாலானவர்களின் கருத்து. சுகாதார அமைச்சுப் பதவி மாற்றப்படும் என கடைசிநொடி வரை தனக்குத் தெரியாது என பிரியாவிடை நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் பவித்ரா குறிப்பிட்டதுடன், வாழ்க்கையில் எது நடந்தாலும் அதனை மகிழ்வுடன் ஏற்க வேண்டுமென தத்துவமும் பேசினார். அத்துடன் நின்றுவிடாமல், 'எல்லாம் நன்மைக்கே' என விளித்து, மன்னர் மற்றும் புரோகிதர் கதையும் கூறினார்.

அந்தக்கதையை பவித்ரா கூறிய பின்னர், அரசியல் களத்தில் இன்றளவிலும் அது பற்றியே பேச்சடிபடுகின்றது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் தூரநோக்கற்ற தீர்மானங்களையும், முதிர்ச்சியற்ற தன்மையையுமே பவித்ரா விமர்சித்துள்ளார் என ஒருசிலரும், கொரோனாவால் நிலைமை மோசமாகவுள்ளது. இது தொடர்பில் உண்மையை வெளிப்படுத்துவதற்கு தனக்கு வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. எனவே, பதவி பறிக்கப்பட்டதும் நல்லதுதான் என பவித்ரா தனக்கு நெருக்கமானவர்களிடம் குறிப்பிட்டதாக மேலும் சிலரும் கருத்து வெளியிட்டுவருகின்றனர். அத்துடன், நாட்டில் மன்னராட்சி நடைபெறுகின்றது, தன்னிச்சையாக முடிவெடுக்கப்படுகின்றது என்ற தகவலையே இதன்மூலம் பவித்ரா வழங்கியுள்ளார் என்ற கோணத்திலும் விமர்சன அலை உருவாகியுள்ளது.

## விமலை வளைக்கும் பஸில்!



அரசியல் களத்தில் அமைச்சர்களான பஸில் ராஜபக்ச மற்றும் விமல் வீரவன்சவுக்கிடையே ஏழாம் பொருத்தம் என்றே கூறவேண்டும். இருவருக்கிடையில் அவ்வப்போது பனிப்போர் உச்சம் தொடும். பஸில் மீது விமல் வெளிப்படையாகவே விமர்சனக் கணைகளைத் தொடுத்தாலும் தனது சகாக்கள் ஊடாகவே பஸில் பதிலடி கொடுத்துவருவார்.

2015 இல் மஹிந்தவின் தோல்விக்கு பஸிலே காரணம் என விமர்சித்துவந்த விமல், இரட்டைக் குடியுரிமை கொண்ட பஸில் நாடாளுமன்றம் வருவதற்கும் ஆரம்பத்தில் போர்க்கொடி தூக்கியிருந்தார். பஸில் நிதி அமைச்சரான பின்னர்கூட இருவருக்குமிடையில் அவ்வப்போது மோதல்கள் வெடிக்கவே செய்தன.

இவ்வாறானதொரு பின்புலத்தில் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர்களை நிதி அமைச்சுக்கு அழைத்த பஸில் ராஜபக்ச, மனம்விட்டு உரையாடியுள்ளாராம்.

கட்சி மற்றும் கூட்டணி செயற்பாடுகளுக்கு அப்பால், 2022 ஆம் ஆண்டு முன்வைக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டம் தொடர்பில் விமல் தரப்பின் ஆலோசனைகளைப் பஸில் பெற்றுள்ளார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நிதி அமைச்சர் பஸில், தற்போது அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களின் ஆலோசனைகளைப் பெற்றுவருகின்றனர். அந்தவகையில் விமல் தரப்புக்கும் முக்கியத்துவம் வழங்கியுள்ளாராம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் தோற்கடித்து கம்மன்பில தரப்பின் ஆதரவைப்பெற்றுள்ள பஸில், தற்போது விமல் தரப்பையும் வளைத்துப் போடும் முயற்சியில் இறங்கியுள்ளாரென அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

## ரணிலே தலை!



ஐக்கிய தேசியக்கட்சியின் 75 ஆவது ஆண்டு விழாவை எதிர்வரும் செப்டம்பர் 06 ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலால் கட்சித் தலைமையகத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்ட உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் நிகழ்வு நடத்தப்படவுள்ளது. கட்சி மறுசீரமைப்பு தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் முன்மொழிவுகள் மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ளதுடன், கீழ்மட்ட அரசியல் இயந்திரத்தை வலுப்படுத்துவதற்கான யோசனைகளும் இடம்பெறவுள்ளன.

ஐ.தே.க. தலைமைப்பதவியில் மாற்றம் வருமென அறிவிக்கப்பட்டாலும் பதவியை கைவிடுவதற்கு ரணில் விக்கிரமசிங்க தயார் நிலையில் இல்லை. எனினும், எப்போது புதியவரிடம் பொறுப்பு கையளிக்கப்படும் என்ற அறிவிப்பை அவர் மாநாட்டில் வெளியிடக்கூடும் எனவும், 2022 செப்ரெம்பர் வரை ரணிலே தலைமைப் பதவியில் நீடிப்பார் எனவும் கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## புதிய கூட்டணி?

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து வெளியேறிய – வெளியேற்றப்பட்ட– சிலர் இணைந்து புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர். இதற்கான இரகசியப் பேச்சுகள் இடம்பெற்றுவருவதாக அறியமுடிகின்றது. முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரப்பின் பெயரிலேயே கூட்டணி உருவாக்கப்படவுள்ளது எனவும் மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் இதில் இணையக்கூடும் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. கூட்டணியின் பின்புலம் தொடர்பில் இன்னும் உறுதியான தகவல் வெளியாகாதபோதிலும் , ஆளுந்தரப்பின் ஆசிர்வாதத்துடனேயே அது அமையவுள்ளது என அரசல் புரசலாகக் கதை அடிபடுகின்றது. அரசுக்கு ஆதரவு வழங்கும் முஸ்லிம் கட்சியொன்றின் தலைவரும் இதன் பின்னால் செயற்படுவதாகக் கூறப்படுகின்றது.

# சீனாவைத் திசை....

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அமெரிக்காவை நம்பி ஆப்கானிஸ்தானில் கால் பதித்துத் தற்போது எதுவுமே செய்ய முடியாத நிலையில் நிற்பது போன்றதொரு நிலைதான் இந்தோ பசுபிக் பிராந்திய விவகாரத்திலும் இந்தியாவுக்கு ஏற்படலாம்.

ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியத் தூதுவர் வெளியேறியதும் தலிபான்களுக்கு இந்தியா மீது கடும் கோபம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கும், இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கும் தடை விதித்துள்ளனர்.

"இந்தியாவில் இருந்து ஆப்கானிஸ்தானுக்கு சர்க்கரை, தேயிலை, கோப்பி, மசாலாப் பொருள்கள், துணி வகைகள், தொழில்நுட்ப சாதனங்கள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆப்கானிஸ்தானில் இருந்து பழவகை, உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இப்போது தலிபான்கள் இந்தியாவுக்கான ஏற்றுமதி, இறக்குமதிக்கு தடை விதித்து இருக்கிறார்கள் "என்று இந்திய ஏற்றுமதி கூட்டமைப்பின் பணிப்பாளர் ஜெனரல் அஜய் காய் கூறியுள்ளார்.

"ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு 6 ஆயிரம் கோடி ரூபாவுக்கு பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அதேபோல மூவாயிரத்து 800 கோடி அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்தியாவில் பயன்படுத்தப்படும் உலர் பழங்களில் 80 சதவீதம் ஆப்கானிஸ்தானில் இருந்துதான் வந்தன. தலிபான்களின் தடையால் இனி அவை அங்கிருந்து வராது " எனவும் அவர் கூறினார்.

அத்துடன் 400 நலத்திட்டங்களுக்கும் ஆப்கானுக்கு இந்தியா உதவி செய்துள்ளது. இதற்காக 20 வருடங்களில் கிட்டத்தட்ட மூன்று பில்லியன் டொலரை இந்தியா செலவிட்டுள்ளது. தண்ணீர்ப் பற்றாக்குறைக்காக இரண்டாயிரம் கோடி ரூபா செலவில் சல்மா அணைத்திட்டம் செய்யப்பட்டது. 42 மெகாவாட் மின்சாரம் மூலம் ஹீரட் நகருக்கு அருகே உள்ள பல்வேறு பகுதிகளுக்கு மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆயிரம் கோடி ரூபா செலவில் ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றம் அமைக்கப்பட்டு 2015 இல் திறந்து வைக்கப்பட்டது. ரஞ்டெலரம் நெடுஞ்சாலை இந்திய உதவியோடு அமைக்கப்பட்டுள்ள முக்கிய திட்டமாகும். 218 கிலோமீற்றர் நீளமுள்ள இந்த வீதி, ஈரான் எல்லையில் இருந்து ஆப்கானிஸ்தானின் பல்வேறு முக்கிய பகுதிகளை இணைக்கிறது. அதுமாத்திரமல்ல இந்திய முதலீட்டு நிறுவனங்களும் அங்கிருந்து வெளியேறும் அவலம் ஏற்பட்டுள்ளது.

ஆகவேதான் அமெரிக்கச் செல்வாக்குக்குக் கட்டுப்பட்டு இந்திய இராஜதந்திரம் தனது சுயமரியாதையை இழந்துள்ளதா என்ற கேள்வி இங்கே விஞ்சியுள்ளது. படை விலகலுக்குப் பின்னர் சூடு பிடிக்கவுள்ள இந்தோ பசுபிக் விகாரத்திலும் தனது சுய மரியாதையை டில்லி தக்க வைக்குமா என்பதும் சந்தேகமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா நடத்தும் கொரில்லா யுத்தம்





(கொரோனாக் காலப் பதிவுகள்)

○ வேலணையூர் சுரேஷ்

31.
கொரோனா நடத்தும் கொரில்லா யுத்தம்
கோரத் தாண்டவம் ஆடுது நித்தம்
சரளமாகக் கேட்குது அவலச் சத்தம்,
சாவுப் பாயில் கிடக்குதே சொர்க்கம்
பரவல் வேகமோ உலகில் உச்சம்!
தரும் நாட் செய்தி திடுக்கிட வைக்கும்
தினமும் இழப்பு நெஞ்சில் தைக்கும்!

32.
இத்தாலி, பிரான்ஸ், இங்கி லாந்தில்,
இந்தியா, சீனா, அமெரிக் காவில்,
செத்தவர் கனபேர்! சரித்திரத்தில்
செத்ததாக இப்படிச் செய்தி உண்டா!
மெத்தப் பெரிய நாடுகள் அஞ்சி,
தாக்கும் பிடிக்கத் திணறியே நிற்குதே!
சித்தம் கொண்டு சிந்தித் தாலே
சீக்கிரம் இந்தச் சிக்கல் தீரும்!

33.
ஓரிடம் விட்டு ஓரிடம் நகர,
ஒவ்வாத காலம்! சும்மா இருக்க
பாரிச வாத நோயாளர் போல,
பாதம் கை கால் வலிக்குது வேற!
ஊருள வீதி, தெருக்கள் அளந்து
உசுப்பித் திரிந்தோர்; சுவரிலே பல்லி
ஊர்வதைப் போல வீட்டையே சுற்றி
உலாவு கின்றார்; மனநோய் முற்றி!

34.
கூடக் கூடாத கூட்டம் கூடி,
குழிகள் வெட்டுகிறார்; தமக்குத் தாமே!
பாடாய்ப் படுத்தும் கொரோனாக் குள்ளும்
பாடம் படிக்க மறக்கிறார் ஏனோ?
தேட வேண்டாம் நோயை என்று
திரும்பத் திரும்ப சொல்லி என்ன?
ஆடா, மாடா கட்டி வளர்க்க?
தாமே போடுறார் தலையில் மண்ண!

35.
மறைந்து இருந்து தாக்கும் நோய்க்கு,
மறைவில் இருத்தல் தானே காப்பு!
விரைந்து கொல்லும் கொள்ளை நோய்க்கு
விரைவில் வைக்க வேண்டும் ஆப்பு!
நிறைந்த துயரம் கண்ட பிறகும்,
நமக்குள் இல்லை நல்ல தீர்ப்பு?
குறைத்து மதித்தால் சாகும் வரையில்
கைகளைக் கழுவ வேண்டும் சோப்பு!

தொடரும்......

# கி.ரா: நினைவுகள் 31

முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை 'உதயன் – சஞ்சீவி' வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.



**பேராசிரியர் அ.ராமசாமி**
*தமிழ்த்துறை (பணி நிறைவு) மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு.*

எனக்கு எதையும் நேரடியாகச் சொல்லியே பழக்கம். இலக்கியம் மற்றும் கருத்தியல் சார்ந்த விவாதங்களை நேரடியாகச் சொல்லிவிடுவேன். அப்படிச் சொல்லி விடுவது திறனாய்வாளனின் அடிப்படையான குணம் என்ற நம்பிக்கை எனக்கு இப்போதும் உண்டு. இந்தப் பழக்கத்தைக் கவனித்த கி.ரா., ஒருநாள், 'ராமசாமி.. நீங்க எதையும் பட்பட்டென்று போட்டு உடைக்கிறீங்க.. அப்படி உடைக்கிறத உங்க விமரிசனக் கட்டுரையிலே வைச்சிக்கோங்க.. நட்பு, பழக்கம், பக்கத்து வீட்டுக்காரங்க, கூடப் பேசிப்பழகுறவங்க போன்ற அன்றாட வாழ்க்கையிலே அப்படியெல்லாம் பேசுறதை விட்டுடுங்க" என்று ஒருமுறை உணர்த்தினார் கி.ரா. இந்த யோசனையைச் சொன்னார் என்று நான் எழுதவில்லை. உணர்த்தினார் என்றே எழுதுகிறேன். ஏனென்றால் அவர் எதையும் நேரடியாகச் சொல்பவரில்லை. எனக்கு என்றில்லை; யார் ஒருவருக்கும் எந்தவிதமான யோசனையாக இருந்தாலும், ஆலோசனை சொல்வதாக இருந்தாலும் அதை நேரடியாகச் சொல்லமாட்டார். ஒருத்தர் சொல்லும் கருத்தில் உடன்பாடில்லை என்றால் கூட மறுப்பை உடனடியாகச் சொல்லி நான் பார்த்ததில்லை. எதற்கும் ஒரு கதை அல்லது சொலவடை அல்லது குறைந்தபட்சம் ஒரு சிரிப்பு என்பதாகவே ஆரம்பித்துப் பேசுவார். எதையும் ஆரம்பிப்பதற்குப் போடும் பீடிகையில் அவருக்கு முன்னால் அமர்ந்திருப்பவர்கள் அவரோடு இணைந்து கொள்வார்கள்; உடனே முரண்பட வேண்டும் என்று நினைக்கமாட்டார்கள். அவர் சொல்வதன் மேல் சிந்தித்துப் பதில் சொல்வார்கள். அப்படிச் சிந்தித்து நான் எனது போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காக, 'நண்டு தின்னும் ஊரில் நடுப் பங்கு எனக்குன்னு ஒரு சொலவடை இருக்கு தெரியுமோ?' என்று தான் அன்று ஆரம்பித்தார்.

"ஆமா.. கேள்விப்பட்டிருக்கேன்" என்றேன்.

"கேள்விப்பட்டீங்க சரி; அதை பயன்படுத்தனும்ல" என்றார். எதற்கு இப்படிச் சொல்ல வருகிறார் என்பது முதலில் புரியவில்லை. அமைதியாக இருந்தேன். நான் அமைதியாக இருப்பதைப் பார்த்துப் பேசத் தொடங்கினார். 'பாண்டிச்சேரிக்காரங்க எம்ஜி ஆர் சினிமாவெல்லாம் எப்டி பார்த்தாங்கன்னு நமக்குத் தெரியாது. அந்தக் காலத்தில நாம இங்கே இருக்கல்லெ. ஆனா அவரே அரசியல்வாதியாப் பேசுற காலத்திலே நாமெ இங்கெ வந்துட்டோம். நான் பார்த்தவரைக்கும் இங்கெ இருக்கிற ஒருத்தருக்கும் அரசியல்வாதி எம்ஜி ஆரைப் பிடிக்கவே இல்லெ. அதனாலெ அவரோட தனிமனித குணத்தெக் கூட இங்கெ இருக்கிறவங்க வெறுக்கவே செய்றாங்க. ' "ஆமா.. திரும்பத் திரும்ப ஜெயலலிதாவுக்கு தமிழ்நாடு ஓட்டுப் போடுது. ஆனா.. பாண்டிச்சேரிக்காரங்க.. மறந்தும் எம்.ஜி.ஆர். கட்சிக்கு ஓட்டுப் போடத் தயங்குறதெ பாத்திருக்கேன்... 'எப்படிப் போடுவாங்க..எம்.ஜி.ஆர். பாண்டிச்சேரிக்காரங்க அடி மடியிலெயே கைவச்சாருல்ல; அதெ எப்படி மறப்பாங்க..'

"எம்.ஜி.ஆர். பாண்டிச்சேரியெ தமிழ்நாட்டோட சேர்த்துடலாம்னு மொரார்ஜி தேசாய்க்குக் கடிதம் எழுதினதெச் சொல்றீங்களா..?அப்படி கடிதம் எழுதினது எனக்கு உடன்பாடுதான். பாண்டிச்சேரியெ யூனியன் பிரதேசமா வச்சிருக்கிறதுல இருக்கிற நடைமுறைச் சிக்கலச் சரியாப் புரிஞ்சவர் எம்ஜிஆர் தான். பாண்டிச்சேரியோட ஒரு பகுதி ஆந்திராவுக்குள்ள இருக்கு. ஏனாம் ஒரு முனிசிபாலிட்டி அளவு கூட[illegible]யாது. கேரளாவுக்குள்ள இருக்கிற மாஹே ஓர் ஊராட்சி அளவுக்குக்கூட இருக்காது. அதே மாதிரி காரைக்கால் பகுதி தனியா கெடக்கு. பாண்டிச்சேரிக்கும் காரைக்காலுக்கும் இடையிலேயே 4 மணிநேர ஓட்டம். ஏனத்துக்கும் மாஹேக்கும் ஒருநாள் ஓட்டம். இப்படியெல்லாம் வச்சுக்கிட்டு நிர்வாகம் எப்படி நடத்துறது. இதெச் சரியாப் புரிஞ்சதுனால தான் எம்.ஜி.ஆர். இந்த நாலு பகுதிகளையும் அந்தந்த மாநிலங்களோட சேர்த்துடலாம்னு சொன்னார்" என்று எம்.ஜி.ஆரின் நின்று போன திட்டத்தெப் பாராட்டிச் சொன்னேன். ' ஏன்கிட்டெ சொல்ற இதெ சங்கதியெ பாண்டிச்சேரிக்காரங்க இருக்கிற கூட்டத்திலயும் நீங்க சொன்னீங்க. அதெ நான் கேட்டுக்கிட்டு இருந்தேன். அப்பவே அது நிறுத்துங்கன்னு சொல்ல நினைச்சேன். ஆனா சொல்லல. ஏன்னா ஒருத்தரோட பேச்ச இடையிலெ மறிச்சு நிறுத்துறது என்னோட வழக்கமில்லை. ஆனா இந்தப் பழமொழியெ அப்பவே உங்கெகிட்ட சொன்னேன் என்றார். தொடர்ந்து. 'எம்ஜிஆர் சொன்ன திட்டம் நல்ல திட்டம்தான். எனக்கும்கூட அது சரின்னுதான் தோணுது. செலவுக்குறைப்பு, மக்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையேயுள்ள தூரம் குறைவு, நிர்வாகம் இப்படியெல்லாம் யோசிச்சா பாண்டிச்சேரியெ ஒரு தனிமாவட்டமாவும், காரைக்காலெ நாகப்பட்டினம் மாவட்டத்தில ஒரு தாலுகாவாகவும் ஆக்கிடலாம். மாஹேயெ கேரளாவிலயும் ஏனத்தெ ஆந்திராவுலயும் சேர்த்துடலாம். ஆனா. நான் இப்போ அதெ சரின்னு எடுத்துவச்சிப் பேசமாட்டேன். ஏன்னா. அந்தத் திட்டத்தெக் கடுமையா பாண்டிச்சேரிக்காரங்க எதிர்த்தாங்க; தெருவில இறங்கிப்போராடினாங்க. அது அவங்களுக்கு பிரெஞ்சுக்காரங்க கொடுத்த உரிமை; அதெ விட்டுத்தர முடியாதுன்னு சொன்னாங்க. அன்னிக்கு மட்டுமில்ல; இப்பவும் அப்படித்தான் நினைக்கிறாங்க. அது கூட்டத்தோட செண்டிமெண்ட். அதெப் புரிஞ்சிக்கிடணும். அதுக்குப் பின்னாடி இங்கெ இருக்கிறவங்களுக்குக் கிடைக்கிற வரிச்சலுகை, வியாபார வாய்ப்பு, அரசாங்க உதவிகள்னு நிறைய இருக்கு என்று விளக்கிப் பேசினார். பிரெஞ்சுக்காரங்க குடுத்த உரிமையினால தமிழ்நாட்டுக்காரங்களெவிட ஒருபடி உசத்தின்னு பாண்டிச்சேரிக்காரங்க நெனக்கிறாங்க. அதெக் கேள்விக்குட்படுத்துற ஒருத்தரையும் இவங்களுக்குப் பிடிக்காது. அவங்களெ வெளியூர்க்காரன் என்று திட்டுவாங்க; முடிஞ்சா வெளியேறுன்னு சொல்வாங்க. அதனாலதான் எதையும் எடம் பொருள் ஏவல் பார்த்துப் பேசணும்னு சொல்றேன். அந்தத் திட்டம் நடக்காமப் போயி 20 வருஷம் ஓடிப்போச்சு. அப்போ காட்டின கோபத்தெ இன்னும் குறைச்சிக்கல பாண்டிச்சேரிக்காரங்க. அவங்ககிட்டப் போயி எம்ஜிஆரு நல்லவரு வல்லவரு; பாண்டிச்சேரியெத் தமிழ்நாட்டோட இணைக்க நெனச்சது நல்ல நிர்வாகியோட யோசனையின்னு சொன்னா உங்களெ எப்படா இங்கிருந்து விரெட்டலாம்னுதான் பாப்பாங்க என்று விளக்கினார். அந்த விளக்கத்துக்குப் பின்னர் தான் எனக்கு' நண்டு தின்னும் ஊரில் நடுப்பங்கு எனக்குன்னு சொல்லணும்' என்ற சொலவடை புரிய ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பூக்களே, காதல் செய்யுங்கள்...!

ஆசி.கந்தராஜா



செல்லத்துரை அண்ணைக்கு 'ஹெளஸிங் கொமிஷன்' வீடு கிடைத்து விட்டது...! அது தான் அன்றைய மூத்தோர் ஒன்றுகூடலில், முக்கிய 'பேசு'பொருள்.

செல்லத்துரை அண்ணை சிட்னிக்கு புலம் பெயர்ந்து வந்து இரண்டு வருடங்கள்தான் ஆகிறது. அதற்குள் எப்படி 'ஹெளஸிங் கொமிஷன்' வீடு கிடைத்தது? என மூத்தவர்கள் மூக்கில் விரலை வைத்தார்கள். சிலருக்கு இது ஆச்சரியம், பலருக்கோ பெரும் ஆதங்கம். மொத்தத்தில் எல்லோருடைய வயிறும் இதனால் புகைந்தது.

பெற்றோர் பிள்ளைகள் இணைப்பு விசாவில்ஆஸ்திரேலியா வருபவர்களுக்கு 104 கிழமைகளின் பின்னர், 'சென்றலிங்' பென்ஷன் கிடைக்கும். இது தானாகவே நடக்கும் சங்கதி. ஆனால் பென்ஷனுடன் செல்லத்துரை அண்ணைக்கு 'ஹெளஸிங் கொமிஷன்' வீடும் கிடைத்ததைத் தான், பலராலும் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

செல்லத்துரை அண்ணை, ஊரிலேயே வலு சுழியன். கமத்தொழில் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம் என, அவர் வன்னியில் ஆதிக்கம் செலுத்தாத அமைப்புக்கள் இல்லை. அந்த அனுபவம் ஆஸ்திரேலியாவிலும் கைகொடுத்ததால் பிடிக்கிறவனை பிடித்து சட்டத்திலுள்ள ஓட்டைகளில் புகுந்து விளையாடி, அரசாங்கத்துக்கு சொந்தமான 'ஹெளஸிங் கொமிஷன்' வீட்டைப் பெற்றுவிட்டார். அதுவும் விசாலமான காணியுடன் ஒரு தனி வீடு!

இரு வாரங்களுக்கு ஒருமுறை, செல்லத்துரை அண்ணைக்கும், மனைவி தங்கம்மா அக்காவுக்கும் 1322 டொலர் பென்சன் கிடைக்கிறது. அதில் மிகச் சொற்ப தொகையே வீட்டு வாடகை. குறைந்த கட்டணத்தில் நாள் முழுவதும் றெயினிலும், பஸ்ஸிலும் சுற்றித் திரிய மேலதிக வசதி. பிறகென்ன? ராஜ வாழ்க்கைதான்!

செல்லத்துரை அண்ணையின் பூர்வீகம் யாழ்ப்பாணம் என்றாலும் ஸ்ரீமாவோ அரசாங்க காலத்தில் கமம் செய்யவென, முத்தையன்கட்டில் குடியேறியதால் அவர் எப்பொழுதும் தன்னை 'வன்னியான்' என்றே சொல்லிக் கொள்வார். ஈழப் போராட்டத்துக்கு முன்னர் வன்னியில் இயங்கிய யாழ் எதிர்ப்புச் சங்கத்தின் நிரந்தரத் தலைவரும் இவரே. அரசாங்கம் கொடுத்த காணிக்கு மேலதிகமாக, அடாத்தாக காட்டை வெட்டி கமம் செய்து தனது ஒரே மகளையும் டாக்குத்தருக்கு படிப்பிச்சுப் போட்டார். மருமகனும் டாக்குத்தர்தான், ஆனால் யாழ்ப்பாணம்!

ஆடின காலும் பேசிய வாயும் ஓயாது என்பார்கள். செல்லத்துரை அண்ணை இங்கும் தனக்கு கிடைத்த வீட்டின் பின் வளவில், ஊரில் தனக்கு பரிச்சயமான மரம், செடி கொடிகளை நட்டு வளர்க்கத் துவங்கினார். ஆஸ்திரேலிய சீதோஷ்ண நிலைக்கு சில மரங்கள் குறண்டிப்போகும். உடனே என்னைத் தொடர்பு கொள்வார்.

சிட்னியில் அன்று அரச விடுமுறை. என்னுடைய மனைவி மெல்போனில் வசிக்கும் மகள் வீட்டுக்குப்போக, நான் சோம்பலை அடைகாத்து வீட்டில் பொழுதைப் போக்கினேன். காலை பத்து மணி இருக்கும். கைத்தொலைபேசி சிணுங்கியது. மறு முனையில் செல்லத்துரை அண்ணை.

"இண்டைக்கு வீட்டிலை நண்டுக்கறி தம்பி, மத்தியானச் சாப்பாட்டுக்கு வந்திட்டுப் போவன்" என படு கரிசனையாக அழைத்தார்.

சோழியன் குடுமி சும்மா ஆடாதென்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் தங்கம்மா அக்காவின் கைப்பக்குவத்தில் சமைக்கப்படும் காரமான நண்டுக்கறியை நினைத்ததும் நாக்கில் ஜலம் ஊறியது. அடுத்த அரை மணி நேரத்தில் செல்லத்துரை அண்ணை வீட்டில் ஆஜரானேன்.

நண்டுக்கறி வாசம் மூக்கைத் துளைத்தது. தங்கம்மா அக்கா நண்டுக்கறிக்கு தோதாக குசினியில் முருங்கை இலைச் சொதி வைத்துக்கொண்டு நின்றார்.

பின் வளவில், புடலங்கொடிக்கு தண்ணீர் விட்டபடி, "இஞ்சாலை வா தம்பி" எனக் குரல் கொடுத்தார் செல்லத்துரை அண்ணை.

நல்ல விசாலமான காணி. குடிபுகுந்த சில மாதங்களுக்குள் வளவைச் சோலையாக்கியிருந்தார்.

கனகாம்பரம், மல்லிகை, நித்திய கல்யாணி என வன்னியில் அவர் நாட்டி வளர்த்த பூமரங்கள் முன்வளவிலும், பின்வளவில் மரக்கறி செடிகள் ஒருபுறமும், வேலியோரமாக கறி மொந்தன் வாழையும் செழித்து வளர்ந்து நின்றன. தோதான இடத்தில் கொடிகளை நட்டுவளர்த்து, புடலை படர அழகான பந்தலும் அமைத்திருந்தார். பின்வளவில் நட்ட கத்தரி ,வெண்டி, மிளகாய்ச் செடிகள் அனைத்தும் காய்த்துக் குலுங்கி மதமதப்பாக நின்றன. வாழைகளும் வஞ்சகம் செய்யவில்லை.

"வணக்கம் அண்ணை! வன்னியை அப்பிடியே வேரோடை கிளப்பி வந்து, பின் வளவிலை வைச்சிருக்கிறியள்" எனப் பேச்சை ஆரம்பித்தேன். "அது சரிதானடா தம்பி, பாவலும் புடலையும் பூசணியும்தான் எனக்கு 'டிமிக்கி' விடுகினம். நிறையப் பூக்குது, ஆனால் பிஞ்சு பிடிக்குதில்லை"என நேரடியாகவே விஷயத்துக்கு வந்தார் செல்லத்துரை அண்ணை.



"நிறையக் காய்க்க, செடிகொடிகளுக்கு கலியாணம் கட்டி வைக்க வேணும்"என்றேன் நான், சிரிக்காமல்.

என்னுடைய பகிடிக்கு எந்தவித ரியாக்சனையும் காட்டாது, "விஷயத்துக்கு வா "என்றார், படு சீரியஸ்ஸாக. எப்பொழுதும் தன்னுடைய விஷயத்தில் அவர் கண்ணாயிருப்பார். அதுதான் அவரது பலம்!

நண்டுக்கறி வாசனை பின் வளவுக்கும் பரவ, எனக்கு வயிற்றைக் கிள்ளியது. நேரத்தை மினக்கெடுத்தாமல், அவருக்கு விளங்கக்கூடிய மொழியில் நான் சொல்லத் துவங்கினேன்.

"பூக்களில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று, 'ஒருலிங்கப்பூக்கள்' மற்றது 'இருலிங்கப்பூக்கள்'"

"லிங்கம்...?"

"ஆண் மகரந்தமும் பெண் சூலகமும் ஒரே பூவில் இருந்தால் அவை இரு லிங்கப்பூக்கள். ஆண் மகரந்தம் தனியாக ஒரு பூவிலும், பெண் சூலகம் தனியாக வேறொரு பூவிலுமிருந்தால், அவை ஒருலிங்கப் பூக்கள். விவசாயிகள் வேறு விதமாக இவற்றை ஆண்பூக்கள், பெண் பூக்கள் எனவும் சொல்வார்கள்.

ஓ!

புடலை, பாவல், பூசணிவகை, பீர்க்கு, கெக்கரி அனைத்தும் ஒரே குடும்பத் தாவரங்கள் (குக்குபிற்றாஷி குடும்பம).

இத்தாவரங்களில் ஆண்பூக்களும் பெண் பூக்களும் ஒரே கொடியில், ஆனால் புறம்பு புறம்பாக இருக்கும். இப்படி இரண்டு வகைப் பூக்களும் ஒரே தாவரத்தில் இருந்தால் அவற்றை ஓரில்லத் தாவரம் என்பார்கள்.

ஓஹோ...!

பனையிலும் பேரீச்சையிலும் ஆண்பூக்களும் பெண் பூக்களும், வேறு வேறு மரங்களில் காணப்படும். இவற்றை ஆண்மரம், பெண் மரம் எனவும் ஈரில்லத் தாவரம் எனவும் அழைப்பார்கள்.

எட அப்பு, நானென்ன, தாவரவியல் சோதனை எடுக்கவே விரிவுரை நடத்துறாய்? உன்ரை அறிவியல் விளக்கங்களை ஒருபக்கம் விட்டிட்டு, புடலை, பாவல், பூசணி விஷயத்துக்கு வா என, கருமத்தில் கண்ணாய் இருந்தார் செல்லத்துரை அண்ணை.

இது பழக்க தோஷம் அண்ணை. காலாதிகாலமாய் இதையே திரும்பத் திரும்ப படிப்பிக்கிறதாலை, வாயைத் திறந்தால் 'ஓட்டமற்றிக்காக' எல்லாம் வந்திடுது. புடலை, பாவல், பூசணி வகைத் தாவரங்களில் முதலில் பூப்பது ஆண்பூக்கள். சற்று தாமதமாகவே பெண்பூக்கள் தோன்றும்"

"இதை கொஞ்சம் விரிவாய் சொல்லு தம்பி"

"குத்துமதிப்பாகச் கொன்னால் பத்து ஆண் பூக்களுக்கு ஒரு பெண்பூ (10:1) என்ற விகிதத்திலேயே புடலை, பாவல், பூசணி வகைக் கொடிகளில், பூக்கள் தோன்றும்"

"அது சரி, என்ரை புடலங் கொடியிலை வெள்ளை வெள்ளையாய் ஊரிப்பட்ட பூக்கள் விரிஞ்சிருக்கு. இதிலை ஆண்பூ எது? பெண் பூ எது?"

"பூவின் அடிப்பகுதி (பூக்காம்புக்கு மேலே) சின்ன புடலங்காய் போல தடித்திருந்தால் அவை பெண் பூக்கள். (பாவல் பெண்பூவில் சின்ன பாவல் காய் போல தடித்திருக்கும்) இது குக்குபிற்றாஷி குடும்ப தாவரங்கள் அனைத்துக்கும் பொதுவானது"

"நீ சொல்லுற விளக்கமெல்லாம் விளங்குது. இனி, பிஞ்சு பிடிக்கிறதுக்கு என்ன வழி அதைச்ச்சொல்லு".

"மகரந்த மணிகள், பெண் குறிக்கு கடத்தப்பட்டு சூலகத்தை அடைந்தால் மாத்திரமே சூலகம் கருக்கட்டி, காயாக மாறும்"

"ஓகே"

"மகரந்தச் சேர்க்கை, பெரும்பாலும் காற்றாலும் ,பூச்சிகளாலும் நடைபெறும். பூச்சிகளால் நடக்கும் தாவரங்களின் பூக்கள் கவர்ச்சிகரமான நிறம் கொண்ட இதழ்களையும் அதிக தேனையும் கொண்டிருக்கும்.புடலங் கொடியின் பூக்கள் பெரும்பாலும் இரவில் மலரும். அதனால்தான் அவை பூச்சிகளுக்கு இரவில் தெரியும் வண்ணம் பால் வெள்ளை நிறமாக இருக்கின்றன"

"தம்பி, நான் கேட்ட கேள்விக்கு நீ இன்னும் மறுமொழி சொல்லவேயில்லை, சுத்தி வளைக்காமல் விஷயத்துக்கு வா"என மீண்டும் அவசரப்படுத்தினார் செல்லத்துரை அண்ணை.

"புடலை, பாவல், பூசணி வகைத் தாவரங்களில் பத்துவீதமான பூக்களே காயாகும். அதுவும், பெண் பூக்களில் பூச்சிகள் மூலம் மகரந்தச்சேர்க்கை நடந்து, சூலகம் கருக்கட்டினால் மாத்திரம் பிஞ்சு பிடிக்கும். அதற்காகத்தான் விவசாயிகள் பண்ணைகள், தோட்டங்களில் தேனீக்கள் வளர்ப்பது"


"குடியிருப்புப் பகுதிகளில், தேனீக்களின் வரத்துக் குறைவு. இதற்கு மாற்று வழி ஏதேனும்.....?"

"அதற்காகத்தான் 'பூக்களுக்கு கலியாணம் கட்டி வைக்க வேணும்'"

(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சு தூரிகைகள்




**P.சஞ்ஜெய்,**
தரம்-2
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.



**உ.அக்சனா,**
தரம்-6
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை




# குடும்பத்துடன் ஆரோக்கிய வாழ்வு



குடும்பம் என்றால் என்ன? நாம் பிறந்ததிலிருந்து எமக்கு அன்பும் ஆதரவும் தரும் உறவுகளின் கூட்டைத்தான் குடும்பம் என்று சொல்வோம். உடல், உள ரீதியாக, சுமுகமாக எவ்வித நோயுமின்றி வாழ்வதே ஆரோக்கிய வாழ்வு என்போம். எமக்கு ஆரோக்கியமாக வாழ சுத்தமான காற்று, நீர், சத்துள்ள உணவு, போதிய நித்திரை, வாழக்கூடிய அழகான சூழல், வாழ்வதற்கு ஓர் இல்லம் என்பனவெல்லாம் தேவை.

**1. குடும்பத்துடன் நேரத்தைக் கழித்தல்**

ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களினதும் ஓய்வான நேரத்தைக் கண்டுபிடித்தால், உடற்பயிற்சிக்காக குடும்பத்தை நீங்கள் எப்போது ஒன்றிணைத்து ஒன்றாக செயற்படுத்த முடியும் என்பதற்கான சரியான நேரத்தைப் பெறுவீர்கள். ஆரம்பத்தில் 30 நிமிட நேரச் செயற்பாடுகளைச் செய்வது மிகவும் நல்லது. இதை நீங்கள் கடைப்பிடித்தீர்கள் என்றால் பின்னர் 60 நிமிட செயற்பாடுகளிலும் ஈடுபடலாம்.

**2. வாராந்த உணவுப் பட்டியலைத் திட்டமிட்டு, உங்கள் உணவைத் தயாரிக்கவும்.**

எமது வாராந்த உணவுப்பட்டியல் எமக்கு ஆரோக்கியமான உணவைச் சரியாகத் தயாரிக்க உதவுகின்றது. முதலில் உங்கள் குடும்பத்தினருக்கு விருப்பமான சத்துள்ள உணவுகளைத் தெரிவு செய்யுங்கள். பிறகு அவற்றை பட்டியற்படுத்துவதன் மூலம் உங்கள் குடும்பத்துக்குரிய வாராந்த உணவுப் பட்டியலை நீங்கள் தயாரித்துக்கொள்ளலாம்.

**3. உங்கள் குடும்பத்தவர்களின் வேலையை எளிதாக்குங்கள்.**

இப்போது நாம் இருக்கும் நவீன உலகத்தில் நாம் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் செய்ய நினைக்கின்றோம். ஆனால் அப்படிப் பட்ட வாழ்க்கை முறை உடலுக்கு நல்லதல்ல. முதலில் முக்கியமான செயற்பாடுகளுக்கு இடமளிக்கவும். பிறகு அதை நேர அட்டவணையில் பட்டியற்படுத்தவும். இதன் மூலம் உங்கள் மன அழுத்தத்தைக் குறைக்க முடியும்.

**4.பெரிய படிமுறைகள் தேவையில்லை; சிறிய படிமுறைகள் போதும்**

நீங்கள் ஆரோக்கியமாக இருக்க எல்லாவற்றையும் ஒரே தடவையில் செய்வீர்கள். ஆனால் அவ்வாறு செய்வதால் கிடைக்கும் பயனின் அளவு குறைவானது. நீங்கள் உங்கள் குடும்பத்துடன் தினமும் காலையில் உடற்பயிற்சி செய்து சத்துள்ள உணவைச் சாப்பிட்டாலே ஆரோக்கியத்துடன் வாழலாம்.

**5. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரையும் தங்கள் பங்கைச் செய்யச் சொல்லுங்கள்**

உங்கள் குடும்பத்தினரின் வயதுக்கேற்ப அவர்களுக்கு வேலைகளை வழங்குங்கள். அவர்களுடைய வேலைகளில் நீங்கள் பங்கேற்கவும். உதவி செய்யவும். சில வேலைகளை சிரமதானம் மாதிரி ஒன்றாகச் செய்யுங்கள்.

**6. எடுத்துக்காட்டாக வாழ்தல்**

நீங்கள் இவ்வாறு சில மாதங்களுக்கு செயற்பட்டால் உங்கள் குடும்பம் அதைப் பழகிவிடும். பிறகு நீங்கள் செய்வதைக் கண்டு இன்னொரு குடும்பம் செய்யும். இதைப்போலே எல்லோரும் செய்ய நாடும் விருத்தியாகிவிடும். நவீன உலகத்தில் குடும்பத்தின் நலம் பேணுவது பெரிய கஷ்டம். ஆனால் நான் சென்னவாறு பின்பற்றினால் உங்களால் நாட்டையே திருத்த முடியும்

**அபிநவன்** , தரம் - 7A
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி


# வெள்ளிக் கிரகம்

விண்ணியல் ஆய்வாளர்கள் ஒரு காலத்தில் வெள்ளியும் பூமியும் இரட்டைப் பிறவி என்று கருதினார்கள். ஏனெனில் வெள்ளியின் குறுக்களவு ஏறக்குறைய பூமியை ஒத்திருக்கிறது. அதாவது இதன் குறுக்களவு, பூமியை விட 650 கிலோ மீற்றர்கள் தான் குறைவானது. பூமியுடன் ஒப்பிடுகையில் 81.5 சதவீதம் நிறை கொண்டது.


ஆனால், இதைத் தவிர பூமிக்கும், வெள்ளிக்கும் வேறு எந்த ஒற்றுமையும் இல்லை. மனிதர்கள் வாழ தகுதியற்ற கிரகம் வெள்ளி. வெள்ளிக் கிரகத்தின் புறவெளி மிகவும் வேறுபாடானது. இது 95 சதவீதம் கரியமில வாயுவால் சூழப்பட்டுள்ளது. அது தவிர, அடர்த்தியான கந்தக அமில மேகங்களால் சூழப்பட்டுள்ளது. அதுவே வெள்ளியின் உட்பரப்பைக் காணத் தடையாக உள்ளது. இந்த மேகங்கள் சூரிய ஒளியின் 76 சதவீதத்தைப் பிரதிபலிப்பதால் வெள்ளி மிகவும் பிரகாசமான கிரகமாகத் தோன்றுகிறது.

சூரியக் குடும்பத்திலேயே மிகவும் சூடான கிரகமாகும். அதாவது புதன் கிரகத்தை விட இரு மடங்கு வெப்பமானது. இத்தனைக்கும் சூரியனிலிருந்து புதனைப் போல இருமடங்கு தொலைவில் வெள்ளி அமைந்துள்ளது. சூரியனின் வெப்பம், வெள்ளிக் கிரகத்துக்குள் கரியமில வாயுவால் தக்க வைக்கப்படுவதுதான் அதிக வெப்பத்திற்குக் காரணம்.

வெள்ளியில் சாதாரணமாக நிலவும் தட்பவெப்ப நிலையான 460 டிகிரி செல்சியல் வெப்பநிலையில் காரீயம் கூட உருகிவிடும். இக்கிரகத்தில் காணப்படும் புறவெளி அழுத்தமும் மிக அதிகமானது. அதாவது கடலுக்குள் ஒரு கிலோ மீற்றர் ஆழத்தில் நீந்துவது போன்ற அழுத்தம் இங்கு நிலப்பரப்பில் காணப்படுகிறது. பிரகாசமாகவும் அழகாகவும் இருக்கும் வெள்ளி பார்த்து ரசிக்கத்தான் உகந்தது. அங்கு சென்று மனிதர்கள் வாழ்வதைப் பற்றி நினைக்கக் கூடப் பார்க்க இயலாது.



## சரியான சாவியை கண்டுபிடிப்போம்






## இலங்கையின் முக்கிய நிலையங்கள்

1. செய்மதி தகவல் தொடர்பு நிலையம் – பாதுக்கை
2. எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம் – சப்புகஸ்கந்த
3. பிறிமா மா ஆலை – திருகோணமலை
4. சீமெந்து தொழிற்சாலை – புத்தளம், காலி
5. ஓட்டுத் தொழிற்சாலை – அம்பாறை
6. பறவைகள் சரணாலயம் – முத்துராஜவெல, குமண, பூந்தல
7. குஷ்டரோக வைத்தியசாலை – மாந்தீவு, மட்டக்களப்பு
8. சீனித் தொழிற்சாலை – கந்தளாய்
9. புற்றுநோய் வைத்தியசாலை – மகரகம
10. காகிதத் தொழிற்சாலை – வாழைச்சேனை
11. மிருகக்காட்சி சாலை – தெஹிவளை




ஒருவருடைய கை விரல் ரேகையைப் போல, இன்னொருவருடைய ரேகை அமையவே அமையாது. இதில், இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால், பிறப்பிலிருந்து இறப்பு வரை, நம் உடலில், எத்தனையோ மாற்றங்கள் ஏற்படுகின்றன.

ஆனால், மாறாமலே இருக்கிற ஒன்று, கை விரல் ரேகைகள்தான். இந்தக் காரணத்துக்காகவே, குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு, பொலிஸார், கை விரல் ரேகைகளையே பெரிதும் நம்புகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

**போ**ர்த்துக்கல் அரசியின் சப்பாத்து வரி என்ற பெயரில் ஒரு கட்டணம் முத்துக் குளிப்பவர்களிடமிருந்து அறவிடப்பட்டது. இந்தப் பணம் மன்னாரில் உள்ள மீனவக் குடும்பங்களின் பிள்ளைகளின் கிறிஸ்தவக் கல்விக்கு வழங்கப்பட்டது.

### வலிகாமம் பகுதிக்கு தயாரிக்கப்பட்ட இரண்டாவது தோம்பு

| கிராமங்கள் | கிராமங்களிலிருந்து கிடைத்த வரி | | | சந்தைகளிலிருந்துகிடைத்த வரி | | |
|---|---|---|---|---|---|---|
| சங்கானை | 274 | 0 | 15 | 031 | 1 | 15 |
| வட்டுக்கோட்டை | 274 | 1 | 10 | 080 | 0 | 0 |
| கொக்குவில் | 021 | 2 | 07 | 016 | 1 | 0 |
| மூளாய் | 057 | 2 | 17 | 009 | 1 | 1 |
| பண்டத்தரிப்பு | 097 | 1 | 19 | 013 | 0 | 0 |
| தொல்புரம் | 126 | 2 | 18 | 030 | 0 | 0 |
| மாதகல் | 127 | 0 | 08 | 027 | 3 | 0 |
| சுழிபுரம் | 188 | 4 | 06 | 048 | 4 | 10 |
| ஆனைக்கோட்டை | 106 | 4 | 06 | 017 | 2 | 0 |
| பலாலி | 086 | 0 | 08 | 024 | 4 | 0 |
| அளவெட்டி | 171 | 2 | 08 | 033 | 3 | 0 |
| மாவிட்டபுரம் | 098 | 4 | 08 | 038 | 4 | 10 |
| மல்லாகம் | 109 | 1 | 07 | 017 | 3 | 0 |
| ஏழாலை | 153 | 4 | 11 | 020 | 2 | 0 |
| வறுத்தலைவிளான் | 060 | 3 | 05 | 010 | 1 | 0 |
| அராலி | 203 | 4 | 11 | 031 | 2 | 0 |
| சிறுவிளான் | 083 | 2 | 05 | 012 | 4 | 0 |
| பெரியவிளான் | 091 | 1 | 09 | 016 | 3 | 0 |
| சண்டிலிப்பாய் | 112 | 0 | 16 | 031 | 1 | 0 |
| நவாலி | 102 | 3 | 15 | 010 | 0 | 00 |
| Magueapathy | 025 | 4 | 13 | 011 | 2 | 10 |

(எந்த ஊர் என்று தெரியவில்லை.அநேகமாக மானிப்பாய் அல்லது மாசியப்பிட்டி என்ற ஊர்களில் ஒன்றாக இருக்கலாம்)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தாவடி | 026 | 4 | 01 | 08 | 2 | 00 |

### தென்மராட்சி கிராமங்களிலிருந்து கிடைத்த வரி

| கிராமங்கள் | கிராமங்களிலிருந்து கிடைத்த வரி | | | சந்தைகளிலிருந்துகிடைத்த வரி | | |
|---|---|---|---|---|---|---|
| எழுதுமட்டுவாள் | 335 | 2 | 06 | 049 | 3 | 00 |
| கைதடி | 177 | 1 | 17 | 028 | 1 | 10 |
| விடத்தற்பளை | 2522 | 17 | 020 | 0 | | 10 |
| குடமியன் | 069 | 4 | 04 | 004 | 2 | 15 |
| கொடிகாமம் | 076 | 1 | 3 | 032 | 3 | 10 |
| மிருசுவில் | 177 | 1 | 06 | 027 | 1 | 00 |
| பாலாவி | 077 | 2 | 14 | 023 | 1 | 00 |
| இயற்றாலை | 067 | 1 | 06 | 026 | 4 | 05 |
| மண்டுவில் | 095 | 0 | 17 | 029 | 3 | 15 |
| குடத்தனை | 116 | 4 | 09 | 019 | 4 | 00 |
| கச்சாய் | 080 | 4 | 11 | 003 | 4 | 15 |
| உசன் | 039 | 0 | 15 | 012 | 1 | 15 |
| கெற்பேலி | 073 | 3 | 07 | 032 | 3 | 15 |
| வரணி | 526 | 0 | 01 | 010 | 0 | 15 |
| சாவகச்சேரி | 196 | 0 | 08 | 031 | 1 | 0 |
| தனங்கிளப்பு | 045 | 2 | 17 | 005 | 2 | 0 |
| கோயிலாக்கண்டி | 042 | 3 | 01 | 031 | 1 | 0 |
| மந்துவில் | 085 | 4 | 02 | 029 | 1 | 15 |
| மீசாலை | 154 | 1 | 00 | 020 | 2 | 10 |
| அல்லாரை | 058 | 3 | 17 | 005 | 2 | 00 |
| போக்காட்டி | 097 | 0 | 17 | 009 | 4 | 15 |

(வெள்ளம்போக்காட்டி)

### வலிகாமத்தில் சாதி ரீதியான தொழில்களுக்கும் வரி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சரசாலை | 051 | 2 | 02 | 010 | 0 | 15 |

சகல,சாதியினரிடமிருந்தும் வரி அறவிடப்பட்டுள்ளது சில சாதிகளின் பெயர்கள் போர்த்துக்கீசமொழியில் இருப்பதால் சாதி ரீதியான வரிவிபரங்களை இங்கு தனித் தனியாகத் தரவில்லை. கரையார், திமிலர், முக்குவர், நெசவாளர், துணிகளுக்கு சாயம் தோய்ப்பவர்கள், சலவைத்தொழிலாளர், சிகை அலங்கரிப்பாளர் , பறைமேளமடிப்போர்,நாட்டு கோட்டை செட்டிகள், பொற்கொல்லர், கொல்லர், தச்சர்,பரதேசிச் செட்டிகள், சோனகர், பால் வியாபாரிகள், தச்சு வேலை செய்வோர், நகைத் தொழிலாளர், கொல்ல வேலை செய்வோர் என அனைவரிடமும் வரி அறவிடப்பட்டுள்ளது. கடந்தவாரம் வெளிவந்த வலிகாம தோம்புகள் பற்றிய விபரத்தில் Malpattu, Culi kutty ஆகிய கிராமங்களை தெரிந்துகொள்ள முடியாமையால் அதனை போர்த்துக் கீசமொழியில் இருந்தவாறே பிரசுரிக்கமுடிந்தது. நண்பர் ஒருவர் Malpattu என்பது மல்வமாக இருக்கலாம் எனவும் Culikuttyஎன்பது சிறுப்பிட்டியாக இருக்கலாம் எனவும் கூறியுள்ளார் அவரது கூற்று ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவுள்ளது.

*(வரலாறு நீளும்)*



# ஊர்ப்புதினம்

புதினம் - 2

○ இராகவன்

உண்மையில ஆமி எண்ட சொல்லை இண்டைக்குத்தான் நான் காதால கேட்கிறன். திக்குத் திக்காக எல்லாப் பொடியளும் ஓடேக்குள்ள , நான் சிவாவுக்குப் பின்னால தான் ஓடினன். 'அவன் எப்பிடியோடினாலும் வீட்டைதானே போவான்?' எண்ட எண்ணத்திலதான் அவனுக்கு புறத்தால ஓடினன். இரண்டு முடக்குத் தாண்டினாப் போல சிவா ஓடாமல் நிண்டிட்டான். 'ஓட்டமற்றிக்கா' அவனுக்கு பின்னால் ஓடின நானும் நிண்டிட்டன். எனக்குப் பின்னால ஓடி வந்த அப்பனும் நிண்டிட்டான். இந்த 'கப்பில' அப்பனைப் பற்றிக் கொஞ்சம் சொல்லோணும்.

அவன்ர முழுப் பெயர் சிவாச்செல்லையா. அந்தப் பெயரைக் கூப்பிடுறது கொஞ்சங்கஸ்ரம் எண்டதால நாங்களெல்லாம் அவனை அப்பன் எண்டுதான் கூப்பிடுவம். ஆள் நல்ல சிவலை. கொஞ்சம் குண்டன். நல்ல சண்டியன். எல்லாரையும் வெருட்டித்தள்ளுவான். ஒண்டுக்கும் பயப்பிடாதவன் எண்டுதான் நான் அதுவரைக்கும் நினைச்சிருந்தன்.
ஆனால் 'ஆமி' யெண்டோண்ண அவன் எனக்குப் பின்னால் விழுந்தடிச்சு ஓடி வந்ததைப் பார்த்தால் போல அந்த நேரத்திலயும் எனக்குச் சிரிப்பு வந்திட்டுது. எண்டாலும் சிரிக்கேல்ல. சிரிச்சா அவன் கட்டாயம் அடிப்பான் . ஒரு மாதிரிச் சிரிப்பையடக்கிப் போட்டன். "இப்ப என்னடா செய்வம்?" எண்டு அப்பன் என்னைப் பார்த்துக் கேட்டான். எனக்கு என்ன சொல்லுறதெண்டு தெரியேல்ல. இந்த சிவா இருக்கிறானே, அவனுக்கொரு பழக்கமிருக்கு. ஒண்டுக்கும் கெலிக்கமாட்டான். பயந்தாலும் அதைப் பெரிசா வெளியில காட்டிக் கொள்ளமாட்டான். எதுக்குந் துணிஞ்சவன் மாதிரி இருப்பான். இப்ப சிவா கதைச்சான்
"டேய்! ஒண்டுக்கும் பயப்பிடத் தேவையில்லை. எனக்கு ஆமியைப் பற்றித் தெரியும். அவங்கள் மெயின் றோட்டால தான் போவங்கள். உள்ளுக்கை வரமாட்டாங்கள். இண்டைக்கு எங்கட வீட்டை ஒட்டகச் சிவிங்கி வரும். அப்பா ஸம்பியாவிலிருந்து அனுப்பியிருக்கிறார். நான் கெதியாப் போகோணும்"



அதைக் கேட்டிட்டு அப்பன் வாயப் பிளந்தான்.
"என்னது? ஒட்டகச் சிவிங்கியா?"
"ஓ! நம்பாட்டில் என்னோட வா காட்டுறன். ஏற்கனவே எங்கட வீட்டை சிங்கம், புலி, கரடி, யானையெல்லாம் நிக்குது. எல்லாம் அப்பாதான் ஸம்பியாவிலயிருந்து அனுப்பினவர். இரண்டு மாதத்துக்கு முந்தி 'வேற என்ன வேணுமெண்டு எழுது அனுப்பிவிடுறன்' எண்டு அப்பா எனக்கு கடிதம் போட்டவர். நான் ஒட்டகச்சிவிங்கி வேணுமெண்டு எழுதினன். அதுதான் இண்டைக்கு வருகுது" எண்டு சிவா சொன்னதை அப்பன் மட்டுமில்ல நானும் முழுசா நம்பிட்டன்.
"என்ன நீ என்னோடை வாறியா? எனக்கு நேரம் போட்டுது" எண்டு சிவா இரண்டு எட்டு முன்னுக்கு வைக்க , "ஓமோம் நானும் வாறன். நில் நில்" எண்டு அப்பன் அவனுக்குப் பின்னால ஓட, நான் அவங்களைப் பின் தொடர்ந்தன். எண்டாலும் எனக்கொரு சந்தேகம். சிவா வீட்டில இந்தச் சிங்கம், புலி, கரடி யானையெல்லாம் நிக்குதெண்டால் அம்மா எப்படியும் எனக்குச் சொல்லியிருப்பாவெல்லோ? இதைப் பற்றி அவா ஒருநாளும் எனக்குச் சொல்லேலையே. ஏன் சொல்லேலை ? சில வேளை அம்மாவுக்கு இது தெரியாமலிருக்குமோ?

*(இன்னும் சொல்லுவன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமே அறிந்து சுமையை ஏற்று...




ம.மயூரபாலன்

ஒரு இளைஞன் தனது பட்டப்படிப்பை முடித்துவிட்டு மீண்டும் தனது கிராமம் நோக்கி சென்றுகொண்டிருந்தான். அவன் தனது கிராமத்தை அண்மித்த பொழுது அங்கே ஒரு முதியவர் முதுகில் பெரிய சுமையைச் சுமந்தபடி மெதுவாக நடந்து வந்து கொண்டிருப்பதை கண்டான். அவன் அந்த முதியவரிடம் "ஐயா நான் இப்பொழுதுதான் எனது வாழ்க்கையை ஆரம்பிக்கப் போகிறேன். நீங்கள் பல வருடங்கள் வாழ்ந்து பலவற்றை அனுபவித்த ஒருவர் போல தோன்றுகிறீர்கள். நான் எனது வாழ்க்கையை இலகுவாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு எனக்கு ஏதாவது அறிவுரை சொல்லுங்கள்" எனக் கேட்டான். அதற்கு அந்த முதியவர் தனது சுமையை கீழே இறக்கி வைத்துவிட்டு நேராக நிமிர்ந்து அவனைப் பார்த்தபடி நின்றார். பின்னர் எதுவும் கூறாது மீண்டும் அந்தச் சுமையைத் தூக்கி தனது முதுகில் வைத்தபடி நடந்து சென்றுவிட்டார். அந்த இளைஞனுக்கோ ஒன்றும் புரியவில்லை. 'என்ன இது? நான் கேட்டதற்கு இவர் ஒன்றுமே சொல்லவில்லையே' என எண்ணியபடியே வீட்டைச் சென்று அடைந்தான்.

வீட்டுக்குச் சென்றதும் அவன் தனது தந்தையிடம் தெருவில் நடந்த சம்பவத்தை கூறினான். "நான் எவ்வளவோ கேட்டும் அந்த பெரியவர் எனக்கு எதுவும் கூறவில்லை "என்பதை கவலையுடன் தெரிவித்தான். அதற்கு அவன் தந்தை "அந்தப் பெரியவர் உனக்கு வாழ்க்கையில் மிகவும் முக்கியமான பாடத்தைச் சொல்லித் தந்திருக்கின்றார். அவர் அந்தச் சுமையை கீழே இறக்கி வைத்துவிட்டு நேராக நிமிர்ந்து நின்றார். அதனுடைய அர்த்தம் அதிகம் சுமையை ஏற்றாதே. அதிகம் சுமையை ஏற்றினால் நீயும் அவ்வாறுதான் உனது வாழ்விலே சுமையினாலே கஷ்டப்பட்டு வாழவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். உனக்கு அதனை அவர் வார்த்தைகளாலே கூறியிருந்தால் சில வேளைகளில் நீ அதனை மறந்து போயிருப்பாய். ஆனால் செய்கையில் காட்டியதால் அது உனது வாழ்நாள் முழுவதற்கும் நினைவில் இருக்கும்" என கூறினார். இன்று யார் நமக்கு இவ்வாறான அறிவுரைகளைக் கூறுகிறார்க்கள்? காலையிலிருந்து மாலைவரை எங்கு பார்த்தாலும்"ஒன்றுக்கு இரண்டு வீட்டை வாங்குங்கள்", "காரை வாங்குங்கள்", "சுமைகளைக் கூட்டுங்கள் கூட்டுங்கள்" எனும் சத்தம்தான் கேட்கின்றது. ' உங்களது வாழ்வை எளிமையாக வைத்துக் கொள்ளுங்கள்' எனக் கூறுபவர்கள் மிகவும் அரிதாகவே கிடைப்பார்கள். உலகிலே பணத்தைச் சம்பாதியுங்கள் புகழை சம்பாதியுங்கள் வெற்றியை சம்பாதியுங்கள் என்ற கோஷங்களின் மத்தியிலே நமது உண்மையான தேவை என்ன என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும்.

மரம் வெட்டுபவன் ஒருவன் மரத்தை பிளப்பதற்காக ஆப்பு ஒன்றை மரத்தினுள் அடிக்கிறான். அங்கு வந்த குரங்கு தனது கால் அந்த இடைவெளியின் உள்ளே இருப்பது தெரியாது மிகவும் கஷ்டப்பட்டு அந்த ஆப்பை வெளியே இழுக்கின்றது. அந்த ஆப்பை இழுப்பது ஒரு இலகுவான காரியம் அல்ல. அந்தக் குரங்கும் தான் எவ்வளவோ முயற்சி செய்து அந்த ஆப்பை இழுக்கின்றது. அதன் பின்னர் அது அழுது கூக்குரலிட்டு வேதனையில் வாடுகின்றது. இப்பொழுது யார் அந்த குரங்குக்கு உதவப் போகிறார்கள்? இதனைத்தான் பட்டினத்தார் "ஆப்பிழுத்த குரங்கு போல் கிடந்து உழல அகப்பட்டீரே" எனக் கூறியுள்ளார்.



இதுபோலவே நாமும் மிகவும் கஷ்டப்பட்டு செய்கின்ற முயற்சிகள் சில வேளைகளில் நம்மை நமது நிம்மதி ,ஆனந்தம் என்பவற்றில் இருந்து தூர எடுத்துச் செல்கின்றன என்பதனை நாங்கள் புரிந்து கொள்ளவேண்டும். உலகப் புகழ்பெற்ற குத்துச்சண்டை வீரரான மைக் டைசன் என்பவர் பல பட்டங்களையும் விருதுகளையும் வென்றெடுத்த ஒருவர். அதற்காக அவர் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர், இரத்தம் சிந்தியவர். ஆனால் அண்மையில் ஓர் உரையாடலில் இளம் வயதில் தான் செய்த தவறுகளுக்காக வருத்தப்பட்டு, தான் பெற்ற பட்டங்கள் பதக்கங்கள் எல்லாம் குப்பைகளுக்கு சமம் என கூறினார். அவரது வாழ்க்கையின் அனுபவங்களை நாம் ஏன் ஒரு பாடமாக எடுத்துக் கொள்ளக் கூடாது?

நாம் எங்காவது பயணம் செல்வது என்றால் நமக்கு தேவையான பொருள்களை மட்டும் எடுத்துச் செல்லவேண்டும். இல்லையென்றால் அந்தப் பொதிகளைச் சுமப்பதில் ஏற்படும் கஷ்டத்தால் பயணத்தில் நாம் பெறக்கூடிய மகிழ்ச்சியை இழந்துவிடுவோம். இவ்வாறான நிகழ்வுகளை நாங்கள் புகையிரதங்களில்,. பேருந்துகளில் பார்த்திருக்கின்றோம். பொதிகளைத் தூக்க முடியாது தூக்கிவந்து அவற்றை கண்காணிப்பதிலே அவர்களது பயணம் முடிந்துவிடுகிறது. நாமும் நமது வாழ்வில் உடலிலும் மனதிலும் தேவையற்ற பாரங்களை சுமக்கும் பொழுது அவை நமது வாழ்க்கைப் பயணத்தின் ஆனந்தத்தை அனுபவிப்பதில் இடையூறாக அமைந்து விடுகின்றன.

நாங்கள் பாடசாலையில் கற்ற விஷயங்களில் அநேகமானவை பரீட்சை முடிந்த பின்னர் நமக்கு உதவுவதில்லை. வேலைக்காக நாங்கள் கற்றுக் கொண்ட விஷயங்கள் இளைப்பாறிய பின்னர் நமக்கு உதவுவதில்லை. ஆனால் எந்த ஒரு கல்வி நமது இறுதி மூச்சுவரை நமக்கு உதவி செய்யுமோ அந்தக் கல்வியையும் நாம் கற்றுக் கொள்வது மிகவும் அவசியமாகும். அந்தக் கல்வியை சோக்கிரட்டீஸ் "தன்னை அறியும் அறிவு" என்றார். திருமூலர் "தன்னையறியத் தனக்கொரு கேடில்லை" என்றார்.

ஆனால் நமது வாழ்க்கையில் என்ன நடைபெறுகின்றது? இந்த உலகம் ஒரு விடுதி நாங்கள் எல்லோரும் வழிப்போக்கர்கள் எனச் சொல்லப்பட்டுள்ளது. இந்த வாழ்க்கை நாலு நாட்கள் நடைபெறும் ஒரு திருவிழா என ஞானிகளும் மகான்களும் கூறியுள்ளார்கள். அப்படியென்றால் இந்த வாழ்க்கையை நாங்கள் சுகமாக உணர்கிறோமா அல்லது சுமையாக உணர்கிறோமா? இந்தக் கேள்விக்கான பதிலை நாங்கள் மட்டுமே கொடுக்க முடியும். மற்றவர்களுக்கு நாங்கள் எந்தவொரு பதிலையும் கொடுத்துச் சமாளிக்கலாம். ஆனால் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியின் முன்னால் நின்று நமக்கு நாமே தவறான பதிலைக் கொடுக்க முடியாது. இந்த வாழ்க்கை சுகமானது என்றால் அதற்காக நன்றியை உணரலாம். இல்லையென்றால் வாழ்க்கையை எவ்வாறு சுகமானதாக மாற்றுவது எனும் தேடலைத் தொடங்கலாம்.

# பத்தினிப் பெண்ணின் சாபத்தால் பாழடைந்த ஊர்!



மயூ

போர் அச்சத்தால், இயற்கை அழிவுகளால் கிராமங்களை விட்டு மக்கள் இடம்பெயர்வதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள், பார்த்திருப்பீர்கள். ஆனால் தமிழ்நாட்டில் ஓர் ஊரே இடம்பெயர்ந்தமைக்கு, பத்தினிப் பெண் ஒருவரின் சாபம் காரணம் என்கிறார்கள். நம்ப முடியாவிட்டாலும் இப்போது அந்த ஊர் வெறிசோடிப்போய்த்தான் இருகின்றது.

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் இருக்கிறது மீனாட்சிபுரம். 2011 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி இந்தக் கிராமத்தில் வசித்தவர்கள் ஆயிரத்து 132 பேர். இப்போது அந்தக் கிராமத்தில் இருப்பவர் ஒரே ஒருவர்தான்.

முன்னர் பச்சைப் பசேல் என்று இருந்த கிராமம் இப்போது வறண்டுபோய், பற்றைக் காடாக இருக்கின்றது. அந்தக் கிராமத்தில் உள்ள 50 க்கும் மேற்பட்ட வீடுகள் சிதிலமாகி கிடக்கின்றன. வீடுகளைச் சுற்றிப் புதர் மண்டி, பாழடைந்து போயிருக்கின்றன. அந்தக் கிராமத்தில் இப்போதும் ஒற்றை மனிதராகப் பிடிவாதமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார் கந்தசாமி என்கின்ற 72 வயது முதியவர். இந்தக் கிராமத்தின் இப்போதைய நிலைமைக்கு ஜமீன் குடும்பத்துப் பெண்ணின் சாபம்தான் காரணம் என்று நம்புகின்றனர் கிராம மக்கள். கிராமத்தில் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் கந்தசாமியும் அப்படித்தான் நம்புகின்றார்.

"எனது அப்பன், ஆத்தா, மனைவி வாழ்ந்த இந்த மண்ணை விட்டுப் போவதற்கு எனக்கு மனமில்லை. இப்போது அவர்கள் இல்லை. எனது பிள்ளைகளுக்கு திருமணம் செய்து கொடுத்துவிட்டேன், உயிரை இங்குதான் விடுவேன்" என்கிறார் கந்தசாமி.

அந்தப் பகுதியில் உள்ள ஜமீன் ஒருவர் தனது மனைவியின் மீது சந்தேகப்பட்டார். அதனால் அவர் தனது மனைவியை ஆட்களை வைத்துக் கொலை செய்தார். அந்தப் பெண் இட்ட சாபம்தான் இந்தக் கிராமம் பாழடைந்து போனதற்குக் காரணம் என்று கூறுகின்றார் கந்தசாமி.

"நான் விவசாயம் தான் முன்னர் செய்தேன். வண்டிச் சவாரி என்றால் எங்கு நடந்தாலும் விடமாட்டேன். அங்கு சென்று கலந்துகொண்டு பரிசு பெற்றுவிடுவேன். எனது மனைவி ஒன்றுக்கும் மறுப்புச் சொல்ல மாட்டார். அவர் இப்போது இல்லை. நான் வாழ்ந்த வீட்டில் தான் என் மூச்சு நிற்க வேண்டும் என்ற வீம்புடன் இங்கு வாழ்ந்து கொண்டிருகின்றேன்" என்று சிரிக்கிறார் கந்தசாமி.

அவரது மகன்கள் அவருக்கு மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா கொடுக்கிறார்கள். கந்தசாமி அவற்றில் பொருள்களை வாங்கி வைத்துக் கொள்கிறார். இரு நாள்களுக்கு ஒருமுறைதான் சமைப்பாராம். ஏனைய நேரங்களில் அங்கு நடமாடித் திரிவாராம்.

வருடத்துக்கு ஒருமுறை கிராமத்தவர்கள் வந்து மாரியம்மன் திருவிழாவில் கலந்துகொள்கின்றனர். தங்கள் வீடுகளுக்கு முன்பாக கொட்டகை அமைத்து ஒரு நாள் தங்கி திருவிழாவை முடித்த கையோடு, தாம் இப்போது வாழும் ஊருக்குச் சென்று விடுகிறார்கள்.

இந்த ஊர் பாழடைந்து போனதற்கு அந்தப் பகுதியை ஆக்கிரமித்துள்ள காற்றாலைகள், மழையின்மையால் ஏற்பட்ட வறட்சி எனப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால் அந்தக் கிராம மக்கள் பெண்ணின் சாபமே காரணம் என்று இன்னமும் நம்புகின்றனர்.

என்னவாக இருந்தாலும் பச்சைப் பசேல் என்று இருந்த கிராமம் ஒன்று இப்போது வரைபடத்தில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டிருப்பது வேதனைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான் 2.0



○ ஆர்.பிரகாஷ்

தீவிர அடிப்படைவாதம் என்பதுதான் தலிபான்களின் சித்தாந்தம். கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு முன்னைய ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சி பெண்களுக்கும் மனித உரிமைகள் ஆர்வலர்களுக்கும் நரக வேதனையாக அமைந்தது. ஆனால் அமெரிக்காவின் வெளியேற்றத்தின் பின்னர், அஸ்ரப் கானியுடைய ஆட்சியை அப்புறப்படுத்திவிட்டு அரியணை ஏறியுள்ள தலிபான்களின் மறுவருகை கொஞ்சம் ஆச்சரியப்படுத்தும் வகையில் தான் அமைந்துள்ளது.

தலிபான்களின் முன்னைய ஆட்சியில் தொலைக்காட்சியைப் பார்த்தமைக்காகவே பெண்கள் கல்லால் எறிந்து கொல்லப்பட்டனர். ஆனால், தற்போது தலிபான்களின் எழுச்சி பற்றியும் காபூலின் நிலை பற்றியும் பெண் செய்தியாளருக்கு செவ்வி கொடுத்துள்ளார் தலிபான் அதிகாரி. ஆப்கானிஸ்தான் மக்களின் குறிப்பாக அந்த நாட்டுப் பெண்களின் புருவங்கள் தாம் காண்பது கனவா அல்லது நனவா என்ற மயக்கத்தில் உறைந்துள்ளன. அந்தளவுக்கு தீவிரம் மிக்கதாக மாற்றம் மிக்கதாக தலிபான்களின் மறுவருகை அமைந்துள்ளது.

உலகத்துடன் இசைந்தோடி சில மாற்றங்களை சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற் போல் தலிபான்கள் நடைமுறைப்படுத்த எத்தனிக்கின்றனர் என்பது அவர்களின் அண்மைக்காலச் செயற்பாடுகளில் இருந்து தெட்டத்தெளிவாகவே புலப்படுகின்ற விடயம்தான். இதில் அவர்கள் சவூதி அரேபியாவைப் பின்பற்றுகின்றனர்.

தீவிர பழமைவாத நாடான சவூதி கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொண்டுள்ள விட்டுக் கொடுப்புக்களும் மாற்றங்களும் அபரிமிதமானவை. பெண்கள் கார் செலுத்த அனுமதி, மெக்கா, மெதீனா பாதுகாப்புப் பணியில் பெண்களுக்கு இடம், சுற்றுலாப் பயணிகளான பெண்களுக்கு சவூதியின் பழமைவாதச் சட்டங்களில் இருந்து முழு விலக்கு, 18 வயதுக்கு மேற்பட்ட சவூதிப் பெண்கள் தமது துணையின் அனுமதியின்றி வெளியில் செல்லலாம் இவ்வாறு நீள்கின்றது இந்தப் பட்டியல். இவை சாதாரணமான விடயங்கள்தானே என்று எம்மில் பலருக்கும் தோன்றலாம். ஆனால், பழைமை வாதத்தில் ஊறித்திளைத்த சவூதிக்கு இது இமாலய மாற்றம். ஏன் சவூதி இவ்வாறான மாற்றங்களைச் செய்கின்றது? என்று கேட்டால், அதற்கு 'உலகப் பொருளாதாரப் போரில் தன் இருப்பைத் தக்கவைப்பதற்காகவே' என்பதுதான் பதில். எண்ணெய் வளம் நிறைந்த நாடாக சவூதி இருக்கலாம், ஆனால் ஒரு கட்டத்தின் பின்னர் எண்ணெய்க்கு இருக்கும் கிராக்கி உலக நாடுகளிடையே இருக்குமா என்றால் நிச்சயம் இல்லை. இப்போதே ஏராளமான நாடுகள் பசுமைப் புரட்சிக்குள் இறங்கிவிட்டன. இலத்திரனியல் வாகனங்கள் அணிவகுத்துவிட்டன. இப்படியிருக்கையில் எண்ணெய் வளத்தை வைத்து என்னதான் செய்வது?

அதனால்தான் 'மிஷன் 2030' என்ற திட்டத்தின் கீழ் சுற்றுலாவை முக்கிய துறையாக மாற்ற சவூதி எத்தனிக்கின்றது. சுற்றுலாவிகளை குறிப்பாக ஐரோப்பியச் சுற்றுலாவிகளைக் கவர வேண்டுமாயின் ஐரோப்பியர்களுக்கு ஏற்ற திட்டங்கள் இருக்க வேண்டும். அதில் முக்கியமானவை தான் பெண்ணியம் சார் சிந்தனைகள். இதனால்தான் பழமைவாதத்தில் இருந்து சவூதி மெல்ல விடுபடுகின்றது.

சவூதிக்கே இந்த நிலைமையென்றால் தலிபான்களின் நிலை என்னவாகும்? வெறும் அடிப்படைவாதத்தையும் பழைமை வாதத்தையும் வைத்திருந்தால் தலிபான்களின், ஆப்கானின் பொருளாதாரம் எதை வைத்துக் கட்டமைக்கப்படும்? இதனால்தான் உலக நாடுகளிடையே தனக்கு ஓர் அங்கீகாரத்தைத் தேடுவதற்கு தலிபான் எத்தனிக்கின்றது. அதற்கேற்பதான் சில நகர்வுகளை மேற்கொள்கின்றது. அடுத்தடுத்த வாரங்களில் தலிபான்களிடம் இருந்து மேலும் சில அதிர்ச்சிகள் வரக்கூடும். அதற்கான அத்திபாரம்தான் தற்போது இடப்பட்டுள்ளது.

இலக்கிலா



## விளையாட்டு

○ ஆர்.லயனல்

# ஜடேஜா நீக்கமா?




இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இருந்து இந்திய அணியின் சகலதுறை வீரரான ஜடேஜா நீக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன. இங்கிலாந்து அணித் தலைவர் ரூட்டை இலக்குவைத்தே இந்த நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. முடிவடைந்த இரு ஆட்டங்களிலும் ரூட் இரு சதங்களைப் பதிவுசெய்தார். இந்திய அணி தொடரில் 1:0 என்று முன்னிலையில் உள்ள போதிலும் ரூட்டை ஆட்டமிழக்கச் செய்வதற்கு இந்திய வீரர்கள் படாதபாடுபட்டனர். ரூட் விடயத்தில் இந்தியாவின் ஒட்டுமொத்தப் பந்துவீச்சு வரிசையும் தோற்றுவிட்டது என்பதுதான் உண்மை. ஜடேஜா துடுப்பாட்டத்தில் கனதியான பெறுபேற்றை வழங்கிய போதிலும் பந்து வீச்சில் அவரால் சிறப்பாகச் செயற்பட முடியவில்லை. மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் இடம்பெறும் லீட்ஸ் மைதானம் கொஞ்சம் சுழலுக்கும் எடுபடும். இதனால் ஜடேஜாவுக்குப் பதிலாக அஸ்வினைக் களமிறக்க இந்திய அணி திட்டமிட்டுள்ளது. அத்துடன் அஸ்வினின் பந்துவீச்சில் ரூட் கொஞ்சம் தடுமாற்றம் காட்டியுள்ளமை கடந்த ஆட்டங்களின் பதிவுகள். இதுவும் அஸ்வினை வைத்து இந்திய அணி வியூகம் வகுக்க காரணமாகியுள்ளது.

**'அஸ்வின் வந்தால்
பஸ்பமாவாரா ரூட்?'**



# ஆக்ரோஷம் சரியானதா?

இங்கிலாந்துக்கு எதிராக இந்திய அணி லோர்ட்ஸ் மைதானத்தில் பெற்ற வெற்றியின் பின்னர், இந்திய அணி மீது ஏகப்பட்ட விமர்சனங்கள் குவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இந்திய அணியினர் வெளிப்படுத்திய ஆக்ரோஷம் பெரும் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

முதலாவது இன்னிங்ஸில் பும்ரா துடுப்பெடுத்தாடும்போது இங்கிலாந்து அணியின் வீரர்கள், குறிப்பாக பட்லர் சில வார்த்தைகளால் பும்ராவைச் சீண்டியிருந்தார். நடுவர்கள் தலையிட்டும் இந்த மோதல் இருந்தது. இதன் பின்னர்தான் கதையே ஆரம்பித்தது. இங்கிலாந்து வீரர்கள் துடுப்பெடுத்தாட வரும்போது கோலி உச்ச ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தினார். பட்லரை மறித்து பும்ராவுக்கு நேர்ந்த கதிக்குப் பதிலடி கொடுத்தார். குறிப்பாக இங்கிலாந்து அணியின் 'ட்ரெய்ல் என்ட்' வீரர்கள் துடுப்பெடுத்தாட வரும்போது அவர்களை இலக்குவைத்து காயத்தை ஏற்படுத்தும் வகையில் பவுன்சர் பந்துகள் இந்திய வீரர்களால் வீசப்பட்டன. இதற்கு இந்திய வீரர்களுக்குப் பலர் கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர். அண்டர்சனை எதிர்த்து விளையாடத் திராணி இல்லாத கோலி, அண்டர்சனுக்குக் காயத்தை ஏற்படுத்திவிட்டு இங்கிலாந்தின் பந்துவீச்சு வரிசையைப் பலவீனப்படுத்த திட்டமிட்டுள்ளார் என்றும்கூட விமர்சிக்கப்பட்டது, விமர்சிக்கப்படுகின்றது. எனினும், பீற்றர்சன், வோகன் உள்ளிட்ட பல ஜாம்பவான்கள் இந்திய அணியினர் செய்தது சரி என்றும் இங்கிலாந்து வீரர்களே தேவையற்ற விதத்தில் நடந்துகொண்டு அதற்குரிய வினையை அனுபவித்துள்ளனர் என்றும் காட்டமாகத் தெரிவித்துள்ளனர். எது எப்படியோ ஒன்றுமட்டும் உண்மை. டோனியின் தலைமையின் கீழ் இந்திய அணிக்கு இங்கிலாந்திலும், ஆஸ்திரேலியாவிலும் நடந்த வார்த்தைச் சீண்டல்கள் தற்போது கோலியின் தலைமையின் கீழ் விளையாடிவரும் இந்திய அணியிடம் எடுபடாது. இதற்கு முன்னைய தொடர்களிலும் இது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது இங்கிலாந்துத் தொடரிலும் அதுவே மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

**' நீ பற்ற வைத்த நெருப்பொன்று
உன்னை எரிக்கக் காத்திருக்கும்'**

**முடக்க நிலை காரணமாக மௌனமொழி,
சொற்சிலம்பம் போன்ற வழமையான
அம்சங்கள் இம்முறை வெளியாகவில்லை.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவர்கள் ஆண்ட நாடு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


பதினெட்டாம் நூற்றாண்டு வரையும் ஆப்கானிஸ்தான், இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்தது. ஆப்கானிஸ்தான் மக்களில் காபூல் உட்பட ஏனைய நகரங்களில் வசிப்பவர்கள் ஈரானிலிருந்து வந்து குடியேறியிருக்கலாம் என வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால் கந்தஹார் நகரில் வசிப்பவர்கள் தெற்காசிய மக்களின் குறிப்பாக பாகிஸ்தானியர்களின் சாயலை ஒத்தவர்களாகவே காணப்படுகின்றனர். எனவே கந்தஹார் இந்தியாவுடன் இணைந்திருந்தது என்றே வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.




ஆப்கானிஸ்தானில் கண்டெடுக்கப்பட்ட விஷ்ணு,முருகன் சிலைகள்

வேதகாலத்தில் ஆப்கானிஸ்தான் 'காந்தர்வர்களின் தேசம்' என அழைக்கப்பட்டது.மகாபாரதத்தில் வரும் கௌரவர்களின் தாயும் திருதராட்டிரனின் மனைவியும், துரியோதனனின் தாயுமான காந்தாரியின் நாடே கந்தஹார் என கூறப்படுகிறது. (Kanthari, kantha+har) பதன் மாகாணத்தில் (கந்தஹார்) வசிப்பவர்களிடையே இந்திய சாதி அமைப்பு முறை இப்போதும் காணப்படுகிறது. இவர்கள் இந்தியாவின் பீகார், பஞ்சாப் மாநில மக்களின் சாயலை ஒத்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

**வேதகாலத்தில் ஆப்கானிஸ்தான் 'காந்தர்வர்களின் தேசம்' என அழைக்கப்பட்டது.மகாபாரதத்தில் வரும் கௌரவர்களின் தாயும் திருதராட்டிரனின் மனைவியும், துரியோதனனின் தாயுமான காந்தாரியின் நாடே கந்தஹார் என கூறப்படுகிறது.(Kanthari, kantha+har) பதன் மாகாணத்தில் (கந்தஹார்) வசிப்பவர்களிடையே இந்திய சாதி அமைப்பு முறை இப்போதும் காணப்படுகிறது.**







கி.மு.150 - 130 காலப்பகுதியில் ஆப்கானிஸ்தானில் பௌத்தத்தின் செல்வாக்கு அதிகரித்தது. கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் ஆப்கானிஸ்தானில் மஹாயான பௌத்தமும் பாளி மொழியும் செல்வாக்குப் பெற்று விளங்கின. அதுவரையும் ஆப்கானிஸ்தான் ஒரு இந்து இராச்சியமாகவே இருந்தது. மிகிரகுலா என்ற சைவ சமயத்தைச் சேர்ந்த அரசனும் அவனது தந்தை தோரமானனும் கி.பி.5 ஆம் நூற்றாண்டில் காஷ்மீர், ஆப்கானிஸ்தானின் கந்தஹார். பஞ்சாப் உட்பட மத்திய இந்தியா, வடஇந்தியா முழுவதையும் ஆட்சி செய்தனர் என விக்கிப்பீடியா கூறுகிறது.மிகிரகுலா 'சைவசமயத்தைச்' சேர்ந்த அரசன் என்றே விக்கிப்பீடியா கூறுகிறது; இந்து என்ற சொல்லை விக்கிபீடியா பயன்படுத்தவில்லை; இந்து சமயத்தின் ஒரு பிரிவான 'சைவம்' என்றே கூறுகிறது. தோரமானனும் அவனது மகன் மிகிராகுலாவும் சைவசமயத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் தமிழர்களாக இருக்கவாய்ப்பில்லை. வட இந்தியர்களாகவே இருக்கவேண்டும். ஆப்கானிஸ்தானில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள் சின்னங்கள் யாவும் இந்து பௌத்த அடையாளங்களையே பிரதிபலிக்கின்றன.

ஆப்கனிஸ்தானிலுள்ள இந்து குஷ் மலை, ஆப்கானிஸ்தான் இந்துக்களின் பூர்வீகப் பிரதேசம் என்பதையே பறைசாற்றுகிறது. ஆப்கானிஸ்தான் 1876 வரை இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்தது. பிரித்தானி யர்களே ஆப்கானிஸ்தானை இந்தியாவிலிருந்து பிரித்தனர் சேர். மோர்ட்டிமெர் (Sir Mortimer) என்ற இராஜதந்திரியே ஆப்கானிஸ்தானை இந்தியாவிலிருந்து பிரித்தார்; இவர் பிரித்த எல்லை ருண்டாஸ் லைன் (Dundas Line) என அழைக்கப்படுகிறது. 1919 இல் பிரிட்டிஷார் ஆப்கானிஸ்தானுக்கு சுதந்திரம் வழங்கியபோது, பிரிட்டிஷ் இந்தியாவிடமிருந்தே (British India) ஆப்கானுக்கு சுதந்திரம் வழங்கியதாகவே பிரிட்டிஷாரின் ஆவணங்களில் பதிவுகள் உள்ளன. ஆப்கான் சுதந்திர உடன்படிக்கை இந்தியாவின் ராவல் பிண்டி நகரில் வைத்தே கைச்சாத்திடப்பட்டது; இதன் காரணமாக இந்த உடன்படிக்கை ராவல் பிண்டி ஒப்பந்தம் என அழைக்கப்படுகிறது. இப்போது ராவல் பிண்டி பாகிஸ்தானுக்குள் சென்றுவிட்டது.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா தனது படைகளை வெளியேற்ற தொடங்கியதையடுத்து ஆப்கனிஸ்தான் மீண்டும் தலிபான்களிடம் வீழ்ந்துவிட்டது. உலகில் மிக நீளமான 177 அடி புத்தர் சிலை தலிபான்களால் ஏற்கனவே தகர்க்கப்பட்டுவிட்டது. அமெரிக்க விமானம் புறப்படும் சமயத்தில் தமது உயிரையும் பொருட்படுத்தாது விமானத்தில் தொங்கிக்கொண்டாவது எங்காவது ஓடித்தப்பிவிட வேண்டுமென ஆப்கானியர்கள் ஓடும் காணொலி தலிபான்களின் கொடுங் கோல் ஆட்சியை அப்பட்டமாக எடுத்துக்காட்டுகிறது.

ஆப்கானிஸ்தானில் 1970 ஆம்ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி 7 இலட்சமாக இருந்த இந்துக்களின் சனத்தொகை தற்போது வெறும் 50 பேராகச் சுருங்கிவிட்டது. ஆப்கானிஸ்தானில் தற்போது 50 இந்துக்களும் ,650 சீக்கியர்களும் உள்ளதாக 'இண்டிபெண்டன்'பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இவர்களை இந்தியாவுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது; ஆப்கானிஸ்தானிலுள்ள முஸ்லிம்களையும் அழைத்துவருவதற்கு இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை முஸ்லிம்கள் தலிபான்களின் ஆட்சியை வரவேற்கவில்லை என்பதை முஸ்லிம் ஊடகவியலாளர்களின் முகநூல் பதிவுகள் எடுத்துக்காட்டுகின்றன; அத்துடன் இஸ்லாமிய நாடான பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா வெளியேறியதற்கு கண்டனம் தெரிவித்திருக்கிறார்; ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறுவதற்காக வரிசையில் காத்திருக்கும் பாகிஸ்தான் பிரஜைகளின் படத்தை 'ஏ.எவ்.பி' செய்தி ஸ்தாபனம் வெளியிட்டுள்ளது. சவூதியும் ஆப்கானிஸ்தானிலிருந்த தனது பிரஜைகளை திரும்ப அழைத்துள்ளது; ஆக மொத்தத்தில் தலிபான்களின் மீள்வருகையை முஸ்லிம்களே விரும்பவில்லை.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களால் 'ஷரீஆ' சட்டம் அமுல்படுத்தப்படுகிறது. 'ஷரீஆ' ஆட்சியிலிருந்து தப்புவதற்காகவே ஆப்கான் மக்கள் விமானத்தில் தொங்கிக்கொண்டு தப்பியோடி வீழ்ந்து மரணிக்கின்றனர்; இப்படிப்பட்ட ஒரு நிலையில் இலங்கையிலும் 'ஷரீஆ' சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் கூறிவருவது இலங்கையையும் இன்னொரு ஆப்கானிஸ்தானாக மாற்றவா என்ற அச்சம் ஏனைய மதங்களைச் சேர்ந்த மக்கள் மத்தியில் இயல்பாகவே ஏற்படுகிறது.

ஏனைய இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களையும் தங்களுடன் இணைந்து மேற்குலகுக்கு எதிராக போராட முன்வருமாறு தலிபான்கள் அழைப்பு விடுத்துள்ளனர். தலிபான்களின் மீள்வருகை முழு உலகுக்கும் அச்சுறுத்தல் என்றுதான் சொல்லவேண்டும்.

தலிபான்களின் மீள்வருகையைத் தொடர்ந்து ஐ.நா. பொதுச்சபை அவசரமாக கூடியுள்ளது. இது தொடர்பில் ஐ.நா.வும் சர்வதேசமும் எடுக்கப்போகும் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்பதே இப்போது அனைவர் மத்தியிலும் உள்ள மிகப்பெரிய கேள்வி. ■

---

# பூக்களே,

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதே நகைச்சுவைக்கு முன்னர் சிரிக்காத செல்லத்துரை அண்ணை இப்பொழுது தன்னை மறந்து, வாய்விட்டு சிரித்தார். நான் தொடர்ந்தேன். "அன்று விரிந்த ஆண்பூவை பறித்து, அதன் இதழ்களை அகற்றினால் மகரந்தப்பை துலக்கமாகத் தெரியும். அதை பெண்பூவில் ஒத்திவிடலாம். பூரணமான விளைவைப் பெற, ஒரு சிறிய தூரிகையால் மகரந்தப் பையை வருடினால் மகரந்த மணிகள் தூரிகையின் முடியில் ஒட்டிக்கொள்ளும். அதை பெண் பூவின் குறியில் தடவிவிடலாம். புடலையின் பூக்கள் இரவில் விரிவதால் மகரந்தமணிகள் வெய்யில் வெப்பத்துக்கு காய முன்னர் அதிகாலையிலேயே இதைச் செய்யவேண்டும்."

"மெய்யாவோ? வயதுபோனநேரத்திலை, அதுவும்விடியக்காலமை எழும்பி இதைச் செய்யச் சொல்லுறாய்"எனக் கண் சிமிட்டிய செல்லத்துரை அண்ணை, கத்தரி, மிளகாய், வெண்டிப் பாத்திக்கு என்னைக் கூட்டிச் சென்றார். அவர் அங்கு என்ன கேட்கப் போகிறார் என்று எனக்குத் தெரியும். எனவே நான் சொல்லத் துவங்கினேன். "கத்தரி, வெண்டி, தக்காளி, மிளகாய் மற்றும் பயத்தை, அவரை எல்லாம் இருலிங்கப் பூக்களைக் கொண்டிருக்கும். இவற்றில் பெண்குறியும் அதைச்சுற்றி மகரந்தப்பைகளும் ஒரே பூவில் இருக்கும். இதனால் சுலபமாக மகரந்தச் சேர்க்கை நடந்து பிஞ்சு பிடிக்கும்" "வீட்டோடை மாப்பிளை எண்டு சொல்லன்"என என்னுடைய பகிடியைத் திரித்து, எனக்கே மடைமாற்றினார் செல்லத்துரை அண்ணை.

இப்படியாக பலதும்பத்தும் பேசி செடிகொடிகளுடன் உறவாடிக் கொண்டிருந்த எங்களை தங்கம்மா அக்கா சாப்பிட அழைத்தார். சும்மா சொல்லப்படாது. நண்டுக் கறியுடன் இறால் பொரியல், அதற்குத் தோதாக வறட்டல் பருவத்தில் நல்லெண்ணை விட்டு இறக்கிய பயத்தங்காய், உள்ளி மிளகு சீரகம் குத்திப் போட்டு வைத்த பருப்பு, முருங்கையிலை போட்ட தேங்காய் பால் சொதி என தங்கம்மா அக்கா அமர்க்களப்படுத்தி இருந்தார். வயிறு முட்ட சாப்பிட்டு, மிஞ்சிய நண்டுக் கறியையும் வாங்கிக் கொண்டே வீடு வந்து சேர்ந்தேன்.


இதன் பின்னர் செல்லத்துரை அண்ணையிடமிருந்து எந்தவித அலைபேசி அழைப்பும் வரவில்லை.

ஒருநாள், செல்லத்துரை அண்ணையை கோவிலில் சந்தித்தேன். "விடியக் காலமை எழும்பின கையோடை நீ சொன்னதுதான் எனக்கு வேலை. பூக்களுக்கு கலியாணம்! நிறையப் பிஞ்சு பிடிக்குது" என்றார் வாயெல்லாம் பல்லாக. "இதில் பெரிய சூக்குமம் எதுவுமில்லை. மரம் ,செடி ,கொடிகள் எல்லாம் மனிதனின் நண்பர்களே. அவற்றை எப்படி வழிப்படுத்துகிறோம் என்பதில்தான் நமது வெற்றி அடங்கி இருக்கிறது"என்றேன் நான்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணங்களின் ரயில் 3

விறுவிறுப்பான திகில் சித்திரக் கதை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதிகளை மீறிய 186 பேர் கைது!

கொழும்பு, ஓக.22

தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமை தொடர்பில் நேற்று சனிக்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் 186 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரை 55 ஆயிரத்து 842 பேர் தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவை தவிர மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் மற்றும் மேல் மாகாணத்துக்குள் வாகனங்கள் பிரவேசிக்கின்ற 12 இடங்களில் 735 வாகனங்களும் அவற்றில் பயணித்த ஆயிரத்து 261 நபர்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இதன்போது மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகளை மீறி மேல் மாகாணத்திலிருந்து வெளியேற அல்லது மேல் மாகாணத்திற்குள் பிரவேசிக்க முற்பட்ட 191 வாகனங்களில் பயணித்த 471 நபர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

எனினும் பொலிஸாரின் சோதனைகளின் பின்னர் 787 வாகனங்களில் பயணித்த ஆயிரத்து 437 பேர் மேல் மாகாணத்துக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

# வீரியம் கொண்ட "எப்சிலன்" இலங்கையில் பரவும் ஆபத்து

கொழும்பு, ஓக.22

**அதி வீரியம் கொண்டதும் தடுப்பூசிகளுக்கு கட்டுப்படாததுமான "எப்சிலன்" கொவிட் வைரஸ் திரிபு விரைவில் இலங்கைக்கு பரவும் ஆபத்து இருப்பதாக மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**



நான்காவது கொரோனா அலையில் பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் இந்த வைரஸ் திரிபு கண்டறியப்பட்டமையால், விரைவில் இது இலங்கைக்குள் நுழையும் ஆபத்து இருப்பதாக மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எப்சிலன் வைரஸ் திரிபின் புதிய மூன்று பிறழ்வுகள் உருவாகியுள்ளதாக வொஷிங்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சி அறிக்கை தெரிவித்துள்ளது. இது தற்போதுள்ள தடுப்பூசிகளின் எதிர்ப்பு சக்தியை 70 சதவீதம் வரை பலவீனப்படுத்துகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த எப்சிலன் வைரஸ், கலிபோர்னியா வகை எனப்படும் மூன்று பிறழ்வுகளை கொண்டுள்ளது. இது முதன்முதலாக கலிபோர்னியாவில் கண்டறியப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து அமெரிக்காவின் நியூயோர்க் மற்றும் பாகிஸ்தானின் லாகூரிலும் அடையாளம் காணப்பட்டது.

தற்போது இந்தக் கொடூர வைரஸ் திரிபானது இமாச்சலப் பிரதேசம் வழியாக இந்தியாவுக்கும் பரவியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)



# கொரோனாப் புள்ளி விவர தரவுகளில் முரண்பாடுகள்

கொழும்பு, ஓக.22

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானோர் மற்றும் இறப்புகள் தொடர்பாக வெளியிடப்பட்ட புள்ளி விவரத் தரவுகளில் சில முரண்பாடுகள் உள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது

தொற்று நோயியல் பிரிவால் வெளியிடப்பட்ட புள்ளி விவரத் தரவுகளில், கம்பஹா மாவட்டத்திலும், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் உள்ள சில மாவட்டங்களிலும் முரண்பாடுகள் இருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.

அவற்றை முடிந்தவரை விரைவாகச் சரி செய்து, சரியான புள்ளி விவரத் தரவுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)

# பிணை முறி மோசடி வழக்கு செப்ரெம்பர் விசாரணைக்கு

கொழும்பு, ஓக.22

மத்திய வங்கி பிணை முறி மோசடி நடவடிக்கை விவகாரத்தில் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 10 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றின் சிறப்பு ட்ரயல் அட்பார் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மத்திய வங்கியில் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி நடத்தப்பட்ட மூன்றாவது பிணை முறி ஏலத்தின் போது இடம்பெற்ற மோசடி ஊடாக 15 பில்லியன் ரூபா அரசுக்கு நட்டம் ஏற்படுத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்கே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த நிலையில், நாட்டில் நிலவும் கொவிட் நிலைமை காரணமாக அது செப்ரெம்பர் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேல் நீதிமன்றால் சிறப்பு அறிவித்தல் ஒன்று காட்சிப்படுத்தப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா தலைமையில் நாமல் பண்டார பலல்லே மற்றும் ஆதித்ய பட்டபெத்தி ஆகிய நீதிபதிகளை உள்ளடக்கிய ட்ரயல் அட்பார் நீதிமன்றமே இவ்வாறு அறிவித்துள்ளது.

இந்த வழக்கில் 3 ஆம் பிரதிவாதி அர்ஜுன மகேந்திரன் மற்றும் 9 ஆம் பிரதிவாதி அஜான் புஞ்சி ஹேவா ஆகியோர் வெளிநாடுகளில் உள்ளனர். அத்துடன் பேப்பசுவல் ட்ரசீஸ் நிறுவனமும் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ளது. (எ-இ)

# சீதாவக்க எல்லையில் சோதனை

கொழும்பு, ஓக.22

சப்ரகமுவ மாகாணத்திலிருந்து மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்கும் சகல வாகனங்களும் அவிசாவளை சீதாவக்க மாகாண எல்லையில் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து நேற்று இந்தச் சோதனையை முன்னெடுத்தனர்.

எனினும் நேற்று ஏராளமான வாகனங்கள் மேல் மாகாணத்துக்குள் நுழைந்தமையை அவதானிக்க முடிந்தது. அதே நேரம், அனுமதிப் பத்திரங்கள் இன்றி மேல்மாகாணத்திற்குள் பிரவேசிக்க முயன்ற சில வாகனங்களை பொலிஸார் திருப்பி அனுப்பியுள்ளனர்.

அனுமதிக் கடிதங்கள் உள்ள வாகனங்கள் மட்டுமே மேல்மாகாணத்திற்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. (எ-இ)

# முத்துக்கள் மீட்பு 7 பேர் கைது

கொழும்பு, ஓக.22



கம்பளையில் வாகனம் ஒன்றில் பயணித்தவர்களிடம் இருந்து 3 முத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொரலுமங்கட பிரதேசத்தில் வாகனத்தில் பயணித்த 7 பேரிடம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் இவை மீட்கப்பட்டுள்ளன. வாகனத்தில் பயணித்த 7 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 23 முதல் 46 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# இலங்கைக்கு வருவோருக்கு புதிய விதிமுறை அறிவிப்பு!

கொழும்பு, ஓக.22

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருவோருக்குப் புதிய சுகாதார வழிகாட்டல்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் ஒவ்வொருவரும் விமான நிலையத்தில் வைத்தே பீ.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன், பரிசோதனை முடிவுகள் கிடைக்கும் வரை தனிமைப்படுத்தலுக்காக தீர்மானிக்கப்பட்ட விடுதி அல்லது நிலையத்தில் தங்க வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

முழுமையாக தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்கள், பரிசோதனை முடிவில் கொரோனா தொற்றாளர் அல்ல என உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டியதில்லை எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாத ஒருவர், பரிசோதனையில் கொரோனாத் தொற்றாளர் அல்லர் என உறுதிப்படுத்தப்பட்டாலும், கட்டாயமாக 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள புதிய வழிகாட்டல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுமானங்கள் முடிந்தும் தண்ணீருக்கு தட்டுப்பாடு!

## ஒதியமலை மக்கள் கவலை

**முல்லைத்தீவு, ஓக.22**

**முல்லைத்தீவு ஒதியமலைக் கிராமத்துக்கு குடிதண்ணீர் வழுங்க அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும், தண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்படாததால் குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளோம் என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**



ஒதியமலைக் கிராமத்தில் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள 80 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கென கடந்த ஆட்சிக் காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி சகல கட்டுமான வேலைகளும் நிறைவடைந்துள்ளன. எனினும், குடிதண்ணீரைப் பெற முடியவில்லை. பெருமளவு நிதியில் தொடங்கப்பட்ட குடிநீர்த் திட்ட வேலைகள் நிறைவடைந்தும் மக்கள் பயன்பாட்டுக்கு ஒப்படைக்காமை தொடர்பாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, மிகவிரைவில் குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரைக் கோருகின்றனர். (து-13)

## கடத்தலில் ஈடுபடும் மீனவர்களின் மீன்பிடி அனுமதியை ரத்துச்செய்க

### கொரோனா பரவலை தடுக்க இப்படி ஆலோசனை

தலைமன்னார், ஓக. 22

கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்துவரும் நிலையில், மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்கள் இந்தியர்களுடன் தொடர்புகளைப்பேணி கடத்தல் குற்றவாளிகளாகக் காணப்பட்டால், அவர்களின் கடற்றொழில் அனுமதிப்பத்திரங்களை குறிப்பிட்ட காலத்துக்கு இடைநிறுத்த வேண்டும் என்று மன்னார் மாவட்டச் செயலகத்தில் கொரோனா தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் கொரோனா தொடர்பான கூட்டம் துறைசார்ந்த அதிகாரிகளுடன் அண்மையில் நடைபெற்றது.

அதன்போது, மன்னார் மாவட்டம் இந்தியாவுக்கு அண்மித்துள்ளதால் மன்னார் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவோர் இந்திய மீனவர்களுடன் நெருங்கிப்பழகும் சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுகின்றது. சட்டவிரோத கடத்தல் தொழிலில் ஈடுபட்டுவரும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

இதனால் கொரோனாத்தொற்று வேகமாகப்பரவும் அபாயமும் காணப்படுகின்றது. ஆகவே சட்டவிரோத செயற்பாட்டில் எமது மீனவர்கள் இந்திய மீனவர்களுடன் இணைந்து செயற்பட்டு நீதிமன்றில் குற்றவாளிகளாகக் காணப்படும் பட்சத்தில் பொலிஸார் குற்றவாளிகளின் விவரங்களை கடற்றொழில் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். அத்தகையவர்களின் கடற்றொழில் அனுமதிப்பத்திரங்களை கடற்றொழில் திணைக்களம் தடை செய்யவேண்டும். என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (து-60)

நட்டாங்கண்டல் மருத்துவமனையில்

## அம்புலன்ஸ் சாரதி இன்மையால் சிரமம்

முல்லைத்தீவு,ஓக.22

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் பிரதேச மருத்துவமனைக்கு நோயாளர் காவுவண்டிக்கான பதில்கடமை சாரதி இன்மையால் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

குறித்த மருத்துவமனைக்கு மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட மக்கள் மட்டுமன்றி வேறு இடங்களைச் சேர்ந்த மக்களும் மருத்துவத் தேவைகளுக்காக வருகை தருகின்றனர்.

குறித்த மருத்துவமனைக்கு ஒரு நோயாளர் காவுவண்டி உள்ள போதும், அதன் சாரதி விடுப்பில் செல்லும் வேளை பதில் கடமை சாரதி இன்மையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மல்லாவி ஆதார மருத்துவமனையில் நோயாளர் காவுவண்டிகள் உள்ளபோதும், நட்டாங்கண்டல் மருத்துவமனையின் நோயாளர் காவுவண்டியின் சாரதி விடுப்பில் செல்லும் காலத்தில் குறித்த நோயாளர் காவுவண்டி மல்லாவி ஆதார மருத்துவமனையில் விடப்படுகின்றது. என்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் நட்டாங்கண்டல் பிரதேச மருத்துவ அதிகாரி தெரிவிக்கையில்,

"எமது அனுமதி பெறப்படாமலேயே குறித்த நோயாளர் காவுவண்டி மல்லாவி ஆதார மருத்துவமனையில் விடப்படுகிறது. இன்றைய தினம் (நேற்றுமுன்தினம்) கொவிட்19 தடுப்பூசி பெற்றுக்கொள்ள மக்கள் வருகை தந்திருக்கும் நிலையில் மக்களுக்கான ஒவ்வாமை தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுமிடத்து நோயாளர் காவுவண்டி மருத்துவமனையில் கடமையில் ஈடுபடுத்தப்படவில்லை.

எமது மருத்துவமனையின் சாரதி விடுப்பில் செல்லும் சந்தர்ப்பங்களில் பதில் கடமை சாரதி இன்மையாலும் நோயாளர் காவுவண்டி மல்லாவி ஆதார மருத்துவமனையில் விடப்படுவதாலும் பிரதேச மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்றார். (ஐ-19)

## 'சூம்' கற்றலுக்காக மாணவர்களுக்கு உதவி

கொடிகாமம்.ஓக.22

போக்கட்டி அ.த.க.பாடசாலை மாணவர்களது சூம் கல்விச் செயற்பாட்டுக்கு இலவச சிம் அட்டையும், அதனோடு இணைந்த இலவச பக்கேஜ்சும் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

டயலொக் நிறுவனத்தால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. மாதாந்தம் 10 ஜி.பி. வரையிலான இலவச சூம் பக்கேஜ் மூன்று மாதங்களுக்கு பயன்படுத்தக்கூடிய வகையில் வழங்கப்பட்டது

தென்மராட்சியில் பின்தங்கிய 23 பாடசாலைகளுக்கு மேற்படி செயற்திட்டத்தை டயலொக் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. (ஐ-159)





முல்லைத்தீவு மாவட்டத்தில்

## சேதனப்பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் செயற்பாடு

முல்லைத்தீவு, ஓக.22

விவசாயிகள் தமக்குத் தேவையான சேதனப் பசளையை தாமே உற்பத்தி செய்துகொள்வதை ஊக்குவிக்கும் முகமான விழிப்புணர்வு செயற்பாடொன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கை மத்திய விவசாய திணைக்களம் மற்றும் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டது. எதிர்வரும் காலபோகத்தில் மேற்கொள்ளப்படவுள்ள செய்கைகளுக்கு இரசாயனப் பசளைப் பயன்பாட்டை தவிர்த்து சேதனப் பசளையை தாமே உற்பத்தி செய்து பயன்படுத்துவதற்கு வழிகாட்டும் நோக்கில் இந்த விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த விழிப்புணர்வு பரப்புரைப் பணிகள் ஒலிபெருக்கிகள் பொருத்திய நடமாடும் வாகனங்களுடன் முன்னெடுக்கப்பட்டதுடன், இதன்போது சேதனப் பசளை தயாரிப்பது தொடர்பான விளக்கங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பதில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் ஜாமினி சசீலன், விவசாயப் போதனாசிரியர்கள் மற்றும் பாட விதான உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கினர். (ஐ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணல் அகழ்வதற்கு வழங்கிய அனுமதியை மீளப்பெறுங்கள்

## ஒட்டுசுட்டான் மக்கள் கோரிக்கை

**வன்னேரிக்குளம், ஓக. 22**

**கனகராயன் ஆற்றில் முறையற்ற விதத்தில் மணல் அகழ்வு நடைபெறுவதன் காரணமாக சூழல் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.**

அம்பகாமம், புலிமச்சிநாதகுளம் பகுதிகளில் மணல் அகழ்வதற்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் அனுமதி வழங்கியுள்ளது. ஆற்றிலிருந்து முறையாக மணல் அகழ்வை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளபோதிலும் மணல் அகழ்வில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆற்றின் இரு பகுதியிலும் பெரும் குவாரிகள் அமைத்து முறையற்ற விதத்தில் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர். அதனால், ஆற்றுக்கு அருகில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்ற வயல் நிலங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று அம்பகாமம் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மணல் அகழ்வுக்கான அனுமதி சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ளபோதிலும் மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள், உரியபொறிமுறையின்றி, தாறுமாறாக மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர். கனகராயன் ஆற்றின் இரு பகுதிகளிலும் உள்ள மரங்கள் கூடுதலாக மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களால் அழிக்கப்பட்டு வருகின்றன. எனவே, மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை இரத்துச்செய்ய வேண்டும் என்று அம்பகாமம் மக்கள் பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (கு-13)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

22.08.2021



மண்ணுலகில் 03 - 03 - 1948

இறைவனடியில் 23 - 07 - 2021

அமரர் திருமதி சிவபாதம் இராஜேஸ்வரி

திதி வெண்பா

நல்லதோர் பிலவ வருட நலமான ஆடித்திங்கள்
புகழ்பெற்ற ஆடி வெள்ளியில் பூர்வபக்க பூரணைத் திதி
மகாராணி என வாழ்ந்தவராம் இராஜேஸ்வரி என்னும் புண்ணியவதி
சிவபேறு பெற்ற திருநாளாம்.

எமது குலதெய்வமும் அன்புக்குரிய தாயாரான அமரர் சிவபாதம் இராஜேஸ்வரி அவர்கள் இவ்வுலகில் நல்வாழ்க்கை வாழ்ந்து கடந்த (23.07.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த போது நேரடியாகவும், தொலைபேசி மூலமும், சமூக வலைத் தளங்கள் மூலமாகவும் தொடர்பு கொண்டு எம்முடன் துயர்பகிர்ந்து கொண்டோருக்கும், அனுதாபக் கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளிற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொள்ள உதவி ஒத்தாசைகள் வழங்கிய உறவினர்கள், நண்பர்கள் ஊரவர்கள் மற்றும் உத்தியோகத்தவர்களிற்கும், மரணக்கிரியைகளிலும் இறுதி யாத்திரையிலும் பங்கு கொண்ட அன்பு உள்ளங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவரது அந்தியேட்டிக்கிரியைகள் 20.08.2021 வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனிதத்தீர்க்கரையில் நடைபெற்றன. இன்று (22.08.2021) ஞாயிற்றுக்கிழமை வீட்டுக் கிருத்திய கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் தற்போதய Covid - 19 நோயின் தாக்கம் கருதி குடும்ப அங்கத்தவர்களுடன் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மிகவும் தாழ்மையுடன் அறியத்தருகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்
021 224 0901


# 209 மருத்துவர்களுக்கு இதுவரையில் தொற்று

கொழும்பு, ஓக. 22

நாடு முழுவதும் 209 மருத்துவர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. தற்போது 30 முதல் 40 மருத்துவர்கள் வரை சிகிச்சை பெற்று வருகின்றனர், ஒரு மருத்துவர் அவசர சிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மூன்று மருத்துவர்கள் உயிரிழந்துள்ளனர். கேகாலை பொது சுகாதார ஆய்வாளர் மற்றும் ராகம மருத்துவமனையின் இரண்டு மருத்துவர்கள் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (எ-இ)

# சந்தைகளில் தேங்கியுள்ள 15 இலட்சம் கிலோ காய்கறி

கொழும்பு, ஓக.22

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு காரணமாக பேலியகொடை மெனிங் சந்தையில் நுகர்வோர் இன்றி பெருமளவு மரக்கறிகள் தேங்கியுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மெனிங் சந்தையின் வர்த்தக மற்றும் ஒன்றிணைந்த பொருளாதார மத்திய நிலைய சங்கத்தின் பொருளாளர் நிமல் அத்தனாயக்க இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

சந்தையில் சுமார் 15 இலட்சம் கிலோகிராம் மரக்கறிகள் தேங்கிக் கிடக்கின்றன என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# அரசின் திட்டமிடலின்மையால் மக்களுக்கே பெரும் பாதிப்பு!

## *செல்வம் எம்.பி. விசனம்*



வவுனியா, ஓக. 22

இலங்கை அரசு திட்டமிடலின்றி தான்தோன்றித்தனமாக ஒவ்வொரு செயற்பாட்டையும் முன்னெடுப்பதால் பொதுமக்கள் அவதிக்குள்ளாகின்றனர் என்று, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடு முடக்கப்படுகின்றது என்று அரசு திடீரென விடுத்த அறிவிப்பால் நகர்ப் பகுதிகளில் மக்கள் அதிகளவில் குவிந்து பொருள்களைக் கொள்வனவுசெய்வதில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தநிலையில், அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

கொரோனாத் தொற்று அதிகரித்த போதே மருத்துவர்களும் சுகாதாரத் தரப்பினரும் இணைந்து நாட்டை முடக்கி கொரோனாவைக் கட்டுப்படுத்துங்கள் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தனர். எனினும், இது தொடர்பில் அசட்டையாக இருந்த அரசு, வேண்டா வெறுப்பாக எத்துயர் ஏற்பட்டாலும் அதனை மக்களே எதிர்கொள்ளட்டும் என்ற மக்கள் விரோத சிந்தனையுடன் திடீரென நாட்டை முடக்குவதாகத் தெரிவித்திருந்தது.

இதன் காரணமாக பொதுமக்கள் பலரும் நகர்ப்பகுதியில் அதிகளவில் ஒன்று கூடியிருந்தனர். இது கொரோனாத் தொற்றை நிறுத்துவதற்கு பதிலாக அதிகரிப்புக்கே வழிவகுத்துள்ளது.

வங்கிகள், நகை அடகு வைக்கும் இடங்களில் மக்கள் அதிகளவில் காணப்பட்டனர். வர்த்தக நிலையங்களில் நீண்ட வரிசை காணப்பட்டது. இது பாரதூரமான விளைவை ஏற்படுத்தும்.

அரசு, ஒரு நாள் தவணை வழங்கி நாட்டை முடக்கியிருக்கலாம். திட்டமிடல் இல்லாத அரசால் மக்களே தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றனர் - என்று தெரிவித்தார். (கு-110)



# சீனிக்குள் ரவை மக்கள் குற்றச்சாட்டு

வவுனியா, ஓக. 22

வவுனியாவில் சீனிக்குள் ரவை மா கலந்து விற்பனை செய்யப்படுகின்றது என்று நுகர்வோர் குற்றம் சாட்டுகின்றனர்.

நாடு முடக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில், மக்கள் வர்த்தக நிலையங்களில் நேற்றுமுன்தினம் குவிந்து பொருள்களை கொள்வனவு செய்வதில் ஈடுபட்டிருந்தனர். சீனியின் விலை அதிகரித்துள்ள நிலையில் சில வர்த்தக நிலையங்களில் சீனிக்குள் ரவை கலந்து விற்பனை செய்யப்பட்டமை தெரிய வந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் வவுனியா நுகர்வோர் அதிகார சபைக்கு நுகர்வோர் சிலர் முறைப்பாடு செய்யவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையற்ற செயற்பாடுகளில் சுகாதார, கல்வித் துறையினர்

## ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஓக.22**

**வடக்கு மாகாணச் சுகாதாரத் துறையும், கல்வித் திணைக்களமும் செய்கின்ற சட்டவிரோத செயற்பாடுகளை அனைத்துத் தரப்பினரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது மோசமானதொரு செயற்பாடு. எனவே, இத்தகைய செயற்பாடுகளால் ஏற்படப் போகும் விளைவுகள் அனைத்துக்கும் வடக்கு மாகாண சுகாதாரத் துறையும், வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் தான் பொறுப்பேற்க வேண்டும்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாணவர்களை முறையற்ற வகையில் பாடசாலைகளுக்கு அழைக்கும் எந்தவொரு சுற்றறிக்கையும் வெளியிடப்படவில்லை. மாணவர்களைப் பாதுகாக்கும் வகையில்தான் பாடசாலைகள் பூட்டப்பட்டிருக்கின்றன.

பாடசாலைகளுக்குப் பெற்றோர்களையோ அல்லது வேறு எவரையுமோ அழைத்து எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாது.

கொவிட் தொற்றுக் காரணமாக ஒருவருட காலமாகப் பாடசாலைகள் திறக்கப்படவில்லை. கல்வி சுமுகமாக வழங்கப்படவில்லை. இந்தநிலையில் குறிப்பிட்ட தொகை மாணவர்கள் மாத்திரமே ஒன்லைன் கல்வியைப் பெற்றிருக்கின்ற நிலையில் அந்த வசதியைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்களுக்காகப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு பாடத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் நிலையறி பரீட்சையை நடத்துவது சிறுபிள்ளைத்தனமான விடயம். இது மாணவர்களின் உளவியலுடன் விளையாடுகின்றதொரு செயற்பாடு.

மாணவர்களுக்கான கற்பித்தலையே சுமுகமானதொரு சூழலில் மேற்கொள்ள முடியாத நிலையில் ஒன்லைன் மூலமாகவோ அல்லது வினாத்தாள்களைப் பெற்றுக்கொண்டுசென்று வீட்டிலே செய்வதன் மூலமாகவோ மாணவனின் நிலையை அறிய முடியுமா? என்பது தான் நாம் முன்வைக்கும் கேள்வி. ஆகவே, கற்றலைச் சுயமாக மேற்கொண்டு பரீட்சை எழுதும் மாணவனின் புள்ளிநிலை குறைக்கப்படும்போது அந்தப் பிள்ளையின் உளவியல் எவ்வாறு இருக்கப் போகின்றது? என்பதைச் சிந்திக்க முடியாத கல்விச் சமூகமகத்தான் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் காணப்படுகின்றது. இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மன்னார் மாவட்டத்தில் இயங்கிவரும் தேசியப் பாடசாலையொன்றில் தற்போது தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு நடந்து கொண்டிருக்கின்றது.

அதேவேளை, அதே பாடசாலையில் மாணவர்களை அழைத்தும், ஆசிரியர்கள் சிலரை வரவேண்டும் என்று வற்புறுத்தி அழைத்தும் கற்பித்தல் இடம்பெறுகிறது. இதற்கெதிராக இதுவரை சுகாதாரத் துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. -என்றார். (து)

# கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.22

குழந்தைக் கவி வித்தகர் சபா அருள் சுப்பிரமணியத்தின் "பட்டறிவுப் பகிர்வு" என்ற கவிதை நூல் எதிர்வரும் 28 ஆம் திகதி "சூம்" செயலி ஊடாக வெளியிடப்படவுள்ளது.

ஒரு காலத்தில் மாதகல் மண்ணில் வாழ்ந்தவர்கள் இன்று அந்த மண்ணில் வாழ்ந்த தாகத்துடன் இடம்பெயர்ந்து மற்றும் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளின் ஏக்கத்தை இக் கவிதை நூல் வெளிப்படுத்தி நிற்கின்றது.

647 706 6123 என்ற "சூம்" ஊடாக இலங்கை நேரம் இரவு 7.30 மணிக்கு (கனடா நேரம் காலை 10 .ஐரோப்பிய நேரம் மாலை 4மணிக்கு) இணைந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-159)



# சிறுபோக நெல்லுக்கு உரிய விலை இல்லை

## செய்கையாளர்கள் கவலை

கிளிநொச்சி, ஓக. 22

சிறுபோக அறுவடை தற்போது நடைபெற்றுவரும் நிலையில், அறுவடைசெய்த நெல்லை உரிய விலைக்கு விற்பனை செய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது என்று நெற்செய்கையாளர்கள் கூறுகின்றனர்.

நாளாந்தக் கூலிக்கு நெல்லை உலரவிட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் பிற மாகாணங்களில் ஒரு மூடைக்கு 69 கிலோகிராம் நெல் உள்ளடக்கப்படும் நிலையில், எமது மாவட்டத்தில் ஒரு மூடைக்கு 75 கிலோகிராம் நெல் உள்ளடக்கப்படுகின்றது. அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடை முடிவுறும் தறுவாயிலேயே அரசு நெல் கொள்வனவை ஆரம்பிக்கின்றது. அறுவடை ஆரம்பிக்கும்பொழுது அரசு நெல் கொள்வனவு செய்வதில்லை. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பரந்தன் பகுதியில் அதிக எண்ணிக்கையில் விவசாயிகள் உள்ளனர். இரணைமடுவில் உள்ள நெல் தூய்மைப்படுத்தும் நிலையத்தைப் போன்று எமது பகுதிக்கு நெல்லை தூய்மைப்படுத்தும் இயந்திரம் ஒன்றை அரச அதிபர் பெற்றுதர நடவடிக்கை எடுக்கவேண்டும். -என்று கிளிநொச்சி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-316)

தென்மராட்சிப் பிரதேசத்தில்

# 12 குளங்களைப் புனரமைக்க பிரதேச செயலகம் பரிந்துரை

சாவகச்சேரி, ஓக. 22

தென்மராட்சிப் பிரதேசத்தில் கிராமியக் குளங்கள் புனரமைக்கும் திட்டத்தில், 12 குளங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்காக தென்மராட்சி பிரதேச செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன செழுமை தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாய பயன்பாட்டுக்கென தெரிவுசெய்யப்பட்ட கைதடி கமநல சேவைகள் நிலைய எல்லைக்குட்பட்ட கைதடி வடக்கு இடிகிடங்குக் குளம், நாவற்குழி கிழக்கு மலபார் மொட்டை ஆலடி அணைக்கட்டு, நாவற்குழி மேற்கு சித்திரவேலாயுதர் குளம், தனங்களப்பு அறுகுவெளிப் பிள்ளையார் கோவில்குளம், கைதடி தெற்கு வெட்டுத்துரவுக் குளம், மறவன்புலோ சாலா குளம் ஆகியவையும், சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய எல்லைக்குட்பட்ட கல்வயல் இல்வாரைக் குளம், தாவளை இயற்றாலை மாலிக்கிராய்குளம், வரணி வடக்கு சிவிலங்கிராய் குளம், மந்துவில் வடக்கு இலந்தைக்கிராய்குளம், கரம்பைக்குறிச்சி திக்கில் பெரியகுளம், சரசாலை தெற்கு கூனிக் கிராய்குளம் ஆகியவையும் புனரமைப்புக்காக முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (த-9)

# தேவாலயத்தில் நடத்தப்படும் வழிபாடுகள் இடைநிறுத்தம்

மன்னார், ஓக.22

மன்னார் மறைமாவட்டத்தில் கத்தோலிக்க தேவாலயங்களில் வழமையாக நடத்தப்படும் வழிபாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்த்து சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதற்கான ஒத்துழைப்பை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் மறைமாவட்ட ஆயரிடம், மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து வழிபாடுகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மாவட்டச் செயலர் மேலும் தெரிவிக்கையில், [illegible] அதிகரித்துவரும் இவ்வேளையில் அரசு மற்றும் சுகாதாரத் துறையினர் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு அனைவருக்கும் அறிவித்து வருகின்றனர். இந்த நிலையில் மன்னார் மறைமாவட்டத்தின் தேவாலயங்களில் நாளாந்த திருப்பலிகள் இடம்பெற்று வருவதுடன் மக்கள் அவற்றில் கலந்து கொள்வதில் ஆர்வம்காட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றும் நோக்குடன் தற்பொழுது தேவாலயங்களில் நடைபெறும் வழமையான மத வழிபாடுகளை உடன் இடைநிறுத்துமாறு மன்னார் ஆயரிடம் கோரிக்கை விடுத்திருந்தேன்.

இதனையடுத்து மன்னார் மறைமாவட்டத்திலுள்ள சகல ஆலயங்களிலும் மத வழிபாட்டு நிகழ்வுகள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. -என்றார். (ஐ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org